# பாடநூல்

## அரசியல் விஞ்ஞானம்: ஓர் அறிமுகம்

## (Introduction to Political Science)

எம்.ஏ.எம். பௌசர்

**Published by:**
**Centre for External Degrees and Professional Learning**
**South Eastern University of Sri Lanka**
**Oluvil.**
**2023**

**Centre for External Degrees and Professional Learning**

**South Eastern University of Sri Lanka**

**University Park, Oluvil, Sri Lanka.**

| | |
|---|---|
| **Title:** | **Introduction to Political Science** |
| **Author:** | **Prof. M.A.M. Fowsar** |
| | **Professor in Political Science** |
| | **Department of Political Science** |
| | **Faculty of Arts and Culture** |
| | **South Eastern University of Sri Lanka.** |
| **Type of Book:** | **Text Book** |
| **First Edition:** | **2023** |
| **ISBN:** | **978-955-xxx-xxx-x** |


**© 2023, South Eastern University of Sri Lanka**

All rights reserved. No part of this text book may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic or mechanical, photocopying and recording or otherwise without the prior permission of copyright owner and the author.

## முன்னுரை

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்பினை தொடர்கின்ற மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கில் ஒவ்வொரு பாட அலகுகளுக்கும் பாடநூல்களை வெளியிடும் திட்டம் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வெளிவாரி மாணவர்களுக்கான பாடநூல் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் அரசியல் விஞ்ஞானத்தினை பிரதான பாடமொன்றாக தெரிவு செய்துள்ள மாணவர்களுக்கு அரசியல் விஞ்ஞானக் கற்கை தொடர்பான அடிப்படை அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் இப்பாட நூல் வடிவமைக்கப் பட்டுள்ளது. இப் பாடநூல் அரசியல் விஞ்ஞானத்தின் முதலாம் வருட முதலாவது பருவத்தின் பாடவிதானத்தினை தழுவியதாகும்.

இந்நூல் மாணவர்களின் சுயகற்றலை இலகுபடுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதிப் பகுதியிலும் மாதிரி வினாக்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அத்தியாயங்களில் உள்ள விடயங்கள் தொடர்பான மேலதிக அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான உசாத்துணை நூல் விபரங்களும் தரப்பட்டுள்ளன.

இப்பாடநூலினை மாணவர்கள் தமது சுய கற்றலுக்காக பயன்படுத்துவதுடன் இந்நூலில் தரப்பட்டுள்ள மாதிரி வினாக்களைக் கொண்டு பயிற்சி பெறமுடியும். மதிப்பீட்டுப் பரீட்சைகளில் சிறந்த புள்ளிகளைப் பெறுவதற்கு இப்பாடநூல் உறுதுணையாக இருக்கும்.

இந்நூலினை எழுதி, வெளியிடுவதற்கு நிதியுதவியினை வழங்கிய இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்திற்கும் நூல் வெளியீட்டிற்கு உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**எம்.ஏ.எம். பௌசர்**
பேராசிரியர் - அரசியல் விஞ்ஞானம்
அரசியல் விஞ்ஞானத் துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில், #32360, இலங்கை.

## உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| முன்னுரை | i |
| உள்ளடக்கங்கள் | ii |
| பாடவிதானம் பற்றிய குறிப்புக்கள் | iii |
| அத்தியாயம் 01: அரசியல் விஞ்ஞானத்தின் இயல்பும் பரப்பும் | 01 |
| அத்தியாயம் 02: அரசு | 16 |
| அத்தியாயம் 03: அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள் | 33 |
| அத்தியாயம் 04: அதிகாரம், அதிகாரத்துவம், சட்டபூர்வத்தன்மை | 45 |
| அத்தியாயம் 05: அரசியல் கருத்தியல்கள் | 65 |
| அத்தியாயம் 06: அரசியல் நிறுவனங்கள் | 84 |
| அத்தியாயம் 07: குடியுரிமை | 99 |
| அத்தியாயம் 08: பிரதிநிதித்துவம், தேர்தல்கள், வாக்களித்தல் | 108 |
| அத்தியாயம் 09: கட்சிகளும் கட்சி முறைமையும் | 117 |
| அத்தியாயம் 10: சிவில் சமூகம் | 129 |
| மேலதிக வாசிப்புக்கான நூல்கள் | 139 |

## பாடவிதானம் பற்றிய குறிப்புக்கள்

**தலைப்பு** : அரசியல் விஞ்ஞானம்: ஓர் அறிமுகம்

**குறியீடு** : PSM 11013

**வருடம்** : முதலாம் வருடம்

**பருவம்** : முதலாம் பருவம்

**தரப்புள்ளி** : 03

### அறிமுகம்

அரசியல் விஞ்ஞானம் சமூக விஞ்ஞானப் பரப்பிலுள்ள ஒரு முக்கிய ஆய்வுத் துறையாகும். இவ்வாய்வுத் துறை குறித்த ஆரம்ப அறிவினை வழங்கத்தக்க சில முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இப்பாட அலகு வடிவமைக் கப்பட்டுள்ளது.

### நோக்கம்

அரசியல் விஞ்ஞானம் குறித்த தெளிவான புரிதலுக்கான அடிப்படை அறிவினை விருத்தி செய்வதே இப்பாட அலகின் குறிக்கோளாகும்.

### கற்றல் பெறுபேறுகள்

இப்பாட அலகினை மாணவர்கள் திறம்படக் கற்பதன் மூலம் அரசியல் விஞ்ஞானக் கற்கை குறித்த ஆரம்ப அறிவினைப் பெற்றுக் கொள்வர்.

### கற்றல் - கற்பித்தல் முறை

இப்பாட அலகுக்கான கற்றல் மற்றும் கற்பித்தல் முறை பின்வரும் இரு வழிமுறைகளை உள்ளடக்கியது:

**TL1** விரிவுரைகள்
**TL2** மாணவர்களின் சுயகற்றல்

## மதிப்பீட்டு முறை

இப்பாட அலகுக்கான மதிப்பீட்டு முறை பின்வரும் இரு வழிகளில் இடம் பெறும்:

| | | |
|---|---|---|
| இடைநிலை மதிப்பீடு | = | 40 புள்ளிகள் |
| பருவ இறுதிப் பரீட்சை | = | 60 புள்ளிகள் |
| **மொத்தம்** | = | **100 புள்ளிகள்** |

## இடைநிலை மதிப்பீட்டு முறை

இப்பாட அலகுக்காக இரண்டு தொடர் கருத்தரங்குகள் இடம்பெறும். இவ்விரு கருத்தரங்குகளின் போது இடை நிலை மதிப்பீட்டிற்கான ஒப்படையொன்று வழங்கப்படுவதுடன் இடைநிலைப் பரீட்சையொன்றும் நடத்தப்படும். ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் தலா 20 புள்ளிகள் விகிதம் மொத்தம் 40 புள்ளிகள் இடைநிலை மதிப்பீட்டுக்கு வழங்கப்படும்.

மாணவர்கள் தமக்கு வழங்கப்படுகின்ற ஒப்படையினை குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்து உரிய தினத்தில் சமர்ப்பிக்க வேண்டும். உரிய தினத்தில் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் குறித்த ஒப்படைக்கான புள்ளியினை இழக்க நேரிடும்.

ஒப்படைகளை தயாரிக்கின்றபோது தமக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத் தல்களை கவனமாக வாசித்துச் செயற்படவும். ஒப்படைகள் என்பது ஏற்கனவே இருக்கிற ஆவணங்களில் உள்ள விடயங்களை வரிக்கு வரி பிரதி பண்ணுவதாக இருக்கக்கூடாது. தகவல்களைத் திரட்டி உமது மொழி நடையில் தர்க்கரீதியாக எழுதுதல் வேண்டும்.

ஒப்படைகளுக்காக தகவல்கள் திரட்டிய உசாத்துணைகளை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். முற்றுமுழுதாகப் பிரதி பண்ணப்பட்ட ஒப்படைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதனை கவனத்திற்கொள்க.

சுயமாக, தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டு தயாரிக்கப்படும் ஒப்படை களுக்கே போதியளவு புள்ளிகள் வழங்கப்படும்.

**குறிப்பு:** இப்பாட நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்புக்களுடன் மாணவர்கள் மேலதிக தகவல்களைத் தேடிக் கற்றறிந்து கொள்வதன் மூலம் இப்பாடத்தில் மேலதிக தேர்ச்சியினை பெறமுடியும்.

# அத்தியாயம் - 01

# அரசியல் விஞ்ஞானத்தின் இயல்பும் பரப்பும்

**உள்ளடக்கங்கள்**


| | | |
|---|---|---|
| 1.1 | அரசியல் | 02 |
| 1.2 | அரசியல் விஞ்ஞானம் | 04 |
| 1.3 | அரசியல் விஞ்ஞானத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | 06 |
| 1.4 | அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பு | 08 |
| 1.5 | அரசியல் விஞ்ஞான அணுகுமுறைகள் | 11 |


## அத்தியாய சுருக்கம்

*சமூகத்தில் அதிகாரம் செயற்படுத்தப்படும் விதத்தினை அரசியல் என அழைப்பர். அரசியல் விஞ்ஞானம் என்பது அரசியல் செயன்முறையினை முறைப்படி அல்லது விஞ்ஞான ரீதியாகக் கற்கின்ற ஒரு பாடமாகும். சமூக அறிவியல் தொகுதியினுள் தனித்துவமான ஒரு கல்வித் துறையாக விளங்கும் அரசியல் விஞ்ஞானம், சுமார் 2000 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. புராதன காலத்தில் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற அறிஞர்களினால் முறைப்படி ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கல்வி, நவீன யுகத்தில் மக்கியவல்லி, ஜீன் போடின், குரோசியஸ், தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், ஜீன் ஜக்கியூஸ் ரூசோ, மொண்டஸ்கியூ போன்ற அறிஞர்களின் பங்களிப்புடன் ஒப்பற்ற வளர்ச்சியினைக் கண்டது. இதன்படி ஆரம்பம் முதல் இன்றுவரை உலகளவில் இடம்பெற்றுவரும் சமூக, அரசியல் மாற்றங்களுக்கேற்ப அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பிலும் ஆய்வு முறையியலிலும் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.*

## அத்தியாயத்தின் நோக்கம்

*அரசியல் விஞ்ஞானத்தினை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்கு இப்பாடம் குறித்த அடிப்படை அறிவினை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.*

## கற்றல் பெறுபேறுகள்

*இவ்வத்தியாயத்தினை மாணவர்கள் திறம்பட கற்பதன் மூலம் அரசியல் விஞ்ஞானத்தின் தோற்றம் - வளர்ச்சி, அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பு, அரசியல் விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் மற்றும் அணுகுமுறைகள் குறித்து தெளிவுகளைப் பெற்றுக்கொள்வர்.*

## 1.1 அரசியல்

அரசியல் என்பதனைக் குறிக்கும் ஆங்கிலப் பதம் 'Politics' ஆகும். Politics என்பது 'Polis' எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். Polis என்பது கிரேக்கத்தில் காணப்பட்ட நகர அரசுகளை (City State) குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. அரசியல் என்பது ஆரம்பத்தில் கிரேக்க நகர அரசுகளின் அலுவல்களை அல்லது விவகாரங்களைக் குறிப்பதாக அர்த்தப்படுத்தப்பட்டது. புராதன யுகத்தில் அரசியல் என்ற சொல்லினை பிரபல்யப்படுத்திய பெருமை அரிஸ்டோட்டிலை சாரும். இவர் 'அரசியல் (Politics)' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டதுடன், அரசியலை ஒரு முதுநிலை விஞ்ஞானம் (Master Science) எனவும் குறிப்பிட்டார்.

அரசியல் தொடர்பில் ஒரு பொதுவான கருத்து முன்வைக்கப்பட வில்லையாயினும் அரசியல் ஒரு சமூக(கூட்டு)ச் செயற்பாடு என வரையறுக்க முடியும். சமூகத்தில் குழு, கூட்டாகத் தீர்மானங்களை எடுப்பதற்கும் சமூகத்தில் சிதறிக் கிடக்கின்ற அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கும் அதிகாரத்தினைப் பேணிப்பாதுகாப்பதற்கும் அதிகாரத்தினைப் பிரயோகிப்பதற்குமாக இடம்பெறும் பலவிதமான செயற்பாடுகளே அரசியலாகும். அடிப்படையில் அரசியல் ஒரு நடைமுறைப் பிரயோகச் செயற்பாடாகும். பல்வேறு குழுக்கள் தமக்கிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை சமரசப்படுத்தி அதனூடாக மேற்கொள்ளும் கூட்டுத் தீர்மானச் செயற்பாடுகள் அரசியலாகும்.

அரசியலில் பின்வரும் நான்கு அடிப்படையான அம்சங்கள் உள்ளதாக மில்லர் (Miller) என்ற அறிஞர் குறிப்பிடுகிறார்.

கூட்டுச் செயற்பாடு: பொது அங்கத்துவத்தினை / நலன்களின் பரிமாற்றத்தினை உள்ளடக்கிய கூட்டுச் செயற்பாடுகளே அரசியலாகும். தனிநபர் செயற்பாடுகள் அரசியலாவதில்லை.

கருத்துக்களின் பல்வகைமை: அரசியல் என்பது கருத்துக்களின் / அபிப்பிராயங்களின் பல்வகைமையினைக் கொண்டது. அரசியலின் இலக்குகளும் வழிமுறைகளும் பல தன்மையான கருத்துக்களைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

வேறுபாடுகளை இணக்கப்படுத்துதல்: அரசியல் குழுக்களுக் கிடையிலான வேறுபாடுகளை சமரசத்தின் ஊடாக இணக்கப் படுத்துகின்ற செயன்முறையினை உள்ளடக்கியுள்ளது.

அதிகாரபூர்வ கொள்கை: அரசியல் கூட்டுத் தீர்மானங்களை உள்ளடக்கியதாகும். அரசியலில் இடம்பெறும் கூட்டுத் தீர்மானங்கள் அரசின் அதிகாரபூர்வ தீர்மானங்களாகும். அத்தீர்மானங்கள் அரசாங்கப் பொறிமுறையினூடாக அமுல்படுத்தப்படுகின்றன.

அன்ரூ ஹேவூட் (Andrew Heywood) என்ற அறிஞர் அரசியலின் பிரதான பண்புகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தி உள்ளார்:

அரசியல் ஒரு செயற்பாடாகும். அரசியல் செயற்பாடுகளைப் பற்றிக் கற்பது அரசியல் கல்வியாகும்.

அரசியல் ஒரு சமூகச் செயற்பாடாகும். அரசியல் செயற்பாடு மனிதர்களுக்கிடையிலான ஊடாட்டத்தின் போது தோற்றம் பெறுகின்றது.

அரசியலானது பல்வகைமை, வேறுபாடுகள், பரந்தளவான கருத்துக்கள், நலன்கள் மற்றும் தேவைகளினது இருப்பு என்பவற் றினூடாக விருத்தியுறுகின்றது.

பல்வகைமை என்பது குறிப்பிட்ட சில வகையான மோதல், பிணக்குகளுடன் தொடர்புபட்டது. அதனால் அரசியல் வேறுபட்ட கருத்துக்கள், அபிப்பிராயங்கள் மற்றும் செயற்பாடுகள் உள்ள இடத்தில் நிகழ்கின்றது.

அரசியல் கூட்டுத் தீர்மானங்களை எடுப்பது பற்றியதாகும். இதன்படி மக்கள் குழுக்கள் கூட்டாகத் தீர்மானம் எடுப்பதுடன் அத்தீர்மா னங்களுக்கு அவர்கள் கட்டுப்படுவதும் அரசியலாகும். சிலர் குறித்த தீர்மானங்களுக்கு எதிர்ப்பினைக் காட்டலாம். அவ் எதிர்ப்புக்களை முகாமை செய்வதும் அரசியலாகும்.

சில அறிஞர்கள் அரசியல் என்பது தொந்தரவு, இடையூறு, நெருக்கடி, வன்முறை, குரோதம், துரோகத்தனம், சூழ்ச்சித்தனமான செயற்பாடுகள், வெறுப்பூட்டும் பிரச்சாரங்கள், போலியான செய்திகள் போன்ற தர்க்கங்களை உள்ளடக்கியுள்ளது என்றும் கூறுகின்றனர். இதனால் அவர்கள் அரசியலை ஒரு வெறுக்கத்தக்க சொல்லாக சுட்டிக்காட்டுகின்றனர். இது பற்றிக் குறிப்பிடும் ஹென்றி அடம்ஸ் (Henry Adams) என்ற அறிஞர் அரசியல் என்பது வெறுப்புணர்வுகளின் முறைமைப்படுத்தப்பட்ட வடிவம் என்கிறார். எனினும்

சமூக அசைவியக்கத்திற்கு அரசியல் அவசியமானதாகும். அரசியலை தவிர்த்து மனிதனால் வாழ முடியாதளவிற்கு மனித வாழ்வில் அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றது. இன்று சமூகத்தில் எழுகின்ற பல்வேறுபட்ட நெருக்கடிகளை முகாமை செய்வதில் அரசியலின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இதனால் அரசியல் மோதலையும் ஒத்துழைப்பினையும் உள்ளடக்கியது என்ற ஒரு கருத்தும் உண்டு.

அரசியல் குறித்த நவீன ஆய்வுகளில் அரசியல் என்பது அரசாங்கம் பற்றிய கலை என்றும், பொது விவகாரங்களுடன் தொடர்புடையது என்றும், சமரசத்தினையும் கருத்தொருமைப்பாட்டினையும் உள்ளடக்கியது என்றும், அதிகாரத்தினையும் வளங்களையும் பகிர்ந்தளிப்பதனை உள்ளடக்கியது என்றும் வரையறுக்கப்படுகின்றது. சில ஆய்வாளர்கள் அரசியலை அதிகாரத்திற்கான போராட்டமாக வரையறுக்கின்றனர்.

மார்க்சிய சிந்தனையாளர்கள் அரசியலை பொருளாதாரத்துடன் இணைத்து நோக்குகின்றனர். இதன்படி அவர்கள் பொருளாதார பலம் பொருந்திய ஒரு வர்க்கம், பொருளாதார பலமில்லாத மற்றுமொரு வர்க்கத்தினை அடக்கி ஆள்வதற்காக மேற்கொள்ளும் செயற்பாடுகளே அரசியலாகும் என்கின்றனர். இது பற்றிக் குறிப்பிடும் லெனின் (Lenin) என்ற அறிஞர் ''அரசியல் மிகவும் செறிவூட்டப்பட்ட ஒரு பொருளாதார வடிவமாகும்'' என்கிறார்.

பெண்ணிலைவாதிகள் அரசியலை ஆணாதிக்கத்துடன் இணைத்துப் பேசுகின்றனர். அதிலும் குறிப்பாக தீவிர பெண்ணியலாளர்கள் சமூகம் தந்தைவழி (ஆண்) ஆதிக்கத்துடன் பிணைக்கப்பட்டது என்றும் பெண்கள் ஆண்களின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்ட துணை நிலை அந்தஸ்தினையே பெறுகின்றனர் என்றும் கூறுகின்றனர்.

## 1.2 அரசியல் விஞ்ஞானம்

அரசியல் விஞ்ஞானத்தின் இயல்பு மற்றும் பொருள் குறித்து அனைத்துலகப் பொதுவான கருத்துக்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. எனினும் பெரும்பாலான அறிஞர்கள் அரசியல் விஞ்ஞானத்தின் உள்ளடக்கத்தோடு தொடர்புபடுத்தி அது பற்றிக் கருத்துக் கூறியுள்ளனர்.

அரசு பற்றிய ஆய்வு: மரபுரீதியாக அரசியல் விஞ்ஞானம், அரசு பற்றிய ஒரு விஞ்ஞானமாகக் கருதப்படுகின்றது. இக்கருத்தினை கெட்டல் (Gettel), கார்னர் (Garner), பிளண்ட்சிலி (Bluntschli) போன்ற அரசியல் சிந்தனையாளர்கள்

ஆதரிக்கின்றனர். பிளன்ட்சிலி அரசியல் விஞ்ஞானம் என்பது ''அரசுடன் தொடர்புடைய விஞ்ஞானமாகும்'' என்று கூறுகின்றார்.

அரசாங்கம் பற்றிய ஆய்வு: போல் ஜெனட் (Paul Janet), லீகொக் (Leacock), ஜோர்ஜ் கட்லின் (George Catlin), ஹன்ஸ் யூலான் (Hans Eulan) போன்ற அரசியல் விஞ்ஞானிகள் அரசியல் விஞ்ஞானத்தினை அரசாங்கம் பற்றிய ஆய்வுத் துறையாக வரையறுக்கின்றனர். லீகொக் ''அரசாங்கத்துடன் தொடர்புடைய விஞ்ஞானமே அரசியல் விஞ்ஞானம்'' என்கிறார்.

அரசியல் நிறுவனங்கள் பற்றிய ஆய்வு: சில அறிஞர்கள் அரசியல் விஞ்ஞானத்தினை அரசியல் நிறுவனங்கள் பற்றிய ஆய்வுத் துறையாக அடையாளப்படுத்துகின்றனர். இதன்படி பிறைடல் (Bridal) என்ற அறிஞர் அரசியல் விஞ்ஞானம் என்பது ''தேசிய அரசியல் நிறுவனங்கள் பற்றியும் அவற்றின் வரலாறு, கருத்தியல் தத்துவங்கள், செயற்பாடுகள், அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் சக்திகள் பற்றி விபரமாகக் கற்கும் ஒரு துறையாகும்'' என வரையறுக்கின்றார்.

அதிகாரம் பற்றிய ஆய்வு: லாஸ்வெல் (Lasswell), ரொபர்ட் ஏ. டால் (Robert A. Dahl) போன்ற நவீன அரசியல் சிந்தனையாளர்கள் அரசியல் விஞ்ஞானத்தினை அதிகாரத்துடன் தொடர்புபடுத்தி விளக்குவதுடன் அரசியல் சிந்தனையின் முக்கிய பகுதியாகவும் அதனை அடையாளப்படுத்துகின்றனர். இதன்படி லாஸ்வெல் என்ற அறிஞர் அரசியல் விஞ்ஞானம் என்பது ''அரசியல் அதிகாரத்தினை வடிவமைப்பதும் பங்கீடு செய்வதும் பற்றிய கல்வியாகும்'' என வரையறுக்கின்றார்.

பொதுக் கொள்கை உருவாக்கமும் அமுலாக்கமும் பற்றிய ஆய்வு: இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் இடம்பெற்ற பொதுநல அரசு பற்றிய சிந்தனை வளர்ச்சியுடன் அரசின் முக்கியமான பொறுப்புக்களில் ஒன்றாக கொள்கை ஆக்கம் மாறவந்தது. இதன் பயனாக அரசியல் விஞ்ஞானத்தின் முக்கிய பகுதிகளுள் ஒன்றாக பொதுக் கொள்கை பற்றிய ஆய்வு இணைத்துக் கொள்ளப்பட்டது.

மோதல் தீர்த்தல் பற்றிய ஆய்வு: இருபதாம் நூற்றாண்டில் அரசியல் விஞ்ஞான ஆய்வுகளில் ஈடுபட்ட சில அறிஞர்கள், அரசியல் விஞ்ஞானத்தினை மோதல் தீர்த்தல் பற்றிய கல்வித்துறையாக அடையாளப்படுத்துகின்றனர். மில்லர்

(Miller) என்ற அறிஞர் தனது 'அரசியலின் தன்மை' (Nature of Politics) என்ற நூலில் இக்கருத்தினை ஆதரிக்கின்றார்.

சமூக சக்திகளுக்கிடையிலான பரஸ்பர உறவு பற்றிய ஆய்வு: சமகாலத்தில் அரசியல் விஞ்ஞானமானது அரசியல் அதிகாரத்தினை கைப்பற்றுதல், அவ்வதிகாரத்தினை ஒன்றுதிரட்டுதல் மற்றும் பகிர்ந்தளித்தல் என்பவற்றினை சுற்றியுள்ள பல்வேறு சக்திகளில் கவனம் செலுத்துகின்றது. இதன்படி அரசியல் நிறுவனங்களும் அதன் செயற்பாடுகளும் வெற்றிடத்தில் (vacuum) நிலவு வதில்லை. மாறாக பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சக்திகளின் ஊடாட்டத்தின் ஊடாகவே அரசியல் உருவாகிறது.

மேற்குறிப்பிட்டவாறு அரசியல் விஞ்ஞானத்தின் வரையறை தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இக்கருத்துக்கள் ஒவ் வொன்றும் அரசியல் விஞ்ஞானத்தின் மாற்றமுறும் இயல்பினை பிரதி பலிக்கின்றன.

## 1.3 அரசியல் விஞ்ஞானத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

அரசியல் விஞ்ஞானம் பல நூற்றாண்டு காலம் பழைமை வாய்ந்த பாடமாகும். கி.மு. 5 - 4 ஆம் நூற்றாண்டுகளில் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற கிரேக்க தத்துவஞானிகள் அரசியல் பற்றி முதல் வெளியீடுகளை வெளியிட்ட காலத்தில் இப்பாடத்தின் ஆரம்பம் இடம்பெற்றதுடன் இன்று வரை அது பல நூற்றாண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

❖ கிரேக்க காலம் (Greek Period)

அரசியல் பற்றிய ஆய்வு மிக நீண்டகால வரலாற்றினைக் கொண்டுள்ள போதிலும் அரசியலை முறையாகக் கற்பதற்கான அடித்தளத்தினை கிரேக்கர்களே இட்டனர். கிரேக்க காலத்தில் பிளேட்டோ 'குடியரசு (Republic)' என்ற தனது நூலின் மூலமாக இலட்சிய அரசு பற்றிய சிந்தனையை முன்வைத்து, அரசியல் சிந்தனை பற்றிய ஆய்வினை தொடக்கி வைத்ததுடன் கிரேக்கத்தில் கல்விக் கழகத்தினை அமைத்து அரசியலினை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தார். அவ்விதம் பிளேட்டோவிடம் அரசியல் கல்வி பயின்ற வர்தான் அரிஸ்டோட்டில் என்ற மாபெரும் அரசியல் தத்துவஞானி. அரிஸ்டோட்டில் அரசியல் விஞ்ஞானத்திற்கான அடிப்படைகளை விளக்கும் உலகப் புகழ்பெற்ற 'அரசியல் (Politics)' என்ற தனது நூலினை வெளி யிட்டதுடன் 'லைசியம் (Lyceum)' என்ற கல்விக்கழகத்தினை அமைத்து அங்கு அரசியல் கல்வியினையும் போதித்து வந்தார்.

❖ உரோமானிய காலம் (Rome Period)

உரோமானிய கால அரசியல் சிந்தனையில் உரோமானியக் குடியரசு, அரசாங்கத்தின் பிரதான நிறுவனங்கள், பிரஜைகள் இராணுவம், உரோமானியக் கடவுளினை வழிபடுவதற்கான உரிமை போன்ற விடயங்கள் முக்கிய இடத்தினைப் பிடித்திருந்தன. இக்கால ஆய்வுகளில் பொலிவியசு (Polybius) மற்றும் சிசேரோ (Cicero) ஆகியோரது பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக் கனவாகும். பொலிவியசின் ‘வரலாறுகள் (Histories)’ என்ற தலைப்பிலான ஆக்கமும் சிசேரோவின் ‘குடியரசு (On The Republic)’ மற்றும் ‘சட்டம் (On The Law)’ ஆகிய நூல்களும் இக்கால அரசியல் ஆய்வு வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கின.

❖ மத்திய காலம் (Medieval Period)

கிறிஸ்தவ சமய ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு காலகட்டமே மத்திய காலமாகும். இக்காலத்தில் பகுத்தறிவு ரீதியான அறிவியல் வளர்ச்சிகள் தடைப்பட் டிருந்ததுடன் கிறிஸ்தவ போப்பாண்டவரினதும் திருச்சபைகளினதும் தலை மைத்துவத்திற்கு உட்பட்ட அரசியல் முறைமையும் நிலவியது. எனினும் இக்கால கிறிஸ்தவ அரசியல் சிந்தனையாளர்களான புனிதர் ஒகஸ்டீன் (St. Augustine) மற்றும் புனிதர் தோமஸ் அக்குவைனஸ் (St. Thomas Aquinas) ஆகியோர் அரசியல் சிந்தனை வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செய்தனர்.

❖ நவீன காலம் (Modern Period)

*15* ஆம் நூற்றாண்டில் மக்கியவல்லி நடைமுறையிலுள்ள அரசியல் நிறுவனங்களை வரலாற்று ரீதியாக ஆராயும் புதிய பாரம்பரியத்தினை உருவாக்கினார். இப்புதிய பாரம்பரியம் அரசியல் மெய்யியல் குறித்த கிறிஸ்தவ மற்றும் மரபுசார் வழிமுறைகளை சவால்களுக்குட்படுத்தியதுடன் சமூக ஒழுங்கு மற்றும் அரசியல் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான நிறுவன ஏற்பாடுகளை கண்டறிவதிலும் கவனம் செலுத்தியது. இதனால் பல அரசியல் சிந்தனை யாளர்கள் (ஹொப்ஸ், லொக், மொன்டஸ்கியூ, ரூசோ) பல்வேறுபட்ட அரசியல் நிறுவனங்களின் தோற்றம் மற்றும் அவற்றின் கட்டமைப்புக்களை ஆய்வுக்கு உட்படுத்தினர்.

எனினும் அரசியல் விஞ்ஞானம் ஒரு பிரதான கல்வித்துறை என்ற வகையில் மிக அண்மைக் காலத்திலேயே தோற்றம் பெற்றது. அவ்வளர்ச்சி நிலைக்கு தற்கால சிந்தனையாளர்கள் பலர் பங்களிப்புச் செய்தனர். அச்சிந்தனை யாளர்களுள் கொலம்பிய பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் மற்றும் வரலாற்றுத் துறை பேராசிரியரான பிரான்சிஸ் லீபர் (Francis Lieber) குறிப்பிடத்தக்க ஒருவராவார். அவர் ‘சிவில் சுதந்திரமும் சுய அரசாங்கமும்

(Civil Liberty and Self Government)' எனும் நூலினை வெளியிட்டு அதன் மூலம் அரசியல் விஞ்ஞானக் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செய்தார்.

அரசியல் விஞ்ஞான வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு மைற்கல்லாக கொலம்பிய பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட 'அரசியல் விஞ்ஞானப் பாடசாலையினைக் (School of Political Science)' குறிப்பிட முடியும். இப் பாடசாலை 1880 இல் ஜோன் டபிள்யு பேர்கஸ் (John. W. Burgess) என்பவரின் முயற்சியினால் நிறுவப்பட்டது. இப்பாடசாலை அரசியல் விஞ்ஞான கல்விப்பீடம் என அழைக்கப்பட்டதுடன் 1886 இல் 'அரசியல் விஞ்ஞான காலாண்டு சஞ்சிகை (Political Science Quarterly)' ஒன்றினையும் வெளியிட்டது. இச்சஞ்சிகையே அரசியல் விஞ்ஞான ஆய்வில் வெளியிடப்பட்ட முதலாவது புலமைசார் சஞ்சிகையாகும். இதன்மூலம் அரசியல் விஞ்ஞான ஆய்வில் புதிய பல கருத்துக்கள் உருவாகுவதற்கும் களம் அமைக்கப்பட்டது.

அரசியல் விஞ்ஞான வளர்ச்சியில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய மற்றுமொரு மைற்கல்லாக 1876 இல் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகம் (Johns Hopkins University) நிறுவப்பட்டதனைக் குறிப்பிட முடியும். இப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதனை அடுத்து, 1877 இல் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் வரலாற்று மற்றும் அரசியல் விஞ்ஞான சங்கம் உருவாக் கப்பட்டதுடன் வரலாற்று மற்றும் அரசியல் விஞ்ஞான கற்கைகளும் அங்கு ஆரம்பிக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட இரு பல்கலைக்கழகங்களும் அரசியல் விஞ்ஞானம் ஒரு தனித்துறையாக வளர்ச்சியுறுவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கின. இப்பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட நடத்தைவாதப் புரட்சியும் அரசியல் விஞ்ஞா னத்தின் ஆய்வுப் பரப்பினை மேலும் விரிவுபடுத்தியது.

### 1.4 அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பு

அரசியல் விஞ்ஞானம் இயங்கு தன்மையுள்ள ஒரு சமூக விஞ்ஞானப் பாடமாக இருப்பதனால் அதன் பாடப்பரப்புக் குறித்து தெளிவான கருத்தினை முன்வைப்பது மிகக் கடினமானது. எனினும் தேசிய, சர்வதேச மட்டத்தில் செயற்படும் அரசுகளையும் அதன் பல்வேறு நிறுவனங்களையும் அந்நிறுவனங்களுக்கு மத்தியில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும் விதத்தினையும் அரசியல் விஞ்ஞானம் பிரதானமாகக் கருத்திற்கொள்கின்றது. இதற்கமைய அரசியல் விஞ்ஞானத்தின் பிரதான பரப்புக்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

அரசும் அரசாங்கமும்: அரசியல் விஞ்ஞானம் அரசு மற்றும் அரசாங்கம் ஆகிய இரு அம்சங்களை பிரதானமாகக் கருத்திற்கொள்வதிலிருந்து அது அரசு மற்றும் அரசாங்கம் குறித்து விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றினை மேற்கொள்கின்றது. இதன்படி அரசியல் விஞ்ஞானம் அரசின் இயல்பு, அரச முறைமையின் தோற்றம், அரசு உருவாக்கம், அரசாங்கத்தின் வடிவங்கள் மற்றும் தொழிற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்துகின்றது.

அரசுக்கும் மனிதர்களுக்குமிடையிலான தொடர்புகள்: அரசியல் விஞ்ஞானம் மனிதரின் அரசியல் நடத்தைக் கோலங்களில் கவனம் செலுத்துவதிலிருந்து அது தனிமனிதருக்கும் அரசுக்கும் இடையிலான தொடர்பின் இயல்பு குறித்தும் ஆய்வு செய்கின்றது. இதன்படி சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதர்களதும் அரசியல் நடத்தைக்கோலங்கள் அரசியல் விஞ்ஞானத்தின் மிக முக்கிய பகுதியாக உள்ளது. அதேவேளை, அரசு தனிமனிதர்களது உரிமைகளையும் சுதந்திரங்களையும் நியாயமான முறையில் வரையறுத்து நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து அரசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்துகின்றது.

அரசியல் அதிகாரம்: நவீன தேசிய அரசுகளின் தோற்றத்துடன் அரசியல் விஞ்ஞானத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு புதிய அம்சமாக அதிகாரம் பற்றிய ஆய்வுத் துறை விளங்குகின்றது. மக்கியவல்லியினால் தொடக்கி வைக்கப்பட்ட அதிகாரம் பற்றிய சிந்தனை ஹொப்ஸ், ஹெகல், நீட்சே, பேட்டன் ரசல், மெக்ஸ் வெபர், லாஸ்வெல், மொகன்தோ முதலானவர்களின் பங்களிப்புடன் வளர்ச்சியுற்றது. இந்தவகையில் அதிகாரம், அதிகாரத்தின் வடிவங்கள், அதிகாரம் கைப்பற்றப்படும் விதம், அதிகாரத்தினைப் பாதுகாத்தல், அதிகாரத்தினைப் பிரயோகித்தல், அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடுகள் போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்தும் அரசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்துகின்றது.

அரசியல் கோட்பாடுகள்: அரசியல் கோட்பாடுகள் என்பது அரசியல் ஆய்வுகளினதும் சிந்தனைகளினதும் வெளிப்பாடுகளாகும். இதன்படி அரசியல் விஞ்ஞானிகள் பல்வேறு அரசியல் எண்ணக்கருக்களை வடிவமைத்துள்ளதுடன் அவ்வெண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கோட்பாடுகளையும் நிறுவியுள்ளனர். இதன்படி அரசியல் விஞ்ஞானம் அரசு, அரசாங்கம், சுதந்திரம், நீதி, சொத்துரிமை, உரிமைகள், சட்டம் போன்ற எண்ணக்கருக்களுடன் தொடர்புடைய பல்வேறு கோட்பாடுகளை ஆராய்கின்றது.

அரசியல் நிறுவனங்கள்: அரசியல் விஞ்ஞானம் அரசுடன் தொடர்புடைய அரசியல் நிறுவனங்களையும் அமைப்புக்களையும் கருத்திற்கொள்கின்றது. இதன்படி அரசியல் யாப்பு, ஒப்பீட்டு அரசியலும் அரசாங்கமும், பொதுத்துறை நிர்வாகம் (ஒப்பீட்டு பொதுத்துறை நிர்வாகம், அபிவிருத்தி நிர்வாகம், பொதுப் பணியாளர் நிர்வாகம், பொது நிதி நிர்வாகம், புதிய பொதுத்துறை முகாமைத்துவம்), உள்ளூராட்சி அரசாங்கம் முதலிய நிறுவன ஏற்பாடுகளும் அரசியல் விஞ்ஞான ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசியல் இயங்குநிலைக் கருவிகள்: அரசியல் இயங்குநிலை என்பது அரசாங்கம் மற்றும் அரசியல் செயற்பாடுகளையும் அதில் தாக்கம் புரியும் பல்வேறு சக்திகளோடும் தொடர்புடைய செயன்முறையினைக் குறிப்பதாகும். இப்பகுதியினுள் அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுஜன அபிப்பிராய முகவர்கள் உள்ளடங்கலான பரந்தளவான சமூக அரசியல் சக்திகள் உள்ளடக்கப்படுகின்றன.

சர்வதேச உறவுகள், சர்வதேச நிறுவனங்கள், சர்வதேச சட்டம்: அரசியல் விஞ்ஞானம் அரசியல் செயன்முறையின் பரந்த வீச்சினை ஆய்வுக்கு உட்படுத்துகின்றது என்ற வகையில் சர்வதேச உறவுகள், சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் போன்ற அம்சங்களும் அரசியல் விஞ்ஞான ஆய்வினுள் உள்ளடக்கப்படுகின்றன. இதன்படி சர்வதேச உறவுகள், சர்வதேச சட்டம், ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய யூனியன், அணிசேரா இயக்கம் போன்ற சர்வதேச நிறுவனங்கள், இராஜதந்திர உறவுகள், சர்வதேச பொருத் தனைகளும் உடன்படிக்கைகளும், ஆயுதக் கட்டுப்பாடு, மனித உரிமைகள், நிலையான அபிவிருத்தி போன்ற அம்சங்களும் அரசியல் விஞ்ஞான ஆய்வுப் பரப்பினுள் உள்ளடக்கப்படுகின்றன.

பொதுக்கொள்கை உருவாக்கமும் அமுலாக்கமும்: பொதுநல அரசு பற்றிய சிந்தனை வளர்ச்சியுடன் அரசியல் விஞ்ஞானப் பாடப்பரப்பினுள் இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு புதிய அம்சம் பொதுக்கொள்கை உருவாக்கமும் நடைமுறையும் பற்றிய ஆய்வாகும். இப்பரப்பினுள் கொள்கைப் பிரச்சினைகள், கொள்கை உருவாக்கம், கொள்கை உருவாக்க முகவர்கள், கொள்கை அமுலாக்கம், கொள்கை அமுலாக்கச் சக்திகள், கொள்கை மதிப்பீடு போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மோதல் முகாமைத்துவமும் மோதல் தீர்த்தலும்: முதலாம் உலகப் போரின் விளைவுகள் மோதல் முகாமைத்துவமும் மோதல் தீர்த்தலும் பற்றிய புதிய

ஆய்வின் தோற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தது. அதன் பின்னர் போருக்கான காரணிகள் மற்றும் முறை தொடர்பான ஆய்வுகள் தொடக்கிவைக்கப்பட்டன. அதேவேளை, மோதல்களை முகாமைத்துவப்படுத்தி அவற்றினைத் தீர்ப்பதற்கான பல்வேறு வழிமுறைகள் குறித்த ஆய்வுகளும் அரசியல் விஞ்ஞான பரப்பினுள் உள்ளடக்கப்படலாயிற்று.

நடத்தைசார் விடயங்கள்: இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட நடத்தைவாதப் புரட்சி அரசியல் விஞ்ஞான ஆய்வுப் பரப்பினை மேலும் விரிவுபடுத்தியது. இதன்படி அரசியல் விஞ்ஞான ஆய்வில் பல புதிய பரப்புக்கள் இணைத்துக் கொள்ளப்பட்டன. இப்புதிய அம்சங்களுள் அரசியல் முறைமைப் பகுப்பாய்வு (உள்ளீட்டு - வெளியீட்டு பகுப்பாய்வு, கட்டமைப்புத் தொழிற்பாட்டுப் பகுப்பாய்வு), அரசியல் நடத்தை, அரசியல் அதிகாரம், அரசியல் சமூகமயமாக்கம், அரசியல் கலாசாரம், அரசியல் அபிவிருத்தி, அரசியல் நவீனத்துவம், அரசியல் வன்முறை, அரசியல் உயர் குழாம் வகுப்பு போன்றன குறிப்பிடத்தக்கனவாகும்.

## 1.5 அரசியல் விஞ்ஞான அணுகுமுறைகள்

அணுகுமுறைகள் என்பது எந்தவொரு விடயத்தினையும் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் விளக்குவதற்கும் பயன்படுத்தப்படும் நுட்பமுறைகளைக் குறிக்கும். அரசியல் விஞ்ஞான ஆய்விலும் பல்வேறு அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வணுகுமுறைகளை பாரம்பரிய, நவீன அணுகுமுறைகள் என இரு வகைப்படுத்தி நோக்க முடியும்:

**பாரம்பரிய அணுகுமுறைகள்:** இரண்டாம் உலக மகா யுத்தம் வரை அரசியல் விஞ்ஞான ஆய்வில் செல்வாக்குச் செலுத்திய அணுகுமுறைகள் பாரம்பரிய அணுகுமுறைகள் ஆகும். பாரம்பரிய அணுகுமுறைகள் கல்விசார் பெறுமானத்தினை மட்டும் கொண்டிருத்தல்; நுண்பாக பகுப்பாய்வினை புறக்கணித்தல்; குறுகிய தன்மையினைக் கொண்டிருத்தல்; விபரணத் தன்மையினைக் கொண்டிருத்தல்; இலட்சியவாத சிந்தனைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டனவாக இருத்தல்; சமூகச் சூழல் மற்றும் தனிப்பட்டவர்களின் நடத்தை என்பவற்றைப் புறக்கணித்தல்; சமூகம் பற்றிய ஆய்விலிருந்து தவிர்ந்திருத்தல்; சர்வதேச நிறுவனங்கள் பற்றிய ஆய்விலிருந்து தவிர்ந்திருத்தல் முதலிய பண்புகளைக் கொண்டுள்ளன. பாரம்பரிய அணுகுமுறைகளுள் பின்வருவன குறிப்பிடத்தக்கனவாகும்:

மெய்யியல் அணுகுமுறை (Philosophical Approach): அரசியல் ஆய்வில் பயன்படுத்தப்பட்ட மிகவும் பழைமையான அணுகுமுறை மெய்யியல் அணுகுமுறையாகும். பிளேட்டோ, அரிஸ்டோட்டில் முதலிய பழங்கால

அறிஞர்கள் இவ்வணுகுமுறையினைப் பயன்படுத்தியிருந்தனர். லியோ ஸ்ரோஸ் (Leo Strauss) என்ற அறிஞர் இவ்வணுகுமுறையின் தீவிர ஆதரவாளர் ஆவார். அரசியலின் இயல்பினை அறிவதற்கு மெய்யியல் அவசியம் என்று கூறும் இவ்வணுகுமுறை, சிறந்த அரசியல் ஒழுங்கினை நிறுவுவதற்கு மெய்யியலின் அவசியத்தினை எடுத்துக்காட்டுகிறது. பெறுமானங்களை அரசியல் ஆய்விலிருந்து வேறுபடுத்த முடியாது என்றும் அரசியலானது சமூகத்தில் எது சரி அல்லது எது பிழை என்பதை தீர்மானிக்க முயல்கிறது எனவும் இவ்வணுகுமுறை வாதிக்கிறது.

வரலாற்று அணுகுமுறை (Historical Approach): அரசியலை வரலாற்றுக் காரணிகளினூடாகவே புரிந்துகொள்ள வேண்டும் என வாதிடுகின்ற அணுகுமுறை வரலாற்று அணுகுமுறையாகும். மக்கியவல்லி, செபைன், டன்னிங் முதலானோர் இம்முறையின் ஆதரவாளர்களாவர். அரசியலும் வரலாறும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டது என்றும் அரசியல் ஆய்வுகள் எப்போதும் வரலாற்று ரீதியானவையாகவே இருக்க வேண்டும் என்றும் வரலாற்று அணுகுமுறை குறிப்பிடுகிறது. வரலாறு கடந்த காலத்தை மட்டும் பேசுவதல்ல. அது நிகழ்கால நிகழ்வுகளுடனும் தொடர்புபட்டது. எதிர்கால அரசியல் மதிப்பீடுகளுக்கும் வரலாறு அவசியமானது. அரசியல் நிகழ்வுகளினது கடந்தகாலம் பற்றிய அறிவின்றி நிகழ்காலத்தினை முறைப்படி ஆராய முடியாது. கார்ல் மாக்ஸ் முதலாளித்துவ சமூகத்தின் தோற்றத்தினை விளக்க இம்முறையினை பயன்படுத்தினார்.

ஒப்பீட்டு அணுகுமுறை (Comparative Approach): அரசியல் முறைமைகளை ஒன்றோடொன்று ஒப்பீடு செய்வதன் மூலம் ஒரு உறுதியான அரசியல் முறைமையினை கட்டியெழுப்புவதனை நோக்காகக் கொண்ட ஒரு அணுகு முறையே ஒப்பீட்டு அணுகுமுறையாகும். ஒப்பீட்டு அணுகுமுறையினை முதன் முதலில் திறம்பட பயன்படுத்தியவர் அரிஸ்டோட்டில் ஆவார். இவர் புராதன காலத்தில் காணப்பட்ட 150 இற்கு மேற்பட்ட அரசியல் முறைமைகளை ஒப்பிட்டு ஆய்வு செய்தமை குறிப்பிடத்தக்கது. அரசியல் ஆய்வுகளில் இவ்வணுகுமுறையின் செல்வாக்கினால் 'ஒப்பீட்டு அரசியல்' என்ற தனியானதொரு பாடப்பிரிவு தோற்றம் பெற்றுள்ளது.

நிறுவன அணுகுமுறை (Institutional Approach): அரசியலில் உள்ள முறைசார் அம்சங்களில் கவனம் செலுத்தும் அணுகுமுறை நிறுவன அணுகுமுறையாகும். நிறுவன அணுகுமுறை அரசியல் நிறுவனங்களையும் கட்டமைப்புக்களையும் ஆராய்வதுடன் சட்டவாக்க, நிறைவேற்று, நீதித்துறை, அரசியல் கட்சி முதலியவற்றிலும் கவனம் செலுத்துகின்றது. நவீனகால அறிஞர்களும்

இவ்வணுகுமுறை நுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர். ஜேம்ஸ் பிறைஸ், ஆதர்பென்ட்லி, ஹரோல்ட் லஸ்கி முதலானோர் இதன் ஆதரவாளர்களாவர்.

சட்ட அணுகுமுறை (Legal Approach): சட்டங்களை உருவாக்குவதற்கும் அமுலாக்குவதற்கும் அரசே அடிப்படையானது என்றவகையில் சட்டச் செயன்முறை, சட்ட நிறுவனங்கள், நீதித்துறையின் சுதந்திரம் என்பவற்றுடன் தொடர்புடையனவாக அரசியல் ஆய்வுகள் இருக்க வேண்டும் என இவ்வணுகுமுறை வாதிடுகின்றது. சிசேரோ, போடின், பெந்தம், டைசி, சேர் ஹென்ரி மெய்ன் முதலானோர் இதன் ஆதரவாளர்களாவர்.

***நவீன அணுகுமுறைகள்:*** இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் செல்வாக்குச் செலுத்திய அணுகுமுறைகள் நவீன அணுகுமுறைகளாகும். நவீன அணுகுமுறைகள் பெறுமானத்திலிருந்து விடுபட்டவை; நுண்பாக ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்; மனிதனை இயந்திர நோக்கில் அவதானித்தல்; மனித நடத்தைகளில் கூடிய கவனம் செலுத்துதல்; எண்ணிக்கையிலும் புள்ளிவிபரங்களிலும் தங்கியிருத்தல்; விளைவுகளை விட ஆய்வு நுட்பங்களில் கூடிய கவனம் செலுத்துதல்; நடத்தைப் பாதிப்புக்களில் அழுத்தம் கொடுத்தல்; மூன்றாம் உலக அரசியல் பற்றி கவனம் செலுத்துதல் முதலிய பண்புகளைக் கொண்டுள்ளன. நவீன அணுகுமுறைகளுள் பின்வருவன குறிப்பிடத்தக்கனவாகும்.

சமூகவியல் அணுகுமுறை (Sociological Approach): சமூகவியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஆய்வினை வலியுறுத்தும் அணுகுமுறை சமூகவியல் அணுகுமுறையாகும். மெக்ஸ் வெபர் போன்ற அறிஞர்கள் அரசியல் ஆய்வுகளில் சமூகவியல் அணுகுமுறையினை பயன்படுத்தியுள்ளனர். அரசியல் ஆய்வுகளில் சமூகவியல் அணுகுமுறையின் செல்வாக்கினால் ‘அரசியல் சமூகவியல்’ என்ற தனியானதொரு பாடப்பிரிவு தோற்றம் பெற்றுள்ளது.

உளவியல் அணுகுமுறை (Pyschological Approach): உளவியல் அணுகுமுறை மனிதர்களினதும் குழுக்களினதும் நிறுவனங்களினதும் உளவியல்சார் அம்சங்களில் கவனம் செலுத்துகின்றது. இவ்வணுகுமுறையின் மூலம் அரசியலுக்கும் உளவியலுக்கும் இடையிலான தொடர்புகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

பொருளியல் அணுகுமுறை (Economical Approach): பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஆய்வினை வலியுறுத்துவது பொருளியல் அணுகுமுறையாகும். இவ்வணுகுமுறை தனிமனிதனின் அரசியல் மற்றும் பொருளாதார செயற்பாடுகளை

தொடர்புபடுத்தி நோக்குகிறது. அரசியல் ஆய்வுகளில் பொருளியல் அணுகுமுறையின் செல்வாக்கினால் 'அரசியல் பொருளாதாரம்' என்ற தனியானதொரு பாடப்பிரிவு தோற்றம் பெற்றுள்ளது.

புள்ளிவிபரவியல் அணுகுமுறை (Statistical Approach): கணிதவியல் நுட்பங்களின் அடிப்படையிலான அரசியல் ஆய்வினை வலியுறுத்துவது புள்ளிவிபரவியல் அணுகுமுறையாகும். கிரஹம் வொலஸ் போன்ற தற்கால அறிஞர்கள் பலர் அரசியல் ஆய்வுகளில் இவ்வணுகுமுறையின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டியுள்ளனர். தேர்தல் காலங்களில் வாக்காளர்களின் நடத்தையினைப் பகுப்பாய்வு செய்வதற்கும் தேர்தல் முடிவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் இவ்வணுகுமுறை பயன்படுத் தப்படுகிறது.

மார்க்சிய அணுகுமுறை (Marxist Approach): கார்ல் மார்க்சினாலும் அவரைப் பின்தொடர்ந்தவர்களாலும் பயன்படுத்தப்பட்ட ஒரு அணுகுமுறையே மார்க்சிய அணுகுமுறையாகும். அரசினை ஒரு வர்க்கக் கருவியாக அடையாளப்படுத்தும் இவ்வணுகுமுறை, நடைமுறை அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையே காணப்படும் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றது. அரசற்ற பொதுவு டைமை சமூகம் ஒன்றினை உருவாக்குவதனை மார்க்சிய அணுகுமுறை இலக்காகக் கொண்டுள்ளது.

நடத்தைவாதம் (Behaviouralism): அரசியல் ஆய்வுகள் மனிதர்களினதும் குழுக்களினதும் அரசியல் நடத்தையில் கூடிய கவனம் செலுத்துவனவாக இருக்க வேண்டும் என வலியுறுத்தும் ஒரு அணுகுமுறையே நடத்தை வாதமாகும். நடத்தைவாதம் அரசியல் விஞ்ஞானத்தினை முறைப்படியமைந்த ஒரு கற்கைநெறியாக அல்லது அதிகளவு விஞ்ஞானத் தன்மைமிக்க ஒரு கற்கைநெறியாக மாற்ற முயற்சித்தது. நடத்தைவாதம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னரே வளர்ச்சியுற்றது. சார்ல்ஸ் ஈ மெரியம் நடத்தை வாதத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

பின்வந்த நடத்தைவாதம் (Post-Behaviouralism): நடத்தைவாதத்தினுள் எழுந்த சீர்திருத்தப் பகுதியினை பின்வந்த நடத்தைவாதம் என அழைப்பர். நடத்தைவாதம் குறிப்பிடுவது போன்று சமூக விஞ்ஞான ஆய்வுகள் பெறுமானத்திலிருந்து முற்று முழுதாக விடுபட்டனவாக இருக்க முடியாது எனக் குறிப்பிடும் பின்வந்த நடத்தைவாதம், சமூகத்தின் எதிர்கால நல்வாழ்வில் கவனம் செலுத்தத்தக்கதாக அரசியல் ஆய்வுகள் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

முறைமைப் பகுப்பாய்வு (System Analysis): அரசியல் சமூக சூழலில் செயற்படுகின்றது எனவும் அரசியல் குறித்த ஆய்வினை ஏனைய சமூகக் காரணிகளிலிருந்து தனிமைப்படுத்தலாகாது எனவும் சமூகச் செல்வாக்குகளே அரசியல் செயன்முறையினை வடிவமைக்கின்றன எனவும் குறிப்பிடும் அணுகுமுறை முறைமைப் பகுப்பாய்வு அணுகுமுறையாகும். முறைமைப் பகுப்பாய்வு அணுகுமுறையினுள் டேவிட் ஈஸ்டன் முன்வைத்த உள்ளீட்டு - வெளியீட்டு பகுப்பாய்வு மாதிரியும் கப்ரியல் ஆல்மண்ட் முன்வைத்த கட்டமைப்புத் தொழிற்பாட்டு மாதிரியும் குறிப்பிடத்தக்கவையாகும்.

**பிரதான சொற்கள்**

அரசியல், அரசியல் விஞ்ஞானம், அணுகுமுறைகள்

**பயிற்சி வினாக்கள்**

அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பினைக் குறிப்பிட்டு, அரசியல் விஞ்ஞானக் கற்கையில் பயன்படுத்தப்படும் பிரதான அணுகு முறைகளைப் பரிசீலிக்குக.

அரசியல் விஞ்ஞானத்தினை வரைவிலக்கணப்படுத்தி, அதன் பாடப் பரப்பினையும் அதனைக் கற்பதனால் ஏற்படும் பயன்பாடுகளையும் தெளிவுபடுத்துக.

பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.
(அ) அரசியலுக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான தொடர்பு
(ஆ) அரசியலைக் கற்றுக்கொள்ளும் வழிமுறைகள்
இ) நடத்தைவாத அணுகுமுறை

**உசாத்துணைகள்**


Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

# அத்தியாயம் - 02

## அரசு

**உள்ளடக்கங்கள்**

| | | |
|---|---|---|
| 2.1 | அரசும் அரசின் கூறுகளும் | 17 |
| 2.2 | அரசின் வகிபாகம் | 19 |
| 2.3 | அரசும் தேசமும் | 22 |
| 2.4 | அரசும் சமூகமும் | 25 |
| 2.5 | அரசும் சங்கங்களும் | 27 |
| 2.6 | அரசும் அரசாங்கமும் | 29 |

### அத்தியாய சுருக்கம்

அரசியல் விஞ்ஞானக் கல்வியின் மிக முக்கிய அடிப்படையாக அரசு என்ற எண்ணக்கரு உள்ளது. இதனாலேயே அறிஞர்கள் அரசியல் கல்வியின் உள்ளேயும் வெளியேயும் அரசே ஆதிக்கம் செய்கிறது என்கின்றனர். அரசினைக் கொண்டே நடைமுறை அரசியலும் செயலுருப் பெறுகின்றது. அரசு இல்லாத போது அரசியல் இல்லை என்று கூறுமளவிற்கு அரசியலில் அரசு முக்கியத்துவம் வாய்ந்தது. உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேசப் பரப்பிலும் அரசின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவ்விதம் அரசின் முக்கியத்துவம் உணரப்பட்ட அளவிற்கு அரசினைப் பற்றிய புரிதல்கள் ஏற்படவில்லை. அரசியல் பரப்பில் சிதறிக்கிடக்கும் பல்வேறு எண்ணக்கருக் களுடன் அரசு என்ற எண்ணக்கருவினை குழப்பிக்கொள்கின்ற நிலையும் காணப்படுகிறது.

### அத்தியாயத்தின் நோக்கம்

அரசியல் கல்வியின் மைய அம்சம் அரசு பற்றிய ஆராய்ச்சியாகும். இதனால் அரசு பற்றிய தெளிவான விளக்கமொன்றினை வழங்குவது இவ்வத்தி யாயத்தின் நோக்கமாகும்.

### கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தினை வெற்றிகரமாக கற்றுத் தேறுவதன் மூலம் அரசு என்றால் என்ன? அரசு மக்களுக்கு ஆற்றும் பணிகள் யாவை? அரசின் தோற்றம் தொடர்பாக உள்ள வியாக்கியானங்கள் போன்றன பற்றிய தெளிவினை மாணவர்கள் பெற்றுக்கொள்வர்.

## 2.1 அரசும் அரசின் கூறுகளும்

அரசியல் விஞ்ஞானத்தில் அரசு என்ற எண்ணக்கரு முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளது. புராதன காலம் முதல் தற்காலம் வரை பெரும்பாலான அறிஞர்கள் அரசுடன் தொடர்புபடுத்தியே அரசியல் விஞ்ஞானக் கற்கையினை வரையறை செய்துள்ளனர். இது பற்றிக் குறிப்பிடும் கார்ணர் என்ற அறிஞர் அரசியல் என்பது "அரசுடன் ஆரம்பித்து அரசுடனேயே முடிவுறுகிறது" என்கிறார்.

அரசு என்பதனைக் குறிக்கும் ஆங்கில சொல் State என அழைக்கப்படுகிறது. இச் சொல் Status எனும் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். அரசியல் ஆய்வுகளில் State என்ற சொல்லினை முதன் முதலில் பயன்படுத்தியவர் மக்கியவல்லி ஆவார். கிரேக்கர்கள் அரசினைக் குறிப்பதற்கு Polis என்ற பதத்தினையும் உரோமர்கள் அரசினைக் குறிப்பதற்கு Civitas என்ற பதத்தினையும் பயன்படுத்தினர். அரசு என்பது பல தரப்பட்ட நிறுவனங்களின் கூட்டு, ஒரு ஆள்புல அலகு, ஒரு தத்துவார்த்தக் கருத்து, ஒரு ஆதிக்கக் கருவி எனப் பலவாறு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. இதனால் அரசு என்றால் என்ன என்பது தொடர்பில் பொதுவான கருத்தொன்று இல்லை.

இருப்பினும் வரையறுக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்ட ஆள்புலத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்து வாழும் மக்களே அரசு என எளிமையாகப் பொருள் கொள்ள முடியும். இதன்படி சிட்விக் என்ற அறிஞர் 'அரசியல் சமூகமே அரசு' எனக் கூறுகின்றார். இங்கு அரசியல் சமூகம் என்பது வரையறுக்கப்பட்ட ஆள்புலத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்து வாழும் மக்களைக் குறிக்கின்றது.

நவீன அரசுகள் ஆள்புலம், மக்கட் தொகை, இறைமை, அரசாங்கம் ஆகிய நான்கு அடிப்படை மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது. இங்கு ஆள்புலமும் மக்கள் தொகையும் அரசின் பௌதீக இயல்பினை வெளிப்படுத்தும் அதேவேளை, அரசாங்கமும் இறைமையும் அரசின் அரசியல் பண்பினை பிரதிபலிக்கின்றன.

ஆள்புலம், மக்கட் தொகை, அரசாங்கத்தின் தன்மை, அதிகார பலம் என்பவற்றில் அரசுகள் வேறுபடுகின்ற போதிலும் பொதுவாக இறைமையுடைய எல்லா அரசுகளும் அதனளவில் சமமானவையே. நடைமுறையில் அரசுகள் ஒவ்வொன்றும் அவ்வரசுகளின் கீழ் செயற்படும் அரசாங்கத்தின் இயல்பினைக் கொண்டே அறிமுகப்படுத்தப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக ஒரு அரசில் ஜனநாயக அரசாங்கம் செயற்பாட்டில் இருக்கும் போது அவ்வரசு ஜனநாயக அரசு எனவும் சர்வாதிகாரிகள் அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்தும் போது அவ்வரசு பாசிச அரசு எனவும் சோசலிஸ்டுகளால் கொண்டு நடத்தப்படும் அரசாங்கத்தினை கொண்ட அரசுகள் சோசலிச அரசுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

அரசு கொண்டிருக்க வேண்டிய அடிப்படைக் கூறுகள் தொடர்பில் சகலரும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவான கருத்தொன்று காணப்படுவதில்லை. 1933 ஆம் ஆண்டைய மொண்டிவீடியோ மாநாட்டுத் தீர்மானத்தின்படி அரசானது நிரந்தர சனத்தொகை, வரையறுக்கப்பட்ட ஆள்புலம், அரசாங்கம், ஏனைய நாடுகளுடன் உறவு கொள்ளும் தகுதி ஆகிய நான்கு பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என விதிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அரசொன்றின் பொதுவான கூறுகளாக பின்வருவன அடையாளப்படுத்தப்படுகின்றன:

**ஆள்புலம்:** அரசு ஒரு ஆள்புல அமைப்பாகும். அரசின் பௌதீக இயல்பினை வெளிப்படுத்தும் முக்கிய கூறாக ஆள்புலம் விளங்குகிறது. அரசுக்கு ஆள்புலம் அவசியமானதாயினும் ஆள்புலத்தின் அளவு தொடர்பான வரையறைகள் எவையுமில்லை. அரசின் ஆள்புலம் சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருக்கலாம். இருப்பினும் கிரேக்க காலத்தவர்கள் அரசு சிறியதாக இருப்பதனையே விரும்பினர், உரோமானியர்கள் அரசின் ஆள்புலத்தினை விஸ்தரித்தனர். தற்காலத்தில் மிகப் பெரிய ஆள்புலத்தைக் கொண்ட அரசுகளும் (ரஷ்யா, கனடா) மிகச் சிறிய ஆள்புலத்தைக் கொண்ட அரசுகளும் (மோல்டா, வத்திக்கான்) செயற்படுகின்றன.

**மக்கள்:** அரசு மக்கள் வாழும் ஒரு அமைப்பாகும். மக்களின்றி அரசு நிலைகொள்ள முடியாது. அரசுக்கு குறித்த மக்கள் தொகை அவசிய மானதாயினும் மக்கள் தொகையின் அளவு முக்கியமானதல்ல. அரசு அதிக மக்கள் தொகையினைக் கொண்டதாகவோ குறைந்தளவு மக்கள் தொகையினைக் கொண்டதாகவோ இருக்கலாம். புராதனகால அறிஞர்கள் அரசு குறைந்தளவு மக்கள் தொகையினைக் கொண்டிருப்பதே சிறந்தது என்று கருதினர். ஆனால் இன்று பாரிய சனத்தொகையினைக் கொண்ட அரசுகளும் (மக்கள் சீனக் குடியரசு, இந்தியா) குறைந்தளவு சனத்தொகையினைக் கொண்ட அரசுகளும் (வத்திக்கான், மொனோக்கோ) காணப்படுகின்றன.

**அரசாங்கம்:** அரச அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் செயற்பாட்டுப் பொறிமுறை அரசாங்கமாகும். அரசாங்கத்தின் மூலமே அரசின் விருப்பம்

நிறைவேற்றப்படுகிறது. அரசின் பெயரால் சட்டத்தினை இயற்றி, குடிமக்கள் மீது அச்சட்டத்தினை பிரயோகித்துச் செயற்படும் அமைப்பு அரசாங்கமாகும். அரசாங்கமின்றி அரசினால் செயற்பட முடியாது. அரசாங்கங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான பொதுவான விதிகள் இல்லையாயினும் ஜனநாயக முறையில் அரசாங்கமானது அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்பட வேண்டும் என எதிர்பார்க் கப்படுகிறது.

**இறைமை:** அரசின் முக்கிய கூறுகளுள் ஒன்று இறைமையாகும். இறைமை என்பது உயர்ந்த அதிகாரம், மேலான அதிகாரம் என்ற பொருளினைக் கொண்டது. அரசு குடிமக்கள் மீது சட்டத்தினைப் பிரயோகித்துச் செயற்படுவதற்குள்ள அதிகாரமே இறைமையாகும். அரசு இறைமை அதிகாரத்தினைக் கொண்டிருப்பதனாலேயே அது ஏனைய அமைப்புக்களிலிருந்தும் உயர்வானதாகக் கருதப்படுகிறது. அரசுகள் ஆள்புலம், மக்கட் தொகை என்பவற்றில் வேறுபட்டபோதிலும் இறைமை அதிகாரத்தினைப் பொறுத்து அவை சமமானவையாகும். இருப்பினும் தற்காலத்தில் அரச இறைமை தொடர்பாக பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

**சர்வதேச அங்கீகாரம்:** ஆள்புலம், மக்கள், அரசாங்கம், இறைமை ஆகிய நான்கும் அரசின் அடிப்படைக் கூறுகளாகும். எனினும் சர்வதேசப் பரப்பில் ஒரு அரசு சட்டபூர்வமான அரசாகத் தொழிற்படுவதற்கு அவ்வரசு சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற்றிருக்க வேண்டும். புதிய அரசுகள் ஏனைய அரசுகளுடன் இராஜதந்திர உறவுகளை விஸ்தரித்தல், சர்வதேச நிறுவனங்களின் அங்கீகாரத்தினை / அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளல் போன்ற வழிகளினூடாக சர்வதேச அங்கீகாரம் பெறப்படுகிறது. சமகாலத்தில் சர்வதேச அங்கீகாரத்தினைப் பெறமுடியாத அரசுகளினால் நிலைத்து நிற்க முடியாதுள்ளது. இதனால் புதிய அரசுகள் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தினை எதிர்பார்த்து நிற்கின்றன.

## 2.2 அரசின் வகிபாகம்

அரசின் பல்வேறு வகிபாகம் குறித்து பலவிதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அராஜகவாதிகள் தவிர்ந்த ஏனையோர் அரசின் அவசியத்தினை வலியுறுத்துகின்றனர். அராஜகவாதிகள், அரசு கெடுதலானது. ஆதலால் அது தேவையற்றது என்கின்றனர். புரட்சிகர சோசலிசவாதிகள்

அரசை துவம்சம் செய்ய வேண்டும் என்கின்றனர். இருப்பினும் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுவதற்கு தற்காலிக பாட்டாளி அரசு அவசியம் என்பதனை இவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். அன்ரூ ஹேவூட் (2013) குறிப்பிடும் அரச வடிவங்களின் கீழ் அரசின் வகிபாகத்தினை பின்வருமாறு நோக்கலாம்:

**குறைந்தபட்ச அரசுகள் (Minimal States):** பழம் தாராண்மைவாத கருத்தாக்கமே 'குறைந்தபட்ச அரசு' ஆகும். தனிமனித சுதந்திரத்தினை உறுதிப்படுத்தும் நோக்கம் கொண்டது அரசு. இக்கருத்து சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் வேர்விட்டுள்ளது. இவ்வரசு தனிமனித நடத்தையினைக் கட்டுப்படுத்துவதற்கான அரசின் ஆற்றலில் கவனம் செலுத்துகின்றது; தனிமனிதன் மற்றையவர்களின் உரிமையிலும் சுதந்திரத்திலும் தலையிடுவதை தடைசெய்கின்றது. அரசு ஒரு பாதுகாப்பு உறுப்பு என்றவகையில் சமூக ஒழுங்கு, சமாதானத்தினை நிறுவுகின்றது. இக்கருத்தாக்கத்தில் லொக் குறிப்பிடுவதுபோல் அரசு ஒரு 'இரவுக் காவலாளிக்கு' (night watchman) ஒப்பானதாகும். இவ்வரசின் பிரதான பணிகளாக பின்வருவன அடையாளப்படுத்தப்படுகின்றன: (1) சமூக ஒழுங்கினைப் பேணிப்பாதுகாத்தல், (2) பிரஜைகளுக்கிடையிலான உடன்படிக்கைகளின் அமுலாக்கத்தினை உறுதி செய்தல், (3) வெளிவாரியான தாக்குதல்களிலிருந்து சமூகத்தினைப் பாதுகாத்தல். 19 ஆம் நூற்றாண்டில் செயற்பட்ட ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய அரசுகள் குறைந்தபட்ச அரசுகளுக்கு உதாரணங்களாகும்.

**அபிவிருத்தி அரசுகள் (Developmental States):** கைத்தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டவை அபிவிருத்தி அரசுகளாகும். இவை பொருளாதாரத்தில் தலையீட்டினை மேற்கொள்ளும் அரசுகளாகும். யப்பான், பிரான்ஸ், ஜேர்மன் போன்ற அரசுகள் அபிவிருத்தி அரசுகளாகும். 1945 இலிருந்து யப்பான் ஓர் அபிவிருத்தி அரசாக வளர்ச்சியுற்றது. யப்பானை ஒத்த விதத்திலான செயற்பாடுகள் பிரான்சிலும் இடம்பெற்றன. பிரான்சில் வலதுசாரி, இடதுசாரி அரசாங்கங்கள் பொருளாதார திட்டமிடல், அரச பணியகம் ஆகிய இரண்டு விடயங்களில் கவனம் செலுத்தின. ஜேர்மன் போன்ற அரசுகளில் கூட்டுப் பங்காண்மையின் மூலம் பொருளாதார விருத்தி எட்டப்பட்டுள்ளது. இவ்வகை அரசில் அரசுக்கும் பொருளாதார நலன்களுக்குமிடையில் நெருக்கமான உறவு உள்ளது. கிழக்காசிய நாடுகளிலும் இத்தகைய அபிவிருத்திசார் போட்டி அரசுகள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வரசுகள் பொருளாதார வளர்ச்சிக்காக கல்வியினையும் பயிற்சியினையும் பலப்படுத்தி வருகின்றன.

**சமூக ஜனநாயக அரசுகள் (Socio-democratic States):** பரந்த சமூக மீள்கட்டுமானத்தை நோக்காகக் கொண்டு பொருளாதாரத்தில் தலையிடும் அரசுகள் சமூக ஜனநாயக அரசுகளாகும். இவ்வரசுகள் நியாயம், சமத்துவம், சமூக நீதி ஆகிய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஒஸ்ரியா, சுவீடன் போன்ற அரசுகள் இவ்வகையினுள் அடங்கும். இவ்வரசுகள் அபிவிருத்தி முன்னுரிமைகள், சமூக ஜனநாயக முன்னுரிமைகள் போன்ற விடயங்களால் வழிநடத்தப்படுகின்றன. எனினும் அபிவிருத்தியும் சமூக ஜனநாயகமும் எப்போதும் ஒன்றித்து பயணிக்கும் என்பதல்ல. நவ தாராளவாதிகளினதும் ஜனநாயக சோசலிசவாதிகளினதும் சிந்தனையே இவ்வகை அரசாகும். இவை சந்தைப் பொருளாதாரத்தில் உள்ள அநீதியையும் சமநிலையின்மையினையும் நிவர்த்தி செய்கின்றது. இவ்வகை அரசுகள் இரண்டு விடயங்களால் கவரப்பட்டுள்ளன: அவை, (1) கெயின்சியவாதம்: பொருளாதார வளர்ச்சியினையும் வேலைவாய்ப் பினையும் மேம்படுத்தும் நோக்கில் முதலாளித்துவத்தினை முகாமை செய்தல் அல்லது ஒழுங்குபடுத்துதல், (2) சமூக நல்வாழ்வு: பிரஜைகளின் சமூக நல்வாழ்வினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு தனிமனித மேம்பாட்டினை ஏற்படுத்துதல்.

**கூட்டுடைமைவாத அரசுகள் (Collectivized States):** பொருளாதாரத்தினை அரசின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சிக்கின்ற அரசுகள் கூட்டுடைமைவாத அரசுகளாகும். முன்னாள் சோவியத் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய அரசுகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். கூட்டுடைமைவாத அரசுகள் தனியார் துறையினை அகற்றி மத்தியமயப்படுத்தப்பட்ட பொருளாதார நிர்வாகத்தினை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளன. 'பொதுவுடைமை' எனும் சோசலிசத் தத்துவத்தின் மேல் இவ்வகை அரசுகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வகை அரசு பாரம்பரிய மார்க்சியவாதத்தின் அரசு குறித்த சித்தாந்தத்திலிருந்து மாறுபட்டது. அரச அதிகாரம் குறித்து நேர்நிலையான கருத்தாக்கத்தினை இவ்வகை அரசுகள் வெளிப்படுத்துகின்றன. 1962 இல் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு சோவியத் ரஷ்யாவில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் அரசு முழு சோவியத் மக்களின் நலன்களுக்குமான கூட்டுடைமைவாத அரசாக மாற்றப்பட்டது.

**அனைத்தாண்மை அரசுகள் (Totalitarian States):** பொருளாதாரம் மட்டுமன்றி ஏனைய விடயங்களும் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ள அரசுகள் அனைத்தாண்மை அரசுகளாகும். ஹிட்லரின் ஜேர்மனி, முசோலினியின் இத்தாலி, ஸ்டாலினின் சோவியத்

ரஷ்யா என்பன அனைத்தாண்மை அரசுகளாகும். அனைத்தாண்மை அரசுகள் சிவில் சமூகத்தினை முழுமையாக ஆக்கிரமித்தல், சமூகம் என்ற பொறிக்குள் தனியாள் வாழ்க்கையினை ஒட்டுமொத்தமாக சிக்கவைத்தல் ஆகிய பண்புகளைக் கொண்டுள்ளன. அனைத்தாண்மை அரசுகள் அரச ஆதிக்கத்தினை பெருக்குவதையும் அரசின் பொறுப்புடைமையினை விரிவுபடுத்துவதையும் நோக்காகக் கொண்டுள்ளன.

**சமய அரசுகள் (Religious States):** நவீன அரசுகளின் தோற்றத்துடன் சமயத்திலிருந்து அரசுகளை வேறாக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது யாப்புத் திருத்தத்துடன் சமய சார்பற்ற அரசு உறுதிப்படுத்தப்பட்டது. நோர்வே, டென்மார்க், ஐக்கிய இராச்சிய அரசுகளில் சமய முன்னுரிமைகள் பேணப்படுகின்றன. எனினும் சமூக மதச்சார்பின்மையினால் மதங்களின் அரசியல் செல்வாக்கு வரையறுக் கப்பட்டுள்ளது. 1980 களுக்குப் பின்னர் அடிப்படைவாதச் சிந்தனைகளால் சமய அரசுகள் எழுச்சியடைந்துள்ளன. பாகிஸ்தான், ஈரான், நேபாளம், இலங்கை போன்ற அரசுகளில் மதத்தின் ஆதிக்கம் நிலவுகின்றது. துருக்கியில் யாப்பு ரீதியான மதச்சார்பின்மைக்குள் சமய செல்வாக்குள்ள அரசாங்கம் செயற்படுகின்றது.

## 2.3 அரசும் தேசமும்

பொதுவான பயன்பாட்டில் அரசு, தேசம் ஆகிய சொற்பதங்கள் ஒரே அர்த்தத்தினை தருகின்ற போதிலும் அவையிரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. அவற்றிற்கிடையே குறிப்பிடத்தக்க பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்வேறுபாடுகளை பின்வருமாறு நோக்கலாம்:

**மூலக்கூறுகள்:** அரசு ஆள்புலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை ஆகிய நான்கு மூலக்கூறுகளை உள்ளடக்கியதாகும். இம்மூலக்கூறுகளுள் ஒன்றில் குறை ஏற்படினும் கூட அரசு நிலைப்பதில்லை. இந்நான்கு கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டே அரசு அடையாளம் காணப்படுகின்றது. மாறாக தேசம் என்பது பொதுவான உடன்பாடு மற்றும் பலமான ஐக்கிய உணர்வினால் உந்தப்பட்ட மக்களைக் கொண்டு ஒழுங்கமைகின்றது. இதனால் பொதுவான ஆள்புலம், இனம், மதம், மொழி, ஒத்த வரலாறு, கலாசாரம் மற்றும் அரசியல் அபிலாசைகள் போன்ற கூறுகள் தேசம் ஒன்றின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. தேசத்தினைப் பொறுத்தவரையில் மேற்குறிப்பிட்ட கூறுகள் ஒவ்வொன்றும் நிலையானவையன்று. அவை மாற்றமுறக் கூடியனவாகும்.

***ஒழுங்கமைப்பு:*** *அரசு ஓர் அரசியல் ஒழுங்கமைப்பாகையினால் அது மக்களின் பாதுகாப்பு உள்ளிட்ட பொதுநலன்களை நிறைவேற்றும் பொறுப்பினைக் கொண்டது. இதனால் அரசு மனிதர்களின் வெளிவாரி (லௌகீக) நடத்தைகளுடன் தொடர்புபட்ட ஓர் ஒழுங்கமைப்பாகும். ஆனால் தேசம் என்பது சமூக, கலாசார, உளவியல் மற்றும் அரசியல் உந்துதல்களின் வெளிப்பாடாக இருப்பதனால், தேசம் மனிதர்களின் பௌதீக தேவைகளை விட உணர்வு ரீதியான விடயங்களிலேயே அதிக கவனம் செலுத்துகின்றது.*

***ஆள்புலம்:*** *வரையறுக்கப்பட்ட ஆள்புலம் அரசுக்கு இன்றியமையாததாகும். ஆள்புலத்தினைக் கொண்டே அரசின் பௌதீக தளம் வெளிப்படுத்தப் படுகின்றது. இதனால் அரசினை ஓர் ஆள்புலப் பகுதி என அழைப்பர். ஆனால் தேசத்திற்கு ஆள்புலம் அவசியமான ஒன்றல்ல. வரையறுக்கப்பட்ட ஆள்புலம் இன்றியும் தேசம் இருப்புக்கொள்ள முடியும். உதாரணமாக 1948 ஆம் ஆண்டிற்கு முன்னர் யூதர்கள் ஒரு தேசமாக செயற்பட்ட போதிலும் 1948 இல் இஸ்ரேலிய அரசு உருவாக்கப்படும் வரை அவர்களுக்கான ஓர் ஆள்புலப் பிரதேசம் இருக்கவில்லை.*

***இறைமை:*** *இறைமை அரசின் மிக அடிப்படையான கூறுகளுள் ஒன்றாகும். இதனால் இறைமையினை அரசின் ஆன்மா என அழைப்பர். ஓர் அரசு தனது இறைமையினை இழந்து விடுவதன் மூலம் அதன் இருப்பு கேள்விக்குள்ளாகின்றது. அதேவேளை, அரசினை ஏனைய அமைப்புக்களிலிருந்து வேறுபடுத்தும் ஓர் அடிப்படையாகவும் இறைமை உள்ளது. ஆனால் தேசத்திற்கு இறைமை அவசியமானதல்ல. அது உணர்வு ரீதியான உந்துதல்களால் பிணைக்கப்பட்டதாகும். எடுத்துக்காட்டாக 1947 ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்தியா என்ற ஒரு தேசம் இருந்தபோதிலும் அது இறைமையினைக் கொண்டிராத காரணத்தினால் அது சுயாதீனமானதொரு அரசாகக் கணிக்கப்படவில்லை.*

***பரவல்:*** *அரசு ஒரு குறிப்பிட்ட ஆள்புலப் பிரதேசத்தினுள் வரையறுக் கப்பட்டதாகும். அதனது ஆள்புலத்தினை விஸ்தரிப்பதும் குறைப்பதும் மிகவும் சிக்கலானதாகும். ஆனால் தேசம் ஒரு குறிப்பிட்ட ஆள்புலத்தினுள் மட்டும் வரையறுக்கப்படுவதில்லை. அவற்றின் ஆள்புலம் குறிப்பிட்ட அரசின் எல்லைகளைக் கடந்து பரவலடைந்திருக்க முடியும். உதாரணமாக, பிரான்ஸ் தேசம் அதற்கென குறிப்பிட்ட ஓர் அரசினைக் கொண்டிருக் கின்றபோதிலும், பிரான்ஸ் தேசத்தவர்கள் பலர் அவ்வரசுக்கு வெளியே*

பெல்ஜியம், சுவிற்சர்லாந்து மற்றும் இத்தாலி போன்ற நாடுகளில் வாழ்கின்றனர். இதனால் அரசினை விடவும் தேசம் பரந்து விரிந்த ஒன்றாகும்.

**மக்கள்:** ஓர் அரசினுள் ஒன்றுக்கு மேற்பட்ட தேசத்தவர்கள் வசிக்க முடியும். ஆனால் ஒரு தேசத்தினுள் ஏதாவதொரு பொதுக் காரணியின் அடிப்படையில் ஒன்றுபட்ட மக்கள் மட்டுமே இருக்க முடியும். எடுத்துக்காட்டாக, சுவிற்சர்லாந்து ஓர் அரசாயினும் அங்கு ஜேர்மன், இத்தாலி மற்றும் பிரான்சிய தேசத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறே இன்றைய நவீன அரசுகள் பலவும் பல்தேசிய அரசுகளாக உள்ளன.

**இருப்பு:** அரசின் இருப்புக்கு இறைமை இன்றியமையாததாகும். ஆனால் தேசத்தின் இருப்புக்கு இறைமை அவசியமானதல்ல. இறைமை இன்றியும் தேசங்கள் இருப்புக்கொள்ள முடியும். உதாரணமாக, இரண்டாம் உலக மகா யுத்த முடிவில் ஜேர்மன் மற்றும் யப்பான் ஆகிய அரசுகள் தமது இறைமை அந்தஸ்தினை இழந்ததுடன் வெளி அதிகார சக்திகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டன. ஆனால் தேசம் என்றடிப்படையில் அவர்களால் தொடர்ந்தும் செயற்பட முடிந்ததுடன் குறிப்பிட்ட சில மாதங்களில் தமது இறைமை அந்தஸ்தினை மீளப்பெற்றுக்கொண்டனர்.

**உருவாக்கம்:** அரசு மக்களின் கூட்டு உருவாக்கமாகையால் அரசின் உருவாக்கத்தில் பௌதீகக் காரணிகள் முக்கிய பங்காற்றுகின்றன. ஆனால் தேசம் மனிதர்களுக்கிடையிலான பொது உணர்வுகளின் வெளிப்பாடாகும். இதனால் தேசத்தினை ஒரு உருவாக்கமாக அன்றி, பரிணாமமாக அழைப்பர். உதாரணமாக இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் மேற்கு ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனி என ஜேர்மன் இரண்டாகப் பிளவுபட்ட போதிலும் ஜேர்மன் ஒரு தேசம் என்ற உணர்வு தொடர்ந்தும் நிலவியது. இறுதியில் (1990 ஒக்டோபரில்) இரு பகுதிகளும் ஒன்றிணைந்து ஜேர்மனி என்ற ஓர் அரசினை உருவாக்கிக்கொண்டன.

**பலப்பிரயோகம்:** அரசு தனது ஆள்புலத்திற்குள் ஐக்கியத்தினையும் ஒருமைப்பாட்டினையும் பேணுவதற்கு அதிகாரத்தினைப் பிரயோகிக்கின்றது. அதற்காக பொலிஸ், சிவில் சேவை போன்ற அதிகாரப் பிரயோகக் கருவிகளை அரசு பயன்படுத்துகிறது. இக்கருவிகளைக் கொண்டு அரசு அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் போது அதற்கு அடிபணிவினைச் செலுத்துவது மக்களின் கடமையாகும். இதன்போது அடிபணிய

மறுப்போரைத் தண்டிப்பதற்கு அரசு அதிகாரம் பெற்றுள்ளது. ஆனால் தேசமொன்று கலாசார மற்றும் உணர்வு ரீதியான கட்டுப்பாடுகளை மட்டுமே செலுத்த முடிகின்றது.

**தன்மை:** அரசு சட்ட மற்றும் அரசியல் தன்மையுடையதாகும். ஆனால் தேசம் என்பது இன மற்றும் கலாசாரத் தன்மை வாய்ந்ததாகும். அரசின் இருப்பினைத் தீர்மானிப்பதில் சட்டமுறைத் தளம் முக்கிய பங்காற்றுகின்றது. அவ்வாறான சட்டமுறைத் தளம் தேசத்திற்கு அவசியமானதன்று. பொதுவாக தேசங்கள் சட்ட இறைமை பெற்றவையாக மாறுகின்ற போது அவை அரசு என்ற அந்தஸ்தினை அடைகின்றன.

## 2.4 அரசும் சமூகமும்

மெக் ஐவர் குறிப்பிடுவதன்படி சமூகம் என்பது ''மனித உறவுகளின் வலைப்பின்னலாகும்''. அதாவது மனித உறவுகளினால் பிணைக்கப்பட்ட மக்கள் குழுவே சமூகமாகும். அரசும் சமூகமும் மக்களைக் கொண்ட உறுப்புக்களாகையினால் அவையிரண்டுக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு நிலவுகின்ற அதேவேளை, குறிப்பிட்டுக் கூறக்கூடிய வேறுபாடுகளும் நிலவுகின்றன. அத்தகைய வேறுபாடுகளை பின்வருமாறு நோக்கலாம்:

**முறைமை:** சமூகம் மனித உறவுகளின் வலைப்பின்னலாக இருப்பதனால் சமூகம் கொண்டிருக்கும் முறைமையினை 'சமூக முறைமை' என அழைப்பர். சமூக முறைமை மிகவும் சிக்கலானதும் பரந்துபட்டதுமாகும். இச்சமூக முறைமையினுள் உள்ளடக்கப்படும் ஒரு உப முறைமையே அரசியல் முறைமையாகும். இதனால் சமூகம் வெளிப்படுத்தும் முறைமையினை 'சமூக முறைமை' என்றும் அரசு வெளிப்படுத்தும் முறைமையினை 'அரசியல் முறைமை' என்றும் அழைப்பர்.

**இயல்பு:** சமூக உருவாக்கம் மனித இயல்பில் ஒன்றித்துப்போன ஒரு விடயமாகும். அதாவது சமூக விலங்குகளாகிய மனிதன் தமக்கிடையிலான பரஸ்பர உறவுகளை ஒழுங்கமைத்துக்கொள்ளும் போது இயல்பாக உருவாகும் ஓர் அமைப்பே சமூகமாகும். ஆனால் அரசு அவ்வாறானதல்ல. அது மனிதத் தேவைகளின் நிமிர்த்தம் செயற்கையாக உருவாக்கப்படும் ஓர் அமைப்பாகும்.

**தோற்றம்:** சமூக உருவாக்கம் இயல்பான ஒன்றாகையினால் சமூகம் அரசுக்கு முன்னர் தோற்றம் பெற்றதாகும். சமூகத்தினைப் போன்று அரசின்

தோற்றமும் நீண்டகால வரலாற்றினைக் கொண்டுள்ள போதிலும் சமூகத்தின் தேவைகள் பல்கிப்பெருக ஆரம்பித்தபோதே அரசின் தேவை உணரப்பட்டது. அதிலும் குறிப்பாக சமூகங்கள் ஆள்புல ரீதியாக ஒன்றிணைக்கப்பட்ட வேளையிலேயே அரசுகள் தோற்றம்பெற ஆரம்பித்தன.

**ஒழுங்கமைவு:** கூடி வாழ்வதற்கான மனிதர்களின் இயல்பான விருப்பத்தின் வெளிப்பாடே சமூகமாகும். அடிப்படையில் சமூகம் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத மக்கள் குழுக்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் உள்ளடக்கியதுடன் அது சகல மனிதர்களினதும் பரந்துபட்ட உறவுகளின் வலைப்பின்னலை தன்னகத்தே கொண்டது. ஆனால் அரசு வரையறுக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட மக்களை மட்டுமே உள்ளடக்கியது. இதனால் அரசியல் ஒழுங்கமைவு அரசுக்கு இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

**பரப்பு:** சமூகம் அரசினை விட பரந்து விரிந்ததாகும். அது சமூக, கலாசார, பொருளாதார, அரசியல், சமயம், ஒழுக்கம் போன்ற பலவிதமான அம்சங்களை உள்ளடக்கியது. ஆனால் அரசு என்பது சமூகத்தில் செயற்படும் ஓர் அரசியல் நிறுவனம் மட்டுமாகும். அது சமூகத்தில் அதிகாரத்தினைப் பிரயோகிப்பதுடன் தொடர்புபட்டதாகும். அதனால் அரசினை சமூகத்தின் இறைமையுடைய அதிகார முறைமை என அழைக்கின்றனர்.

**முகவர்:** அரசின் பிரதான முகவராக அரசாங்கம் செயற்படுவதுடன் அதனூடாகவே அரசின் இறைமை அதிகாரமும் பிரயோகிக்கப்படுகின்றது. ஆனால் சமூகம் அவ்வாறான முகவரைக் கொண்டிருப்பதில்லை. மாறாக அது மனித உறவுகளின் தன்னியக்க முறைமையாகும். இதனால் சமூகச் செயற்பாடுகள், குறித்த சமூகத்தின் மரபுகள், வழக்காறுகள் மற்றும் நடத்தை ஒழுங்குகள் என்பவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

**இறைமை:** இறைமை அரசின் அடிப்படையான கூறுகளுள் ஒன்றாகும். இவ்விறைமை அதிகாரத்தினைக் கொண்டே ஒவ்வொரு அரசும் தத்தமது பிரஜைகள் மீதும் நிறுவனங்கள் மீதும் உச்சமான அதிகாரத்தினைப் பிரயோகிக்கின்றன. இத்தகைய உயர்ந்தபட்ச அதிகாரத்தினை சமூகம் கொண்டிருப்பதில்லை. ஏனெனில் சட்டம் மற்றும் ஒழுங்கியல் நலன்களுக்காக சமூக அதிகாரம் அரச அதிகாரத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

**ஆள்புலம்:** அரசு ஆள்புல ரீதியாக வரையறுக்கப்படுவதால் நிச்சயிக்கப்பட்ட ஆள்புலம் அரசுக்கு இன்றியமையாததாகும். ஆள்புலம் இன்றி அரசு நிலைபெற முடியாது. ஆனால் சமூகத்திற்கு வரையறுக்கப்பட்ட ஆள்புலம் அவசியமானதன்று. அது ஆள்புல எல்லைகளையும் கடந்த சமூக உறவுகளின் வலைப்பின்னலாக உள்ளது.

**பணிகள்:** சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி சமூக நீதியினை உறுதிசெய்தல் அரசின் பிரதான பணியாகும். பொதுவாக அரசு மனிதர்களின் லௌகீக நன்மைகளுக்காக செயற்படுகின்றது. ஆனால் சமூகம் இதனை விடவும் வேறுபட்ட பல்வேறு பணிகளை ஆற்றுகின்றது. சமூகம் ஆற்றும் பணிகள் ஆன்மீகம், லௌகீகம் என்ற இரு பரப்புக்குள் அடங்குகின்றன.

**மனித நடத்தை:** சமூகம் மனிதர்களின் உள்வாரி மற்றும் வெளிவாரி நடத்தைகளுடன் தொடர்புபட்டதாகும். ஆனால் அரசு மனிதர்களின் வெளிவாரி நடத்தைகளை மட்டுமே கட்டுப்படுத்துகின்றது. சமூகம் மனித நடத்தையின் எல்லாப் பரப்புக்களிலும் ஊடாட்டம் புரிவதனால் அதன் கட்டுப்பாட்டு வீச்சு பரந்ததாக உள்ளது. ஆனால் அரசு அவ்வாறானதன்று. அது மனிதர்களின் லௌகீக நலன்களைக் கருத்திற்கொண்டு சட்டங்களை இயற்றிச் செயற்படுகின்றது. இதன் மூலம் மனிதர்களின் வெளிவாரி நடத்தைகளை ஒழுங்குபடுத்தவே அரசுகள் முயற்சிக்கின்றன.

## 2.5 அரசும் சங்கங்களும்

சங்கம் என்பது குறிப்பிட்ட நலன்களை அடைந்துகொள்வதற்காக ஒன்றிணைந்த தன்னார்வ அமைப்புக்களைக் குறிக்கும். மெக்ஐவர் என்ற அறிஞர் "ஒரு குறிப்பிட்ட நோக்கம் அல்லது நோக்கங்களுக்காக ஒன்றிணைந்த தனிநபர்களைக் கொண்ட ஒரு குழுவினை" சங்கம் என அழைக்கின்றார். இத்தகைய சங்கங்கள் தொழில் சார்ந்தவையாக, வர்த்தக ரீதியிலானவையாக, அரசாங்க ஊழியர்களைக் கொண்டவையாக அமையலாம். சங்கங்கள் அரசிலிருந்து வேறுபட்ட அமைப்புக்களாகும். அவை வேறுபடும் விதத்தினை பின்வருமாறு நோக்கலாம்:

**இறைமை:** அரசு இறைமையுடைய தாபனமாகும். இவ்வதிகாரத்தினைக் கொண்டு அரசு குடிமக்கள் மீது தனது கட்டுப்பாட்டினைச் செலுத்துகின்றது. ஓர் அரசின் ஆள்புலத்தினுள் வாழ்கின்ற சகல குடிமக்களும் அரசின் இறைமை அதிகாரத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டியதுடன் அரசின் சட்டத்திற்கும் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும். அவ்வாறு சட்டத்திற்கு

கட்டுப்பட மறுப்பவர்கள் மீது பலத்தினைப் பிரயோகிப்பதற்கு அரசு தனிமுதன்மை அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. ஆனால் சங்கங்கள் அவ்வாறானவையன்று. அவை தமது அங்கத்தவர்களுக்கு எதிராக பலத்தைப் பிரயோகிக்க முடியாது. மாறாக சங்கங்களின் சட்டதிட்டங்களை மீறுகின்ற உறுப்பினர்களை குறித்த சங்கத்தின் உறுப்புரிமையிலிருந்து நீக்குகின்ற அதியுச்ச தண்டனையினையே சங்கங்களால் வழங்க முடியும்.

**நோக்கம்:** அரசின் நோக்கம் பரந்துபட்டதாகும். ஆனால் சங்கங்கள் குறுகிய நோக்கங்களைக் கொண்டுள்ளன. அரசு சட்டத்தினையும் ஒழுங்கினையும் பேணிப்பாதுகாப்பதுடன் பொருளாதார, கலாசார மற்றும் சமூக நல்வாழ்வுப் பணிகளை ஆற்றுகின்ற அதேவேளை, குடிமக்களின் நல்வாழ்விற்காக செயற்படுவதே அரசின் தலையாய கடமையாகும். இவ்வகையில் அரசின் நோக்கம் வியாபகமானதாகும். ஆனால் சங்கங்கள் வரையறுக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்டே செயற்படுகின்றன.

**அங்கத்துவம்:** அரசின் அங்கத்துவம் வலுக்கட்டாயமானதாகும். ஆனால் சங்கங்களின் அங்கத்துவம் விருப்புக்குரியதாகும். ஒரு மனிதன் பிறந்த உடனே ஏதாவது ஒரு அரசின் அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்கின்றான். இவ்வங்கத்துவம் மனித விருப்புக்கு அப்பாற்பட்டதாகும். ஆனால் சங்கங்களின் அங்கத்துவம் தன்னார்வ அடிப்படையிலானதாகும். ஒருவர் விரும்பினால் ஒரு சங்கத்தில் இணைந்துகொள்ள முடியும். விரும்பாதவிடத்து அச்சங்கத்திலிருந்து தமது உறுப்புரிமையினை விலக்கிக்கொள்ள முடியும். ஒருவர் சங்கங்களில் இணைவதனை எவரும் கட்டாயப்படுத்த முடியாது.

**வரி விதித்தல்:** அரச நிர்வாகத்திற்கு நிதி அவசியமானதாகையினால் அரசு குடிமக்கள் மீது வரிகளை விதிக்க முடியும். ஆனால் சங்கங்கள் அவ்வாறு அரசின் குடிமக்கள் மீது வரிகளை விதிக்க முடியாது. அரசுகள் விதிக்கும் வரிகளை எந்தவொரு பிரஜையும் செலுத்தாது இருக்கமுடியாது. அவ்வாறு வரி செலுத்தத் தவறும் பட்சத்தில் பலத்தினைப் பிரயோகித்தேனும் அரசு வரியினைப் பெற்றுக்கொள்ளும். சங்கங்களது நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்துவதற்கு நிதி அவசியமான ஒரு முன்நிபந்தனையாக உள்ளபோதிலும், அதனை திரட்டுவதற்காக ஓர் அரசின் பிரஜைகள் மீது சங்கங்கள் வரியினை திணிக்க முடியாது.

**ஆள்புலம்:** அரசு ஓர் ஆள்புலம்சார் அமைப்பாகும். ஆள்புலம் அரசுக்கு இன்றியமையாத ஓர் அம்சம். ஒவ்வொரு அரசும் வரையறுக்கப்பட்ட

ஆள்புலப் பிரதேசத்தினைக் கொண்டிருப்பதுடன் அவ்வாள்புல பிரதேசத்தில் அரசு சட்டங்களைப் பிரயோகித்துச் செயற்படுகின்றது. ஆனால் சங்கங்கள் தன்னார்வ அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்களாகும். அவற்றுக்கு இறைமை அதிகாரம் இருப்பதில்லை. அவை எப்போதும் அரசுகளின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டியவை. இதனால் சங்கங்களுக்கு ஆள்புலம் அவசியமானதல்ல. அவை குறிப்பிட்ட ஆள்புலங்களையும் தாண்டி செயற்படக்கூடியவை.

**தன்மை:** அரசு தேசியத் தன்மையினைப் பிரதிபலிக்கின்றது. நவீன அரசுகள் ஒரு தேசம் ஓர் அரசு என்ற தத்துவத்தின் மீது நிறுவப்பட்டவையாகும். ஆனால் சங்கங்கள் பிரதேச அல்லது தேசிய அல்லது சர்வதேசத் தன்மையினைக் கொண்டிருக்கலாம். சமகால உலகில் தேசிய எல்லைகளைக் கடந்து செயற்படும் சர்வதேச சங்கங்கள் பலவற்றை நாம் காண்கின்றோம். ஐக்கிய நாடுகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முதலியன சர்வதேச ரீதியாகச் செயற்படும் சங்கங்களுக்கு சிறந்த உதாரணங்களாகும்.

**நிலைத்திருப்பு**: அரசு ஒரு நிலையான அமைப்பாகும். அரச தத்துவத்தினை இழக்கும் வரை அரசு தொடர்ந்தும் இருப்புக்கொள்ளும். ஆனால் சங்கங்கள் தற்காலிகத் தன்மையுடையனவாகும். அவை தமது நோக்கத்தினை அடைந்துகொண்டதன் பேரில் கலைக்கப்படலாம் அல்லது புதிய நோக்கங்களை வகுத்துக்கொண்டு செயற்படலாம்.

**நிலை:** அரசு இறைமை அதிகாரத்தினைக் கொண்டிருப்பதனால் அது ஓர் உயர்வான அமைப்பாகும். ஆனால் இதர சங்கங்கள் அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டவையாகும். சங்கங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான விதிகளை அரசுகளே உருவாக்குகின்றன. இவ்விதிகளைத் தாண்டி சங்கங்களால் செயற்பட முடிவதில்லை.

## 2.6 அரசும் அரசாங்கமும்

நடைமுறையில் அரசு, அரசாங்கம் ஆகிய இரு சொற்பதங்களும் ஒன்றுக்கொன்று பதிலீடாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பிரான்சின் 14 ஆம் லூயி மன்னன் 'நான் தான் அரசு' என்ற கருத்தினைப் பயன்படுத்தியதன் மூலம் அரசும் அரசாங்கமும் ஒன்று என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். அவ்வாறே இங்கிலாந்தின் ஸ்டுவார்ட் மன்னன் போன்றோரும் அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே எவ்வித வேறுபாட்டினையும் காணவில்லை.

எனினும் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜோன் லொக் என்ற அறிஞர் முதன் முதலாக அரசுக்கும் அரசாங்கத்திற்குமிடையே தெளிவான வேறுபாடுகளை அடையாளப்படுத்தினார். இதன்படி அரசும் அரசாங்கமும் வேறுபடும் விதத்தினைப் பின்வருமாறு நோக்கலாம்.

**அமைப்பு:** அரசு என்பது ஆள்புலம், மக்கள், அரசாங்கம், இறைமை ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டதாகும். ஆனால் அரசாங்கம் என்பது அவ்வரசின் ஒரு பகுதி மட்டுமே ஆகும். அரசாங்கம் அரசின் இன்றியமையாத ஒரு பகுதியாக இருப்பினும் அவ்வரசாங்கம் இன்றி அரசினால் செயற்பட முடியாது.

**அதிகாரம்:** அரசுக்கு இறைமை அதிகாரம் உண்டு. அரசாங்கத்திற்கு அவ்வதிகாரம் இல்லை. அரசு ஒப்படைக்கும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தினையே அரசாங்கம் பெறுகின்றது. அவ்வரையறுக்கப்பட்ட அதிகாரத்தினைக் கொண்டே அரசாங்கம் குடிமக்கள் மீது சட்டங்களை இயற்றிச் செயற்படுத்துகின்றது.

**நிரந்தரத்துவம்:** அரசு என்பது நிரந்தரமான, என்றும் தொடரும் அமைப்பாகும். ஆனால் அரசாங்கமானது தற்காலிகத் தன்மையுடையதாகும். அரசினை காலத்திற்குக் காலம் மாற்றியமைக்க முடிவதில்லை. ஆனால் அரசாங்கத்தினை மக்கள் காலத்திற்குக் காலம் மாற்றியமைக்க முடியும். அரசைக் கலைக்க முடியாது. ஆனால் அரசாங்கத்தினைக் கலைக்க முடியும்.

**தன்மை:** அரசு என்பது கருத்தை ஒட்டியதாகும். அதாவது எண்ணக்கரு ரீதியானதாகும். அது புலனுணர்வுகளுக்கு அப்பாற்பட்டது. அது ஒரு இலட்சிய மாதிரியாகும். ஆனால் அரசாங்கம் புலக்காட்சிக்கு உட்பட்ட ஒரு திட அமைப்பாகும். அது நடைமுறைச் செயற்பாடுடைய உயிருள்ள நிறுவனமாகும்.

**முகவர்:** அரசின் முகவரே அரசாங்கமாகும். அரசின் முகவர் என்றவகையில் அரசாங்கம் அரசின் அதிகாரத்தினைப் பிரயோகிப்பதுடன் அரசின் சார்பாக சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துகிறது. இதன்படி அரசு எஜமான் எனவும் அரசாங்கம் அதன் முகவர் எனவும் அழைக்கப்படுகிறன.

**உறுப்புரிமை:** ஓர் அரசில் வாழும் சகலரும் அவ்வரசின் உறுப்பினர் களாவர். அரசின் உறுப்புரிமை வலுக்கட்டாயமானதாகும். ஒருவர் பிறந்தது

முதல் ஏதேனும் ஓர் அரசின் உறுப்பினராகின்றார். ஒருவர் அரசின் உறுப்புரிமையிலிருந்து விலகுவது கடினமானது. ஆனால் ஓர் அரசினுள் வாழும் சகலரும் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் அல்ல. அவர்களுள் சிலர் மட்டுமே அரசாங்கத்தின் உறுப்பினர்களாவர். அவ்வாறே ஒருவர் அரசாங்க உறுப்புரிமையிலிருந்து தன்னை விலக்கிக் கொள்வதும் சிரமமானதல்ல.

**ஆள்புலம்:** அரசின் இருப்புக்கு நிச்சயிக்கப்பட்ட ஆள்புலம் இன்றியமையாததாகும். ஆள்புலமின்றி அரசுகள் நிலைகொள்ள முடியாது. அரசுகள் ஆள்புலத்தினை இழக்கும் போது அவை அரச தத்துவத்தினை இழக்கின்றன. ஆனால் அரசாங்கத்திற்கு ஆள்புலம் அவசியமானதல்ல. ஓர் அரசின் ஆள்புலத்திற்கு வெளியேயும் அரசாங்கம் இருப்புக் கொள்ள முடியும். உள்நாட்டு யுத்தம், புரட்சி, கிளர்ச்சிகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் குறித்த அரசின் அரசாங்கத் தலைவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகின்றன.

**கிளர்ச்சி:** அரசு கருப்பொருள் சார்ந்த ஒன்றாக இருப்பதனால் அதற்கு எதிராக கிளர்ச்சி அல்லது புரட்சிகளை மேற்கொள்ள முடியாது. ஆனால் அரசாங்கம் அரசின் செயற்பாட்டுக் கரமாக இருப்பதனால் அதற்கு எதிராக மக்கள் கிளர்ச்சி அல்லது புரட்சியினை மேற்கொண்டு அரசாங்கத்தினை மாற்றியமைக்க முடியும். உலகில் பல அரசாங்கங்கள் கிளர்ச்சிகள் அல்லது புரட்சிகள் மூலம் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

**பிரதிநிதித்துவம்:** அரசு முழுச் சமூகத்திற்குமானதாகும். அது ஒரு குறிப்பிட்ட ஆள்புலத்தினுள் வாழும் சகல பிரஜைகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஆனால் அரசாங்கம் அவ்வாறானதன்று. அது ஓர் அரசில் வாழும் குடிமக்களில் ஒரு பகுதியினரின் ஆதரவை மட்டுமே பெற்றுக்கொள்கிறது. இதனால் அரசாங்கம் பிரதிநிதித்துவம் செய்யும் குடிமக்களின் எண்ணிக்கை குறைவானதாகும்.

**வடிவம்:** சிறிய அரசுகளாயினும் பெரிய அரசுகளாயினும் சகல அரசுகளும் சமமானவையாக இருப்பதுடன் அரசுகள் அனைத்தும் நான்கு அடிப்படையான மூலக்கூறுகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அரசாங்கம் அவ்வாறானதன்று. அது அரசுக்கு அரசு வேறுபடுகின்றது. இதன்படி தற்காலத்தில் ஜனநாயக அரசாங்கம், சோசலிச அரசாங்கம், சர்வாதிகார அரசாங்கம் என அரசாங்கங்கள் பல வடிவங்களில் செயற்படுகின்றன. நடைமுறையில் அரசாங்க வடிவங்களைக் கொண்டே அரசுகள் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றன.

**பிரதான சொற்கள்**

அரசு, தேசம், சமூகம், சங்கம், அரசாங்கம்

**பயிற்சி வினாக்கள்**

அரசு பற்றிய எண்ணக்கருவினை வரையறை செய்து, நவீன அரசின் வகிபாகம் குறித்து பரிசீலிக்குக.

பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.
(அ) அரசும் சமூகமும்
(ஆ) அரசும் ஏனைய சமூக நிறுவனங்களும்
(இ) அரசும் அரசாங்கமும்

அரசின் அடிப்படைக்கூறுகளை அடையாளம் கண்டு, அரசின் முக்கியத்துவம் குறித்துக் கருத்துரைக்குக.

அரசு சமூக சங்கங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பது பற்றிக் கருத்துரைக்குக.

அரசு சமூகத்திற்கு அவசியமானதா? என்ற வினாவுக்கு விமர்சன ரீதியாக விடையளிக்குக.

**உசாத்துணைகள்**

Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

MacIver, (1990). ***The modern state***. New Jersey: Prentice Hall.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

# அத்தியாயம் - 03

# அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள்

**உள்ளடக்கங்கள்**


| | | |
|---|---|---|
| **3.1** | **தெய்வீக உரிமைக் கோட்பாடு** | **34** |
| **3.2** | **சமூக ஒப்பந்தக் கோட்பாடு** | **35** |
| **3.3** | **பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு** | **40** |
| **3.4** | **மார்க்சியக் கோட்பாடு** | **41** |


## அத்தியாய சுருக்கம்

*அரசின் தோற்றம் பற்றிய கருத்தினை விளக்கும் பல கோட்பாடுகள் உள்ளன. தந்தைவழி - தாய்வழிக் கோட்பாடுகள், பலவந்தக் கோட்பாடு, தெய்வீக உரிமைக் கோட்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாடு, பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு, மார்க்சியக் கோட்பாடு என அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளின் பட்டியல் நீண்டு செல்கிறது. தெய்வீக உரிமைக் கோட்பாடு அரசு கடவுகளின் உருவாக்கம், தந்தை - தாய்வழிக் கோட்பாடுகள் - அரசு தந்தை அல்லது தாய்வழி ஆதிக்கத்தின் நீட்சி, வலிமைக் கோட்பாடு - அரசு பலத்தின் வெளிப்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாடு - அரசு சமூக ஒப்பந்தத்தின் விளைவு, பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு - அரசு சமூகப் படிமுறை வளர்ச்சியின் பெறுபேறு, மார்க்சியக் கோட்பாடு - அரசு வர்க்கப் போராட்டத்தின் விளைவு என்ற கருத்துக்களை முன்வைத்துள்ளன.*

## அத்தியாயத்தின் நோக்கம்

*அரசு எவ்வாறு தோற்றம் பெற்றது என்பது பற்றிய பல்வேறு கோட்பாட்டு விளக்கங்கள் குறித்து தெளிவான விளக்கத்தினை வழங்குவது இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.*

## கற்றல் பெறுபேறுகள்

*இவ்வத்தியாயத்தினை வெற்றிகரமாக கற்றுத் தேறுவதன் மூலம் அரசின் தோற்றம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட தெய்வீக உரிமைக் கோட்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாடு, மார்க்சியக் கோட்பாடு, பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு என்பவற்றின் உள்ளடக்க அம்ங்கள் பற்றிய தெளிவினை மாணவர்கள் பெற்றுக்கொள்வர்.*

### 3.1 தெய்வீக உரிமைக் கோட்பாடு

அரசின் தோற்றம் பற்றிய மிகப் பழைமையான கோட்பாடுகளுள் தெய்வீக உரிமைக் கோட்பாடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக்கோட்பாடு கிறிஸ்தவ மதத்தின் எழுச்சியினை அடுத்து முக்கிய இடத்தினைப் பிடித்தது. கிறிஸ்தவ பாதிரியார்களும் திருச்சபைத் தலைவர்களும் இக் கோட்பாட்டுக்கு ஆதரவாகப் பேசினர்.

இக்கோட்பாட்டின் பிரகாரம் அரசு கடவுளின் ஆன்மீக நிறுவனமும் பொது நல்வாழ்விற்காக கடவுளினால் உருவாக்கப்பட்டதுமாகும். அவ்வரசின் குடிமக்களை கடவுள் தாமாகவோ அல்லது அவனது பிரதிநிதியின் ஊடாகவோ நிர்வகிக்கின்றான். இதன்படி மன்னன் கடவுளின் பிரதிநிதியாகின்றான். அவன் கடவுளுக்கு மட்டுமே பொறுப்புடையவன்; மக்களுக்கு அல்ல.

மன்னனின் கட்டளைகளுக்கு அடிபணிவது மக்களின் தலையாய கடமையாகும். மன்னனை எதிர்ப்பது கடவுளை எதிர்ப்பதற்கு சமமானது. மன்னன் சர்வவல்லமை பொருந்தியவனாக இருப்பினும் மன்னனை எதிர்க்கும் உரிமை மக்களுக்கு இல்லை. மன்னனுக்கு அடிபணியாமை கடவுளுக்கு அடிபணியாமையைக் குறிக்கும். மன்னனின் எதிர்ப்பு கடவுளின் எதிர்ப்பாகும். மன்னனின் செயல்களை மக்கள் கேள்விக்குட்படுத்த முடியாது. இதனால் தெய்வீக உரிமைக் கோட்பாடு மக்களையும் சட்டத்தினையும் விட கடவுளையும் அவனது நிர்வாகத்தையும் மேன்மைமிக்கதாக கருதுகின்றது.

மன்னனின் விருப்புகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கவோ அவனது அதிகாரப் பிரயோகத்தினை தடைசெய்யவோ முடியுமான எந்தவொரு அதிகாரத்துவ நிறுவனமும் இப்பூவுலகில் இல்லை. மாறாக மன்னனின் அதிகாரத்திற்கு எதிராக கிளர்ந்தெழுவது நியாயப்படுத்தப்பட முடியாத ஒரு துர்ச்செயலாகும். எனவேதான் கடவுளின் பூவுலக பிரதிநிதியாகிய மன்னனின் ஆணைகளுக்கு அடிபணிவது மக்களின் தலையாய ஒழுக்கக் கடமையாகும். இதனால் மன்னனின் ஆணைகளுக்கு அடிபணிய மறுப்பது சட்ட ரீதியான ஒரு குற்றம் மட்டுமன்றி கடவுளை நிந்திக்கும் ஒரு பாவமும் ஆகும்.

சமூகத்தில் மத நம்பிக்கை முக்கியத்துவம் பெற்றிருந்த காலப்பகுதியில் செல்வாக்குச் செலுத்திய இக்கோட்பாடு 16 ஆம் நூற்றாண்டின் பின்னர் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. தெய்வீக உரிமைக் கோட்பாட்டிற்கு எதிராக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன்படி இக்கோட்பாடு ஜனநாயகத்தினை எதிர்ப்பதுடன் பூரண முடியாட்சியினை கண்மூடித்தனமாகப்

பின்பற்றுகின்றது. அதேவேளை, கடவுள் அருள் நிறைந்தவர், நீதியானவர் எனும் போது கொடுங்கோன்மையான ஆட்சியாளர்களை அவரது பிரதிநிதியாக நியமிப்பது ஏற்புடையதன்று என்ற விமர்சனமும் முன்வைக்கப்படுகிறது.

## 3.2 சமூக ஒப்பந்தக் கோட்பாடு

18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் செல்வாக்குச் செலுத்திய அரசியல் கோட்பாடுகளுள் சமூக ஒப்பந்தக் கோட்பாடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக்கோட்பாடு நவீன அரசியல் கோட்பாடுகளின் உருவாக்கம் மற்றும் நடைமுறைகளுக்கு பங்களிப்புச் செய்ததுடன் அரசின் தோற்றம் தொடர்பான விளக்கங்களை மீள் வரையறை செய்தது.

அரசியலில் பழம் பெரும் கோட்பாடுகளுள் ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் சமூக ஒப்பந்தக் கோட்பாடு தெய்வீக உரிமைக் கோட்பாட்டிற்கு எதிராகத் தோற்றம் பெற்றதாகும். இக்கோட்பாட்டின் பிரகாரம் அரசு கடவுளினால் உருவாக்கப்பட்டதன்று; அது குறிப்பிட்ட சில சமூக சூழ்நிலைகளில் மக்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒழுங்கமைக்கப்பட்டதாகும்.

சமூக ஒப்பந்தக் கோட்பாடு அரசின் தோற்றம் தொடர்பான விளக்கங்களை வழங்குவதுடன் ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையிலான பரஸ்பர உறவுகளையும் எடுத்துக்காட்டுகின்றது. அதேவேளை, அரசு ஒழுங்கமைக்கப்படுவதற்கு முன்பு மனிதன் இயற்கை நிலையில் வாழ்ந்தான் என்ற வரலாற்று விளக்கமும் இக்கோட்பாட்டில் தரப்பட்டுள்ளன.

இக்கோட்பாடு இரண்டு பிரதான எடுகோள்களைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று ‘இயற்கை நிலை’ (nature of state), மற்றையது ‘ஒப்பந்தம்’ (contract) ஆகும். இங்கு இயற்கை நிலை என்பது அரசு தோற்றம் பெறுவதற்கு முன்புள்ள நிலை என்றும், ஒப்பந்தம் என்பது ஒழுங்கமைந்த சமூக மற்றும் அரசியல் முறைமையினை உருவாக்கிக்கொள்வதற்கான உடன்பாடு எனவும் பொருள்படும். இவ்வுடன்பாடு சமூக அல்லது அரசியல் ரீதியானது எனக்கூறும் கில்கிறிஸ்ட், அது சிவில் சமூக முறையின் ஆரம்பத்தினைக் குறிக்கின்றது என்கிறார்.

16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் ரிச்சர்ட் ஹூக்கர் (Richard Hooker), ஹியூகோ குரோசியஸ் (Hugo Grotious), மில்டன் (Milton) முதலியவர்களின் பங்களிப்புடன் தோற்றம் பெற்ற இக்கோட்பாடு 18 ஆம் நூற்றாண்டில் ஹொப்ஸ் (Hobbes), லொக் (Locke), ரூசோ (Rousseau) ஆகியோரின் பங்களிப்புடன் மேலும் வளர்ச்சியுற்றது.

சமூக ஒப்பந்தக் கோட்பாட்டுத் தத்துவங்கள் பற்றி பலர் கருத்துக்கூறியுள்ள போதிலும் ெ ஹாப்ஸ், லொக், ரூசோ ஆகியயோர்களே பிரதானமானவர்கள். இம்மூவரினதும் கோட்பாட்டாக்கம் என்பது மனிதர்களின் பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. எனினும் அவர்களது கோட்பாடு விபரிக்கப்பட்ட விதமும் சிந்தனைகளும் வேறுபட்டவையாகும்.

ஹொப்ஸினைப் பொறுத்தவரையில் இயற்கை நிலை என்பது மிகவும் மோசமானது. அந்நிலையில் 'பலம் சரியானது' (might is right) என்ற தத்துவமே இயற்கை மனிதனின் வழிகாட்டி நெறியாக விளங்கியது. இதனால் மனித வாழ்க்கை விலங்குகளின் வாழ்க்கைக்கு ஒப்பானதாக இருந்தது. ஒருவரை ஒருவர் பகைவர்களாக நோக்கினர். இதன்போது ஒவ்வொருவரினதும் பாதுகாப்பினை உறுதிசெய்யத்தக்க அரச ஒழுங்கமைப்பொன்று இருக்க வில்லை. மொத்தத்தில் இயற்கை நிலை மிகவும் 'கொடுங்கோன்மை' (leviathan) மிக்கதாகும்.

லொக்கினைப் பொறுத்தவரையில் மனித வாழ்வின் ஆரம்பம் அமைதியானதும் மகிழ்ச்சிகரமானதுமாகும். இயற்கைச் சட்டங்கள் மனிதன் வாழ்வதற்கும் சொத்துக்களை சேகரிப்பதற்கும் சுதந்திரத்தினை அனுபவிப்பதற்குமான உரிமையினை வழங்கியிருந்தன. இதன் மூலம் மனிதன் மிகவும் இயல்பான வாழ்க்கையினை வாழ்ந்து வந்தான். எனினும் இக்காலத்தில் இயற்கை உரிமைகளை ஒழுங்குபடுத்தவும் வியாக்கியானம் செய்யவும் அரசாங்க மொன்று இருக்கவில்லை. ஒவ்வொருவரும் தாம் விரும்பியவாறு இயற்கை உரிமைகளுக்கு விளக்கம் கொடுத்தனர். இதனால் இயற்கை நிலையில் குழப்பம் ஏற்பட்டது.

ரூசோவினைப் பொறுத்தவரையில் இயற்கை நிலை இலட்சியபூர்வமான ஒன்றாக விளங்கியது. இங்கு மனிதர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். எனினும் பின்நாட்களில் ஏற்பட்ட குடித்தொகை வளர்ச்சி மற்றும் சொத்துப் பற்றிய தகராறுகள் பல்வேறு மோதல்களுக்கு வழிவிட்டிருந்தன. அம்மோதல்களே மனிதர்களை சமூக ஒப்பந்தத்திற்கு இட்டுச்சென்றது.

மேற்குறிப்பிட்டவாறு ஹொப்ஸ், லொக், ரூசோ ஆகிய மூன்று சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களும் இயற்கை மனிதனின் நிலை குறித்து வித்தியாசமான விளக்கங்களைக் கொடுத்துள்ளனர். எனினும் இம்மூவரும் மனிதன் இயற்கை நிலையில் வாழமுடியாது என்று கருதியதனாலேயே அவன் ஒப்பந்தத்திற்கு சென்றான் என்பதனை ஏற்றுக்கொள்கின்றனர்.

ஹொப்ஸ் மற்றும் ரூசோ ஆகியோர் ஒரு சமூக ஒப்பந்தம் பற்றி மட்டுமே கருத்துக்கூறியுள்ள அதேவேளை, ஜோன் லொக் இரு வகையான ஒப்பந்தங்களைக் குறிப்பிடுகின்றார்.

ஹொப்ஸின் விளக்கத்தின்படி மனிதர்கள் ஒரு சமூக ஒப்பந்தத்திற்குள் நுழைந்ததன் மூலம் இயற்கை நிலையினை முடிவுக்குக் கொண்டு வந்தனர். இவ்வொப்பந்தத்தின் மூலமே புதிய சிவில் சமூகம் தோற்றுவிக்கப்பட்டது. அதேவேளை குறித்த சமூகத்தின் ஆட்சியாளர்களும் அவ்வொப்பந்தத்தின் விளைவாக உருவானவர்களே. மாறாக அவர்கள் ஒப்பந்தத்தின் கட்சிக்காரர்கள் அல்ல. இதனால் ஒப்பந்த விதிகளை அனுசரித்துச் செயற்படுவதற்கான கடப்பாடு ஆட்சியாளர்களுக்கு இல்லை. ஒப்பந்தத்தின் மூலம் மக்கள் தமது அதிகாரம் அனைத்தையும் மன்னனிடம் ஒப்படைக்கின்றனர். இவ்வழியில் ஹொப்ஸ் பூரண முடியாட்சியினை (absolute monarchy) வலியுறுத்துகின்றார்.

லொக்கினது கருத்தின்படி இயற்கை மனிதர்கள் சமூக மற்றும் அரசியல் என இரு ஒப்பந்தங்களைச் செய்தனர். இங்கு முதலாவது ஒப்பந்தம் அரசியல் சமூக உருவாக்கத்தினையும் இரண்டாவது ஒப்பந்தம் அரசாங்க அமைவினையும் குறித்து நிற்கின்றது. இவ்விரு ஒப்பந்தங்கள் காரணமாக மனிதர்கள் தமது சகல உரிமைகளையும் மன்னனிடம் கையளிக்கவில்லை. வாழ்வுரிமை, சொத்துரிமை, பாதுகாப்புரிமை என்பன மட்டுமே மன்னனிடம் கொடுக்கப்பட்டன. இதன் மூலம் மன்னன் மக்களின் நம்பிக்கைப் பொறுப்பாளராக மட்டுமே கருதப்படுகின்றான். மன்னன் மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தத் தவறினால் அம்மன்னனை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கு ஒப்பந்தத்தின் மூலம் மக்கள் உரிமை பெற்றிருந்தனர். இதிலிருந்து லொக் வரையறுக்கப்பட்ட முடியாட்சியினை (constitutional monarchy) வலியுறுத்துகின்றார்.

ரூசோவின் எழுத்துக்களின்படி மனிதர்கள் தமது சகல உரிமைகளையும் சமூகத்திற்கு இடமாற்றியதன் மூலம் இயற்கை ஒழுங்கினை முடிவுக்குக் கொண்டுவந்தனர். இச்சமூகத்தின் உண்மையான விருப்பம் 'பொது விருப்பம்' (general will) ஆகும். இப்பொது விருப்பம் அதி உச்சமானது (sovereign). அதுவே அரசாங்க உருவாக்கத்திற்கும் காரணமாக அமைகின்றது. இதனால் அரசாங்கம் என்பது பொது விருப்பத்தின் முகவராகும். இந்தவகையில் ரூசோ மக்கள் இறைமையினை அடிப்படையாகக் கொண்ட நேரடி ஜனநாயகத்தினை (direct democracy) வலியுறுத்துகின்றார்.

சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களது கருத்துக்களை பின்வருமாறு ஒப்பிட்டு வேறுபடுத்தலாம்.

மனிதனின் தன்மை: ஹொப்ஸ்: மனிதன் இயல்பிலேயே சுயநலமானவன் - சண்டையிடுபவன். லொக்: மனிதன் பகுத்தறிவுடைய ஒரு பிராணி. - புத்திக்கூர்மையுடையவன். ரூசோ: மனிதன் தெய்வீகப் படைப்பு - நல்ல பண்பினைக் கொண்டவன்.

இயற்கை நிலை: ஹொப்ஸ்: காட்டுமிராண்டித்தனமானது. பலமே சரியானது என நம்பப்பட்டது. லொக்: சுதந்திரமானதும் சமத்துவமானதுமாகும். ரூசோ: எளிமையானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் இருந்தது.

இயற்கைச் சட்டம்: ஹொப்ஸ்: இயற்கை நிலையில் சட்டம் என்ற ஒன்று இருக்கவில்லை. சுய பாதுகாப்புரிமை இருந்தது. லொக்: மனிதர்கள் இயற்கை சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள். ரூசோ: மனிதர்கள் சட்டத்தின்படியன்றி மனச்சாட்சியின்படியே செயற்பட்டனர்.

இயற்கை உரிமைகள்: ஹொப்ஸ்: இயற்கை உரிமை என்ற ஒன்று இருக்கவில்லை. லொக்: உயிர்வாழ்தல், சொத்து, சுதந்திரம் என்பவற்றிற்கான உரிமை பெற்றிருந்தனர். ரூசோ: இயற்கை நிலையில் எல்லா மனிதர்களும் சமமானவர்களும் சுதந்திரமானவர்களுமாவர்.

இயற்கை நிலையின் முடிவுக்கான காரணங்கள்: ஹொப்ஸ்: இயற்கை நிலையின் பாதுகாப்பற்ற தன்மை. லொக்: சட்டத்தினையும் ஒழுங்கினையும் பாதுகாப்பதற்கான ஆட்சித் தாபனமின்மை. ரூசோ: பகுத்தறிவு, விவசாய தொழில்நுட்ப முன்னேற்றம், சனத்தொகைப் பெருக்கம், நாகரீக வளர்ச்சி.

சிவில் சமூகத்தின் தேவைப்பாடு: ஹொப்ஸ்: இயற்கையின் பாதுகாப்பற்ற நிலையிலிருந்து விடுபடுதல். லொக்: வாழ்க்கை, சொத்து, சுதந்திரம் என்பவற்றினைப் பாதுகாப்பதற்கான தேவைப்பாடு. ரூசோ: மனிதர்கள் அதிக சுதந்திரத்தினை அனுபவிப்பதற்கான தேவைப்பாடு.

ஒப்பந்தத்தின் இயல்பு: ஹொப்ஸ்: மக்கள் ஒரு ஒப்பந்தத்தினுள் நுழைந்து அரசாங்கத்தினை தாபித்தனர். லொக்: மக்கள் சமூக ஒப்பந்தம், அரசியல் ஒப்பந்தம் என இரு ஒப்பந்தங்களைச் செய்தனர். ரூசோ: சிவில் சமூகத்தினை தாபிப்பதற்கான ஒரு ஒப்பந்தத்தினையே செய்தனர்.

ஒப்பந்தத்தின் தரப்புக்கள்: ஹொப்ஸ்: இயற்கை மனிதர்களே ஒப்பந்தத்தின் கட்சிக்காரர்கள். லொக்: இயற்கை மனிதர்களும் ஆட்சியாளர்களும் ஒப்பந்தத்தின் கட்சிக்காரர்கள். ரூசோ: பொது விருப்பின் பங்குதாரர்கள் மக்களே.

உரிமைகளின் ஒப்படைப்பு: ஹொப்ஸ்: இறையிடம் உரிமை ஒப்படைக்கப் படுகின்றது. மன்னனே இறைமையாளன். லொக்: சில உரிமைகளே அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ரூசோ: இறையிடம் உரிமை ஒப்படைக்கப்படுகின்றது. பொதுச் சித்தமே இறைமையாளன்.

அரசினையும் அரசாங்கத்தினையும் வேறுபடுத்தல்:: ஹொப்ஸ்: அரசினையும் அரசாங்கத்தினையும் வேறுபடுத்தவில்லை. லொக்: அரசினையும் அரசாங்கத்தினையும் வேறுபடுத்துகின்றார். ரூசோ: அரசினையும் அரசாங்கத்தினையும் வேறுபடுத்துகின்றார்.

இறைமையின் இயல்பு: ஹொப்ஸ்: இறையாளன் பூரண அதிகாரத்தினைக் கொண்டவன் - பூரண முடியாட்சி. லொக்: இறையாளனின் அதிகாரம் வரையறுக்கப்பட்டது - வரையறுக்கப்பட்ட முடியாட்சி. ரூசோ: பொதுச் சித்தமே இறை. அரசாங்கம் பொதுச் சித்தத்தினை நிறைவேற்றும் முகவர்.

தனிமனித சுதந்திரம்: ஹொப்ஸ்: இறையினால் வழங்கப்பட்ட உரிமைகளையே மனிதன் அனுபவிக்க முடியும். லொக்: ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த உரிமைகளை மனிதன் அனுபவிக்க முடியும். ரூசோ: பொது விருப்பத்தினூடாக பெறப்பட்ட உரிமைகளையே மனிதன் அனுபவிக்க முடியும்.

தூண்டுதல்: ஹொப்ஸ்: பூரண முடியாட்சியினை ஆதரித்ததன் மூலம் இங்கிலாந்து சிவில் யுத்தத்தினை எதிர்த்தார். லொக்: இங்கிலாந்தில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியினை ஆதரித்தார். ரூசோ: பிரான்சியப் புரட்சிக்கு தூபமிட்டார்.

பங்களிப்பு: ஹொப்ஸ்: சட்டபூர்வ இறை, சட்டம், ஒழுங்கு - அதிகாரப் பிரயோகம், பகுப்பாய்வுச் சட்ட முறைமை. லொக்: அதிகார வேறாக்கம், தனிமனிதவாதம், பயனுடைமைவாதம், பாராளுமன்ற அரசாங்க முறை. ரூசோ: நேரடி ஜனநாயகம், மக்கள் இறைமை, பொதுச்சித்தத்தின் வெளிப்பாடே சட்டம்.

### 3.3 பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு

அரசின் தோற்றம் பற்றிய முன்னைய கோட்பாடுகள் ஒவ்வொன்றும் பூரணத்துவம் பெற்றவையன்று. அவை ஊகங்களையும் ஒன்று அல்லது இரண்டு காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டவை. இதனால் அரசின் தோற்றம் தொடர்பாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடாக பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு உள்ளது. இக்கோட்பாடு அரசு செயற்கையாக உருவாக்கப்பட்டதொன்றன்று. அது படிமுறை வளர்ச்சியின் விளைவினதாகும் எனக் குறிப்பிடுவதுடன் அரசின் தோற்றத்தினை நிர்ணயிப்பதில் பல்வேறு காரணிகள் பங்காற்றியுள்ளன என்பதனையும் எடுத்துக்காட்டுகிறது.

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்றவகையில் மனித வரலாற்றின் ஆரம்பத் திலிருந்து மனிதன் சமூகமயமாகி வாழ்ந்து வருகின்றான். இந்நிலையில் அரசு நீண்டகாலமாக படிமுறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. குடும்பத்தை தளமாகக் கொண்டிருந்த ஆரம்ப சமூகம் உறவு முறையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஏனைய கோட்பாடுகளோடு ஒப்பிடும் போது அதிகம் யதார்த் தபூர்வமான ஒரு கோட்பாடாக பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு உள்ளது.

கார்ணர் என்ற அறிஞர் குறிப்பிடுவதன்படி "அரசு கடவுளின் படைப்போ; பலத்தின் பெறுபேறோ; உடன்படிக்கையின் உருவாக்கமோ; குடும்பத்தின் எளிமையான விரிவாக்கமோ அல்ல. அது இயல்பான வரலாற்று வளர்ச்சியின் விளைவிலானதாகும்." லீகொக் என்ற அறிஞர் "அரசு மனித வரலாற்றுச் செயன்முறையின் விளைவிலான ஒரு பரிணாம வளர்ச்சியாகும்" என்றும் பேர்கஸ் என்பவர் "அரசு தொடர்ச்சியான சமூக வளர்ச்சியின் பெறுபேறாகும்" என்றும் கூறுகின்றனர்.

இவ்விதம் அரசின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் (1) இயல்பான சமூக உள்ளுணர்வு, (2) உறவுமுறை, (3) மதம், (4) பலம், (5) பொருளாதார விவகாரங்கள், (6) அரசியல் உணர்வு போன்ற பல்வேறு காரணிகள் பங்காற்றியதாக பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு எடுத்துக்காட்டுகிறது. நவீன அரசின் படிமுறை வளர்ச்சிச் செயன்முறையினை பின்வரும் அரச மாதிரிகளினூடாக அறியலாம்:

(1) குலமரபு அரசு (2) கீழைத்தேய பேரரசு
(3) கிரேக்க நகர அரசு (4) உரோமப் பேரரசு
(5) நிலமானிய அரசு (6) நவீன தேசிய அரசு
(7) ஏகாதிபத்திய அரசு (8) பின்காலனித்துவ அரசு

## 3.4 மார்க்சியக் கோட்பாடு

*கார்ல் மார்க்சின் சிந்தனைகளையே மார்க்சியம் என அழைப்பர். கார்ல் மார்க்ஸ் 1818 ஆம் ஆண்டு ஜேர்மனியில் பிறந்தார். 1849 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற அவர், தனது இறுதி நாட்கள் வரையிலும் முப்பது ஆண்டுகள் இங்கிலாந்திலேயே தங்கியிருந்தார். கார்ல் மார்க்ஸ் எழுதிய முக்கிய நூல்களாவன: 1. கம்யூனிச அறிக்கை* (Communist Manifesto), *2. அரசியல் பொருளாதார விமர்சனம்* (The Critique of Political Economy), *3. மூலதனம்* (Capital).

*மார்க்சியம் தோற்றம் பெறுவதற்கான பின்புலமாக அமைந்த காரணிகளாவன: 1. ஐரோப்பாவில் நிலவிய அமைதியின்மையும் எதிர்ப்புக்களும், 2. நீண்ட வேலை நேரமும் குறைவான ஊதியமும், 3. தொடர்ச்சியான வேலைவாய்ப்பின்மை, 4. நலன்புரி அரசுகள் இல்லாமை, 5. 1789 ஆம் ஆண்டைய பிரான்சியப் புரட்சி. மார்க்சியத்தின் அடிப்படைத் தத்துவங்கள் பின்வருவனவாகும்.*

*இயக்கவியல் பொருள்முதல்வாதம்* (Dialectical Materialism)*: பொருள் உயிரினத் தன்மையுடையதும் பரிணாம வளர்ச்சி பெறக்கூடியதுமாகும். இயக்கவியல் மூன்று நிலைகளை (முற்கோள் - முரண்கோள் - முற்றுக்கோள்) உள்ளடக்கியது.*

*வரலாற்று பொருள் முதல்வாதம்* (Historical Materialism)*: மனித சமூக வரலாற்றினை விளக்கும் மார்க்சியக் கோட்பாடு வரலாற்று பொருள் முதல்வாதமாகும். இது ஐந்து கட்டங்களை உள்ளடக்கியது: 1. புராதன கம்யூனிச சமுதாயம், 2. அடிமை முறை சமுதாயம், 3. நிலமானிய சமுதாயம், 4. முதலாளித்துவ சமுதாயம், 5. சோசலிச சமுதாயம்.*

*சமூக உறவும் பொருளாதார உறவும்: சமூகம் பின்வரும் இரு கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. தளத்தில் ஏற்படுகின்ற மாற்றமே மேல் தளத்தில் உள்ள விடயங்களில் மாற்றத்தினைக் கொண்டு வருகின்றது: இங்கு தளம்* (Base) *என்பது பொருளாதாரத்தினையும் (உற்பத்தி வழிமுறைகள்) மேல் தளம்* (Super Structure) *என்பது சமூகத்தின் ஏனைய பகுதிகளையும் (அரசியல், கல்வி, கலாசாரம், மதம்) குறிக்கும்.*

*சமூக உறவு: உற்பத்தி வழிமுறைகளின் அடிப்படையில் மனித சமுதாயம் இரு வர்க்கங்களைக் கொண்டுள்ளது. மனித சமுதாயத்தின் வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறேயாகும்.*

மிகை மதிப்புக் கோட்பாடு: ஒரு பொருளின் மதிப்பு அப்பொருளை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் உழைப்பை வைத்துத்தான் முடிவு செய்யப்படுகிறது. ஆனால் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியம் அவர்கள் உற்பத்தி செய்த ஒரு பொருளின் மதிப்பில் ஒரு சிறு பகுதிதான். பெரும் பகுதியை முதலாளிகள் இலாபமாகப் பெறுகின்றனர்.

முதாலாளித்துவம்: மார்க்சியம் முதலாளித்துவத்தினை எதிர்க்கிறது. முதலாளித்துவம் தொழிலாளர்களை சுரண்டுவதனால் அது சமுதாயத்தில் அசமத்துவ நிலையினை உருவாக்குகிறது. முதலாளித்துவம் அரச நிறுவனங்கள், சமயம், தனியார் சொத்து என்பவற்றினை சுரண்டலுக்கான கருவியாகப் பயன்படுத்துகிறது.

புரட்சி: பழைய சமுதாயத்திலிருந்து புதிய சமுதாயத்தினை உருவாக்குவதற்கு புரட்சி அவசியமானது. மார்க்சியம் புரட்சியினை அரசியல் புரட்சி, சமுதாயப் புரட்சி என இரு வகைப்படுத்துகிறது. பாட்டாளி வர்க்க பலாத்காரப் புரட்சி இன்றி முதலாளித்துவம் தோற்கடிக்கப்பட முடியாது என்பது மார்க்சியத்தின் அடிப்படை சிந்தனையாகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்: தொழிலாளர் புரட்சியின் மூலம் முதலாளித்துவம் வீழ்த்தப்பட்டு பாட்டாளிகளின் சர்வாதிகார ஆட்சி நிறுவப்படும். இதன் நோக்கம் முதலாளித்துவத்தின் எச்சசொச்சங்களை அடியோடு அகற்றுவதாகும்.

கம்யூனிச சமுதாயம்: மார்க்சியம் அரசற்ற கம்யூனிச சமுதாயத்தினை உருவாக்குவதை இலக்காகக் கொண்டது. கம்யூனிச சமுதாய உருவாக்கத்துடன் மனித சமுதாயத்தின் ஆரம்ப வரலாறு முடிவுற்று உண்மையான வரலாறு ஆரம்பமாகும்.

தனியார் சொத்துடைமை: தனியார் சொத்துடைமையே சமுதாயத்தின் பிரதான எதிரி. வறுமை போன்ற சகல கெடுதல்களுக்கும் தனியார் சொத்துடைமையே அடிப்படையாக உள்ளது. சொத்துக்களின் தனியுடைமை பொதுவுடைமையாக மாற்றப்பட வேண்டும்.

மதம்: மார்க்சியம் முதலாளிகள் தமது சொத்துக்களையும் தீய செயல்களையும் நியாயப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் ஒரு கெடுதலே மதம் என்கிறது. மார்க்சின் பார்வையில் மதம் மனிதனை மயக்கும் மருந்தாகும். கம்யூனிச சமுதாயத்தில் மதத்திற்கு இடமில்லை.

மார்க்சியம் அரசின் தோற்றம் தொடர்பாக பொருள்முதல்வாத விளக்கத்தினை வழங்குகிறது. அரசு மனிதனின் உருவாக்கம் என்றபோதிலும் அரசின் தோற்றத்திற்கு பின்னால் பொருளாதாரக் காரணிகள் பின்புலமாக உள்ளதனை மார்க்சியவாதிகள் எடுத்துக்காட்டுகின்றனர்.

மார்க்சியவாதிகள் சமூக படிமுறை வளர்ச்சியினை புராதன கம்யூனிச சமூகம், அடிமை முறை சமூகம், நிலமானிய சமூகம், முதலாளித்துவ சமூகம், சோசலிச சமூகம் என வகையீடு செய்கின்றனர். இவர்களது கருத்துப்படி ஆதிகால கம்யூனிச சமூகத்தில் தனியார் சொத்துடைமை இல்லாத காரணத்தினால் வர்க்கங்கள் எதுவுமில்லை. ஆதலால் அக்காலத்தில் அரசின் அவசியம் எழவில்லை. பிற்பட்ட காலங்களில் தனியார் சொத்துடைமையுடன் ஆரம்பித்த வர்க்க ரீதியான மோதல்களே அரசின் தோற்றத்தினை இயலுமானதாக்கியது.

அடிமை முறை சமூகத்திலேயே அரசு முதன் முதலாக தோற்றம் பெற்றது. பின்னர் நிலமானிய சமூகத்தில் அரசு நிலைகொண்டது எனவும் முதலாளித்துவ சமூகத்தில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நிலவிய வர்க்க மோதல்களின் போது அரசு முதலாளிகளின் நலன்களுக்காக செயற்பட்டது எனவும் மார்க்சியம் கூறுகிறது. வரலாற்று நெடுகிலும் அரசு ஒரு வர்க்கத்தின் கருவியாக செயற்படுவதனால் அரசு அவசியமற்றது என மார்க்சியம் வாதிடுகிறது.

இதற்காக பாட்டாளிகள் புரட்சியினூடாக முதலாளித்துவ அரசினை வீழ்த்த வேண்டும் எனவும் அதன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசினை ஏற்படுத்த முடியும் என மார்க்சியம் அறிவுரை கூறுகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் நோக்கம் முதலாளித்துவத்தினை பூண்டோடு அழிப்பதே என்றும் முதலாளித்துவம் முழுமையாக அழிக்கப்பட்டதன் பின்னர் அரசு அவசியமற்றது எனவும் இவ்விதம் உருவாகும் அரசற்ற சமூக அமைப்பினை மார்க்சியவாதிகள் பொதுவுடைமை (கம்யூனிச) சமூகம் என அழைக்கின்றனர்.

கம்யூனிச சமூக அமைப்பில் வர்க்கங்கள் எதுமில்லாததால் வர்க்கக் கருவியாகிய அரசு இருப்பதில்லை. இச்சமூக அமைப்பில் சொத்துக்கள் பொதுவுடைமையாக இருப்பதால் எல்லோரும் எல்லாம் பெற்று வாழும் நிலை காணப்படும். இதன்போது சமூகம் சுயாதீனமாக இயங்கும் சங்கங்களினால் வழிநடத்திச் செல்லப்படும் எனவும் மார்க்சியவாதிகள் நம்புகின்றனர். ஆனபோதிலும் மார்க்சியம் கூறுவது போன்று அரசற்ற சமூகம் உருவாகுவதற்கான சாத்தியக்கூறுகள் சமகாலத்தில் குறைவாகவே உள்ளன. இன்றைய காலத்தில் நாளுக்கு நாள் அரசின் தேவை அதிகரித்த வண்ணமுள்ளது.

### பிரதான சொற்கள்

தெய்வீக உரிமைவாதம், சமூக ஒப்பந்தக் கோட்பாடு, பரிணாமவாதம், மார்க்சியம்

### பயிற்சி வினாக்கள்

அரசின் தோற்றம் தொடர்பான பின்வரும் கோட்பாட்டுத் தத்துவங்களைப் பரிசீலிக்குக.
(அ) தெய்வீக உரிமைக் கோட்பாடு
(ஆ) சமூக ஒப்பந்தக் கோட்பாடு

"அரசு கடவுளின் உருவாக்கமன்று. அது குறிப்பிட்ட சில சமூக சூழ்நிலைகளில் மக்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் தாபிக்கப்பட்டதாகும்." ஆராய்க.

நவீன அரசியல் சிந்தனை வளர்ச்சிக்கு சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர் கள் வழங்கிய பங்களிப்பினை மதிப்பீடு செய்க.

"அரசு கடவுளின் உருவாக்கமாகும்." என்ற கூற்றினை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக.

மார்க்சியவாதத்தின் அடிப்படைப் பண்புகளைக் குறிப்பிட்டு, மார்க்சியத்தின் அரசு பற்றிய நோக்கினை ஆராய்க.

### உசாத்துணைகள்

Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

MacIver, (1990). ***The modern state***. New Jersey: Prentice Hall.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

# அத்தியாயம் - 04

# அதிகாரம், அதிகாரத்துவம், சட்டபூர்வத்தன்மை

**உள்ளடக்கங்கள்**


| | | |
|---|---|---|
| 4.1 | அதிகாரம் | 46 |
| 4.2 | அதிகாரத்துவம் | 57 |
| 4.3 | சட்டபூர்வத்தன்மை | 60 |


## அத்தியாய சுருக்கம்

ஏதாவது ஒரு காரியத்தினை செய்வதற்குள்ள ஆற்றலினை அல்லது திறனை அதிகாரம் என அழைப்பர். நவீன அரசியல் ஆய்வுகளில் முதன்மைப்படுத் தப்படும் ஒரு முக்கிய அம்சம் அதிகாரமாகும். அதிகாரம் அரசியலின் ஒரு தவிர்க்க முடியாத அம்சமாகும். இதனாலேயே நவீனகால அறிஞர்கள் பலர் அரசியலை அதிகாரத்துடன் இணைத்து நோக்கும் பாரம்பரியத்தினைத் தொடக்கி வைத்தனர். மக்கியவல்லியுடன் ஆரம்பிக்கும் இப்புதிய பாரம்பரியம் ஜீன் போடின், குரோசியஸ், தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், மொண்டஸ்கியூ, கார்ல் மார்க்ஸ், மெக்ஸ் வெபர், அந்தோனியோ கிராம்சி, மிச்சேல் பூகோ, ஹன்னா அரன்ட், ரொபர்ட் ஏ டால், சார்ல்ஸ் ஈ மெரியம், டேவிட் ஈஸ்டன், கப்ரியல் ஆல்மண்ட் போன்ற அறிஞர்களின் பங்களிப்புடன் வளர்ச்சியுற்றது. இவ்வாறாக அரசியலில் அதிகாரம் பெறும் முக்கியத்துவம் காரணமாக அரசியல் கல்வியானது அதிகாரம் பற்றிய கல்வியாகும் என்றதொரு கருத்தும் நிலவுகிறது. எனவேதான் அரசியலைக் கற்போர் அதிகாரத்தினைப் பற்றியும் அதனோடு இணைந்த ஏனைய எண்ணக்கருக்கள் குறித்தும் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

## அத்தியாயத்தின் நோக்கம்

அரசியலில் அதிகாரம் மிக முக்கியமான அம்சமாகும். இவ் அதிகாரம் குறித்த அறிமுக விளக்கமொன்றினை மாணவர்களுக்கு வழங்குவதே இவ்வத் தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தினை மாணவர்கள் திறம்படக் கற்பதன் மூலம் அதிகாரம், அதிகாரத்துவம், சட்டபூர்வத்தன்மை ஆகிய எண்ணக்கருக்கள் குறித்த தெளிவான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வர்.

## 4.1 அதிகாரம்

அதிகாரம் என்ற சொல்லினை தெளிவாக வரையறுப்பது தொடர்பில் பொதுவான கருத்துக்கள் காணப்படுவதில்லை. எனினும் எளிமையான வகையில் அதிகாரத்தினை ஏதேனும் ஒன்றினைச் செய்வதற்குள்ள ஆற்றல் அல்லது திறன்; யாதாயினும் ஒரு வெளியீட்டில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல்; ஒருவரது விருப்பத்தினை நிறைவேற்றுவதற்கு உதவும் திறன்; ஒருவர் தனது விருப்பத்திற்கு ஏற்ப ஏனையவர்களின் நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பிரயோகிக்கும் ஆற்றல் எனவும் வரையறுக்க முடியும்.

அதிகாரம் குறித்து பல்வேறு அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். அவர்களுள் மக்கியவல்லி, தோமஸ் ஹொப்ஸ், மெக்ஸ் வெபர், பேட்டன் ரசல், ஹரோல்ட் லாஸ்வெல், கப்லான், சார்ல்ஸ் ஈ மெரியம், ஹான்ஸ் ஜே மொகன்தோ, ரொபர்ட் ஏ டால் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களது கருத்துக்கள் அதிகாரம் குறித்து வேறுபட்ட விளக்கங்களை வழங்குகின்ற போதிலும் அரசியலுக்கும் அதிகாரத்திற்கும் உள்ள தொடர்பினை எடுத்துக் காட்டுவதில் ஒத்த தன்மையினைக் கொண்டுள்ளன.

மேற்குறிப்பிட்டவர்களுள் அரசியல் அதிகாரம் பற்றிய நவீன சிந்தனையினை தொடக்கிவைத்தவராக மக்கியவல்லி கருதப்படுகின்றார். அதேபோன்று, அதிகாரம் பற்றிய நவீன அரசியல் மெய்யியல் சிந்தனை வளர்ச்சிக்கு ஹொப்ஸ் வழங்கிய பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். ஹொப்ஸ் தனது 'லெவியதானில் (Leviathan)' எதிர்கால சுபீட்சத்தினை அடைய அதிகாரம் ஒரு கருவியாக உள்ளது என்கிறார். இவ்விரு அறிஞர்களது தொடக்க கால பங்களிப்புக்களின் விரிவாக்கமே அதிகாரம் பற்றிய புதிய ஆய்வுகளுக்கு வழிவிட்டன.

அதிகாரம் குறித்த அறிஞர்களது விளக்கங்களுள் ஹான்ஸ் ஜே மொகன்தோ என்பவரது கருத்து குறிப்பிடத்தக்கதாகும். இவர் 'தேசங்களுக்கு மத்தியிலான அரசியல் (Politics among nations)' என்ற தனது நூலில் அரசியலை அதிகாரத்திற்கான போராட்டமாக வரையறுப்பதுடன் அப்போராட்டத்தின் போதுள்ள ஒருவித உளவியல் உறவினை அதிகாரமாக அடையாளம் காண்கின்றார். அதாவது குறிப்பிட்ட ஆற்றலினைப் பிரயோகிப்பவர்களுக்கும் பிரயோகிக்கப்படுபவர்களுக்கும் இடையே உள்ள ஒரு உளவியல்சார் உறவே அதிகாரமாகும்.

அதிகாரம் உறவு ரீதியானது என்றவகையில் அது குறிப்பிட்ட செயற்பாடுகளின் மீது முறையான கட்டுப்பாடுகளை விதிப்பதுடன் ஒருவரது எண்ணம் மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்ப ஏனையவர்களது சிந்தனையிலும் நடத்தையிலும்

மாற்றங்களைக் கொண்டுவருகிறது. இவ்வகையில் அதிகாரமானது ஒரு உரித்தாகும். மாறாக அது பணத்தினைப் போன்று திடமான ஒரு பொருளல்ல. அதிகாரம் அடிப்படையில் ஒழுக்க ரீதியானதல்ல. அது ஒன்றில் நல்லதாக அல்லது கெடுதியானதாக இருக்கலாம். எனினும் அதிகாரம் ஒரு வகையான உறவுமுறை என்பது மட்டுமே உண்மையாகும்.

சில ஆய்வாளர்கள் குறிப்பிடுவதன்படி அதிகாரம் என்பது ஒரு சமூகத்தின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு அச்சமூகம் கொண்டிருக்கும் ஆற்றல் அல்லது திறன் எனவும் வரையறுக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, உலகில் ஐக்கிய அமெரிக்கா அதிகாரம் பொருந்தியதொரு அரசு எனக் கொள்ளப்படின், உலக அரசியலில் அந்நாட்டின் தேசிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான திறன் அந்நாட்டிடம் உள்ளது என்பதே அதன் பொருளாகும்.

அதிகாரம் ஏதேனும் ஒன்றினை அடைந்துகொள்வதற்கான ஆற்றல் என்ற அடிப்படையில் அது இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றது. முதலாவது வகை ‘Power to’ என்பதாகும். அதாவது ஒருவரது இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஆற்றலை அது குறிக்கும். மற்றையது ‘Power over’ எனப்படுகின்றது. இது ஒரு நாட்டின் மீது அல்லது ஒரு குறிப்பிட்ட தொகை மக்கள் மீது கட்டுப்பாடுகளைப் பிரயோகிப்பதற்கான ஆற்றலைக் குறிக்கும்.

அதிகாரம் குறித்து மெக்ஐவர் குறிப்பிடும் போது, “ஒருவரது நடத்தையினை ஒழுங்குபடுத்தி, வழிப்படுத்தும் திறன் அதிகாரம்” என்கிறார். லாஸ்வெல் மற்றும் கப்லான் ஆகியோர் “தீர்மானம் எடுத்தலில் உள்ள பங்கேற்பு உறவே அதிகாரமாகும்” என்கின்றனர். டேவிட் ஈஸ்டன் என்ற அறிஞர் “ஒரு நபர் அல்லது குழு தமது சொந்த விருப்பத்திற்கு ஏற்ப ஏனையவர்களது செயற்பாட்டினை மாற்றியமைப்பதற்கான இயலுமையினைக் கொண்டிருக்கும் போது நிலவுகின்ற ஒரு உறவே” அதிகாரம் என்கிறார்.

பேட்டன் ரசல் “உத்தேசிக்கப்பட்ட விளைவுகளின் உற்பத்தி அதிகாரமாகும்” என்று கூறுகின்ற அதேவேளை, மெக்ஸ் வெபர் என்ற சமூகவியலாளர் “ஒருவர் தனது விருப்பத்தின் பிரகாரம் ஆட்சி செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு சமூக உறவினுள் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள இயல்தகவு அல்லது சாத்தியப்பாடுகளே அதிகாரமாகும்” என்கிறார்.

ரொபர்ட் ஏ டால் அதிகாரத்தினை ஒரு விஷேட செல்வாக்குச் செலுத்துதல் வடிவமாகக் கருதுகின்றார். இதனை டால் பின்வரும் எடுத்துக்காட்டின் மூலம்

விளக்குகின்றார்: A என்பவர் B இன் நடத்தை மாற்றம் தொடர்பாக அவருடன் முரண்படுகின்றார் எனின் A ஆனவர் B இன் மீது அதிகாரத்தினைப் பிரயோகிப்பதற்கு முயற்சிக்கின்றார் என்பது அதன் பொருளாகும்.

ஜேர்மனிய சமூகவியலாளரான ஹன்னா அரன்ட் (Hannah Arendt) குறிப்பிடுவதன்படி அதிகாரம் என்பது "சாதாரணமாக ஒரு செயலைச் செய்வதற்கான ஆற்றல் அல்ல. மாறாக அதுவொரு பொதுவெளியில் செயற்படுவதற்கான ஆற்றலாகும்." அதிகாரம் குறித்து ஹன்னா அரன்ட் மேற்கொண்ட ஆய்வுகளில் அதிகாரத்தினை அவர் வன்முறையிலிருந்து வேறுபடுத்தி நோக்கியுள்ளார்.

ஹன்னா அரன்ட் அதிகாரமும் வன்முறையும் ஒன்றுக்கொன்று எதிரானதாகும் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் அதிகாரம் எங்கு ஆட்சி செய்கிறதோ, அங்கு வன்முறை இல்லை; வன்முறை அதிகாரத்தினை அழிக்கின்றது. மாறாக அதிகாரத்தினை உருவாக்கும் திறன் அதனிடமில்லை என்று கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்ட விளக்கங்களிலிருந்து அதிகாரம் இரண்டு அடிப்படையான அம்சங்களை உள்ளடக்கியிருப்பதனை அவதானிக்கலாம். அவற்றுள் ஒன்று உரித்து (Possession). மற்றையது உறவுமுறையாகும் (Relationship). இவையிரண்டும் பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது.

> அதிகாரம் ஒரு உரித்து என்றவகையில் அதனைப் பெற்றிருப்பவர்கள் குறிப்பிட்ட விடயத்தினை மேற்கொள்வதற்கான திறனைப் பெறுகின்றனர்.
>
> உதாரணமாக பாராளுமன்ற ஜனநாயக நாடுகளில் பாராளுமன்றப் பெரும்பான்மையினைப் பெறுகின்ற கட்சிகளின் தலைவர்கள் பிரதமராகும் வழக்கம் உள்ளது. இந்நிலையில் பிரதமர் பதவிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை குறித்த தலைவர் பிரயோகிப் பதனைக் காணலாம்.
>
> அதிகாரம் ஒரு உறவுமுறை என்றவகையில் அதனைப் பிரயோகிப்ப வர்களுக்கும் அது பிரயோகிக்கப்படுபவர்களுக்கும் இடையிலான உறவினைக் குறித்து நிற்கின்றது. இது பற்றிக் குறிப்பிடும் பிரட்ரிச் என்ற அறிஞர் "அதிகாரம் குறிப்பிட்டதொரு வகை மனித உறவு" என்கிறார்.

அதிகாரம் பல பண்புகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கனவாகும்:

ஏனையவர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதற்கான திறனை கொண்டிருத்தல்: அடிப்படையில் அதிகாரம் ஏனையவர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் திறனைக் கொண்டுள்ளது. இத்தகைய திறன் தனிப்பட்ட ரீதியானதாக, பொருளாதார ரீதியானதாக, இராணுவ ரீதியானதாகக் கூட இருக்கலாம். அவையின்றி அதிகாரத்தின் இருப்பு சாத்தியமற்றதாகும்.

குறித்ததொரு வகையான மனித உறவாக இருத்தல்: பிரட்ரிச் என்பவரது கருத்துப்படி அதிகாரம் குறித்ததொரு வகையான மனித உறவாக வரையறுக்கப்படுகின்றது. இங்கு ஒருவர் தனது விருப்பம் மற்றும் இலக்குகளுக்கு ஏற்ப மற்றையவர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றார். இதன்போது குறித்த தரப்புகளுக்கிடையில் ஒருவித உறவு உருவாகின்றது. இதனால் அதிகாரம் வெற்றிடத்தில் இருப்புக் கொள்வதில்லை. அது தரப்புகளுக்கிடையிலான உறவுகளிலேயே ஊடாட்டம் செய்கின்றது.

பயன்பாட்டில் தங்கியிருத்தல்: அதிகாரத்தின் அடிப்படையான பண்புகளுள் ஒன்று அதிகாரம் அதன் பயன்பாட்டில் தங்கியிருப்பதாகும். எடுத்துக்காட்டாக ஐக்கிய அமெரிக்க அதிபர் அரசியலமைப்பு ரீதியாக பல அதிகாரங்களைக் கொண்டுள்ளார். அவ்வதிகாரங்களை யாப்பு வரையறைகளுக்கு உட்பட்டு பிரயோகிப்பதற்கான உரிமையினையும் அவர் பெற்றுள்ளார். இந்நிலையில் அவர் பிரயோகிக்கும் அதிகாரத்தின் அளவே அவரது நிலையினைப் பலப்படுத்துகின்றது.

இழப்பீட்டுச் சிந்தனையினை உள்ளடக்கியிருத்தல்: அதிகாரம் பலவந்தப்படுத்தும் அல்லது செல்வாக்குச் செலுத்தும் தன்மை பொருந்தியதாகையால் அது அதிக இழப்பீட்டுச் சிந்தனையினை உள்ளடக்கிய ஒரு எண்ணக்கருவாகக் கருதப்படுகின்றது. அக்டன் பிரபு குறிப்பிடுவதன்படி ‘‘அதிகாரம் ஊழல் செய்கின்றது. அதிக அதிகாரம் அதிகமாக ஊழல் செய்கின்றது.’’

சந்தர்ப்ப சூழ்நிலைவயப்பட்டதாக இருத்தல்: அதிகாரம் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு உட்பட்டதாகும். உதாரணமாக ஒரு கல்லூரி அதிபர் தனது அதிகாரத்தினை கல்லூரி மாணவர் ஒருவர் மீது பிரயோகிக்க

முடியுமாயினும் குறித்த மாணவர் கல்லூரியில் இருக்கும் வரை மட்டுமே அவ்வதிகாரப் பிரயோகம் செல்லுபடியாகிறது.

சில நோக்கங்களுக்காகப் பிரயோகிக்கப்படல்: அதிகாரத்தின் மற்றுமொரு முக்கிய பண்பு அது குறிப்பிட்ட சில நோக்கங்களை அல்லது இலக்குகளை அடைவதற்காகப் பிரயோகிக்கப்படுவதாகும். அதிகாரம் எவ்வித நோக்கங்களையும் கொண்டிருக்காதவிடத்து அவ்வதிகாரம் பயனற்றதாக மாறிவிடுகின்றது.

உறவு ரீதியானதாக இருத்தல்: லாஸ்வெல் மற்றும் கப்லான் ஆகியோரது கருத்தின்படி அதிகாரம் என்பது ஒரு பொருள் அல்ல. மாறாக அதிகாரம் ஒன்றினை ஒன்று சார்ந்திருக்கின்றது. இங்கு உறவுநிலை என்பது குறைந்தது இரண்டு தரப்புக்களையாவது வேண்டி நிற்கின்றது.

சார்பு ரீதியானதாக இருத்தல்: அதிகாரம் சார்பு ரீதியானதாகும். அது நபர்களின் ஆற்றல் அல்லது பலம், காலம், தந்திரோபாயம் போன்ற பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றது.

உண்மையானது மற்றும் சாத்தியமானது ஆகிய இரு அம்சங்களைக் கொண்டிருத்தல்: அதிகாரம் இரு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. ஒன்று உண்மையான அதிகாரம். உண்மையான அதிகாரம் என்பது ஒரு நபர் நடைமுறையில் பிரயோகிக்கும் அதிகாரமாகும். மற்றையது சாத்தியமான அதிகாரம். சாத்தியமான அதிகாரம் என்பது ஒரு நபர் பிரயோகிக்கக் கூடியதாக இருக்கின்ற ஆனால் நடைமுறையில் பிரயோகிக்கப்படாத அதிகாரத்தினைக் குறிக்கும்.

சில உரித்துக்களை உள்ளடக்கியது: அதிகாரம் சில உரித்துக்களை உள்ளடக்கியதாகும். எடுத்துக்காட்டாக, ஒருவர் அதிகாரத்தினைப் பெறுகின்ற போது அதற்கு முன்னர் இல்லாத ஒன்றினை உணரமுடிகின்றது. இந்தவகையில் அதிகாரம் சில உரித்துக்களையுடையதாகும்.

செல்வாக்குச் செலுத்தும் தன்மை கொண்டது: அதிகாரம் இரு நபர்கள் அல்லது குழுக்களுக்கிடையிலான உறவுமுறை என்றவகையில் ஒருவர் மற்றையவர் மீது செல்வாக்குச் செலுத்தும் தன்மையினைப் பிரதிபலிக்கின்றது.

உத்தேச இலக்குகளை அடைவதற்கான ஒரு கருவியாக இருத்தல்: குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கான ஒரு கருவியாகவும் அதிகாரம்

பயன்படுத்தப்படுகின்றது. இதன்படி ஒரு குழு தனது உத்தேச நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பிறிதொரு குழுவின் மீது அதிகாரத்தினைப் பிரயோகிப்பதனைக் காணலாம்.

உத்தேசமற்ற இலக்குகளை அடைவதற்கான ஒரு கருவியாக இருத்தல்: அதிகாரம் உத்தேச இலக்குகளை அடைவதற்கான ஒரு கருவி மட்டுமல்ல. சிலவேளை எதிர்பார்க்கப்படாத ஒரு விளைவினை அடைவதற்கான ஒரு கருவியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

தண்டனைகளை விதிக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல்: அதிகாரத்தினைக் கொண்டு ஒருவர் அல்லது ஒரு குழு மற்றையவர்கள் மீது தண்டனை யினைப் பிரயோகித்துச் செயற்படுகின்றன.

நிறுவனமயப்படுத்தப்பட்டதாக இருத்தல்: நவீன சமூகங்களில் அதிகாரமானது பல்வேறு வழிகளில் கட்டமைக்கப்பட்டதாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட பண்புகளைக் கொண்டுள்ள அதிகாரமானது பின்வரும் மூலாதாரங்களிலிருந்து ஊற்றெடுக்கின்றது:

அறிவு (Knowledge): அதிகாரத்தின் மிகப் பிரதான மூலாதாரம் அறிவாகும். ஒருவிதத்தில் அறிவினையே அதிகாரம் என அழைப்பர். ஒருவர் தனது ஆற்றல்களையும் திறன்களையும் அறிவினைக் கொண்டே வளர்க்கின்றார். அவ்வாறே மனிதர்கள் புதிய விடயங்களைத் தெரிந்து கொள்வதற்கும் அறிவு பயன்படுகின்றது.

ஆளுமை (Personality): ஒருவரது அதிகாரம் அவரது ஆளுமையினால் நிர்ணயிக்கப்படுவதுண்டு. தனிமனிதர்களின் ஆளுமை அவர்களது குழு ரீதியான செயற்பாட்டு நடத்தைகளையும் தீர்மானம் எடுப்பதற்கான திறன்களையும் வளர்ப்பதற்கு உதவுவதுடன் மற்றையவர்கள் மீது ஒரு தனிமனிதன் அதிக செல்வாக்கினைச் செலுத்துவதற்கும் ஆளுமை பயன்படுகின்றது.

ஒழுங்கமைப்பு (Organization): ஒற்றுமையே பலம் என்பது போல மனிதர்கள் குழு, கூட்டாக ஒன்றிணைவது அதிகாரத்தின் பலத்தினை அதிகரிக்கச் செய்கின்றது. ஜனநாயக நாடுகளில் அரசியல் கட்சிகள் மூலம் தனிமனிதர்கள் ஒன்றிணைக்கப்படுவதுடன் அதன் மூலம் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆற்றல் (Skill): அதிகாரத்தின் மற்றுமொரு பிரதான மூலாதாரம் ஆற்றலாகும். தனிமனிதர்கள் தாம் பெற்றுள்ள ஆற்றல்களைக் கொண்டே அதிகார பலம்பொருந்தியவர்களாக மாறுகின்றனர். அதிகாரத்தினைப் பெற்றுள்ள ஆட்சியாளர்கள் அதனைத் திறம்பட பிரயோகிப்பதற்கு ஆற்றல் அவசியமாகின்றது.

ஆட்சியுரிமை (Authority): அதிகாரத்தினைப் பிரயோகிப்பதற்கான உரிமையே இதன் மூலம் பொருள்கொள்ளப்படுகின்றது. ஆட்சியுரிமை அதிகாரத்தின் மூலாதாரமாக அமைவதுடன் தனிமனிதர்களை அதிகார பலமுள்ளவர்களாக மாற்றுவதற்கும் உதவுகின்றது.

மேற்குறிப்பிட்ட மூலாதாரங்கள் தவிர்ந்த நம்பிக்கை (Faith), செல்வம் (Wealth), பதவி நிலை (Position), பலம் (Force), சமய அந்தஸ்து (Religious Status), வெகுஜன ஊடகம் (Mass Media) போன்ற மூலாதாரங்களிலிருந்தும் அதிகாரம் ஊற்றெடுக்கிறது.

அதிகாரத்தினை பல்வேறு அடிப்படைகளின் கீழ் வகைப்படுத்தி நோக்க முடியும். அவ்வகைப்பாடுகளுள் பின்வருவன குறிப்பிடத்தக்கனவாகும்:

பதவிக்குரிய அதிகாரம் -நபர்களுக்குரிய அதிகாரம்: குறிப்பிட்ட பதவிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பதவிக்குரிய அதிகாரம் என அழைப்பர். எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் ஜனாதிபதிப் பதவிக்குரிய அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் உரிமையினைப் பெறுகின்றார். நபர்களுக்குரிய அதிகாரம் என்பது குறிப்பிட்ட நபர்களின் அரசியல் அனுபவம் மற்றும் தனிப்பட்ட திறன்களின் அடிப்படையில் அமைந்த அதிகாரமாகும்.

பலவந்தப்படுத்தும் அதிகாரம் - கருத்தொருமைப்பாடு சார்ந்த அதிகாரம்: பலம், வன்முறை மற்றும் தண்டனை வழங்கல் முதலிய வழிமுறைகளைப் பயன்படுத்திப் பிரயோகிக்கப்படும் அதிகாரம் பலவந்தப்படுத்தும் அதிகாரமாகும். கருத்தொருமைப்பாடு சார்ந்த அதிகாரம் என்பது தரப்புக்களுக்கிடையிலான பரஸ்பர உடன்பாடுகள் மற்றும் விட்டுக்கொடுப்புக்களுடன் பிரயோகிக்கப்படும் அதிகாரமாகும்.

நேர்நிலை அதிகாரம் -எதிர்மறை அதிகாரம்: ஒரு கொள்கையினை அல்லது தீர்மானத்தினை ஆரம்பித்து வைப்பதற்கான அதிகாரம் நேர்நிலை

அதிகாரமாகும். எதிர்மறை அதிகாரம் என்பது குறித்த கொள்கைகள் அல்லது தீர்மானத்தினை தடைப்படுத்தும் அதிகாரத்தினைக் குறிக்கும்.

சட்டரீதியான அதிகாரம் - சட்டரீதியற்ற அதிகாரம்: ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு பிரயோகிக்கப்படும் அதிகாரம் சட்டரீதியான அதிகாரமாகும். இத்தகைய அதிகாரத்தினை மேலும் மூன்று வகைப்படுத்த முடியும். அவை மரபுரீதியான அதிகாரம் (மரபு, வழக்காறுகளின் அடிப்படையில் பெறப்படும் அதிகாரம்), வசீகரத்துவ அதிகாரம் (தனிப்பட்ட நபர்களின் விசேட ஆற்றல்கள் காரணமாக பிரயோகிக்கப்படும் அதிகாரம்), பகுத்தறிவுக்குட்பட்ட சட்டபூர்வ அதிகாரம் (சட்டத்தினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம்), சட்டரீதியற்ற அதிகாரம் என்பது சட்டத்திற்குப் புறம்பாக பலப்பிரயோகத்தினை மேற்கொள்வதனைக் குறிப்பதாகும். இத்தகைய அதிகாரம் பலம் மற்றும் அடக்குமுறையுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

நேரடி அதிகாரம் - மறைமுக அதிகாரம்: நேரடி அதிகாரம் என்பது அதிகாரத்தினைப் பெற்றிருப்பவர் தாமாகவே அதிகாரத்தினைப் பிரயோகிப் பதனைக் குறிப்பதாகும். மறைமுக அதிகாரம் என்பது அதிகாரத்தினைப் பெற்றிருப்பவர் தாம் நேரடியாக அல்லாமல் ஏனையவர்களின் ஊடாக அதிகாரத்தினைப் பிரயோகிப்பதனைக் குறிக்கும்.

வெளிப்படையான அதிகாரம் - மறைவான அதிகாரம்: அதிகாரம் வெளிப்படுத்தப்படும் விதம் தெளிவானதாக இருக்கும் போது அத்தகைய அதிகாரம் வெளிப்படையான அதிகாரம் என அழைக்கப்படுகின்றது. மறைவான அதிகாரம் என்பது அதிகாரப் பிரயோகம் தெளிவற்றதாக இருக்கும் போது இடம்பெறுவதாகும்.

ஒரு தரப்பு அதிகாரம் - இரு தரப்பு அதிகாரம்: ஒரு தனிநபர் ஏனையவர்கள் மீது அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் அதேவேளை, மற்றையவர்கள் குறித்த தனிநபரின் மீது அதிகாரத்தினைப் பிரயோகிக்க முடியாது இருக்குமாயின் அத்தகைய அதிகாரத்தினை ஒரு தரப்பு அதிகாரம் என அழைப்பர். இரு தரப்பு அதிகாரம் என்பது இரு தரப்புக்கள் பரஸ்பரம் அதிகாரத்தினைப் பிரயோகித்துச் செயற்படும் விதத்தினைக் குறிப்பதாகும்.

மத்தியப்படுத்தப்பட்ட அதிகாரம் - பரவலாக்கப்பட்ட அதிகாரம்: அதிகாரம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது குறிப்பிட்ட நபரிடம் ஒன்று குவிக்கப்படுமாக இருந்தால் அதனை மத்தியமயப்படுத்தப்பட்ட அதிகாரம்

என அழைப்பர். பரவலாக்கப்பட்ட அதிகாரம் என்பது அதிகாரமானது குறிப்பிட்ட இடத்தில் அல்லது குறிப்பிட்ட நபரிடம் அன்றி பல இடங்களுக்கு பரவலாக்கப்படுவதனைக் குறிக்கும்.

தேசிய அதிகாரம்: சர்வதேச அரசியலில் ஊடாட்டம் புரியும் சுதந்திர இறைமையுள்ள அரசுகள் கொண்டுள்ள அதிகாரத்தினையே தேசிய அதிகாரம் என அழைப்பர். இத்தகைய தேசிய அதிகாரமானது உளவியல், பொருளாதார மற்றும் இராணுவ தந்திரோபாய ரீதியிலானதாக இருக்க முடியும்.

அதிகாரம் மனித உறவின் பல்வேறு மட்டங்களில் இருப்புக்கொள்கின்றது. அம்மட்டங்களுள் பின்வருவன குறிப்பிடத்தக்கனவாகும்.

தனிநபர்கள்: தனிநபர்களுக்கிடையிலான உறவு நிலையின் போதும் அதிகாரம் வெளிப்படுகின்றது. உதாரணமாக ஆண் - பெண், தாய் - மகள், ஆசிரியர் - மாணவர், அதிபர் - ஆசிரியர் போன்ற நபர்களுக்கிடையில் ஒருவர் மற்றொருவரை கட்டுப்படுத்துவதனை அவதானிக்கலாம். இதன்போது உள்ள அதிகாரம் ஆரம்ப மட்ட அதிகாரமாகும்.

சமூகக் குழுக்கள்: சமூகக் குழுக்களுக்கிடையிலான உறவுகளின் போதும் அதிகாரம் இருப்புக் கொள்கின்றது. இவ்விதம் இருப்புக் கொள்ளும் அதிகாரத்தினை அதிகாரத்தின் இரண்டாவது மட்டம் என அழைப்பர். இத்தகைய அதிகாரமானது குழுக்களுக்கிடையிலான சமத்துவமற்ற தன்மை காரணமாக உருவாகின்றது.

சமூகம்: பல்வேறு குழுக்களை உள்ளடக்கிய பரந்த சமூக உறவுத் தளத்தில் அதிகாரம் இருப்புக் கொள்வதனையும் நாம் அவதானிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தினை அடக்கியாள்கின்ற போதும் அடக்கப்பட்ட சமூகங்கள் கிளர்ந்தெழுகின்றபோதும் அதிகாரம் வெளிப்படுத்தப்படுகின்றது. சமூக மட்டம் அதிகாரத்தின் மூன்றாவது மட்டமாகும்.

அரசு: அரசியல் உறவின் அடிப்படை அலகு அரசாகும். அதிகார ரீதியாக அரசு உயர் தன்மை பொருந்தியது. இத்தகைய உயர் தன்மையினை இறைமை என அழைப்பர். இவ் இறைமையினைக் கொண்டே அரசு குறிப்பிட்ட ஆள்புலத்தினுள் சட்டத்தினை இயற்றிச் செயற்படுகிறது.

இறைமை முழுச் சமூகத்திற்குமான அதிகாரமாக உள்ளது. இதனால் அதிகாரம் இருப்புக்கொள்ளும் உச்ச மட்டமாக அரசு கருதப்படுகின்றது.

அதிகாரமானது பல்வேறு முறைகளினூடாகப் பிரயோகிக்கப்படுகின்றது. அவற்றுள் பின்வரும் முறைகள் குறிப்பிடத்தக்கனவாகும்:

செல்வாக்கைப் பிரயோகித்தல்: அதிகாரச் செயற்பாட்டில் ஈடுபடும் போது பெருமளவு பிரயோகிக்கப்படுவது இம்முறையாகும். உதாரணமாக, A என்ற நபர் B என்ற நபரின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு தேவையேற்படும் போது அவர் வாதப்பிரதிவாதங்கள் மூலம் அல்லது தர்க்க ரீதியான உத்திகள் மூலம் அல்லது குறித்த விடயத்தை மீண்டும் மீண்டும் வியாக்கியானம் செய்வதன் மூலம் B என்பவரின் எண்ணம், செயற்பாடு என்பவற்றைக் கட்டுப்படுத்துவதை எடுத்துக்காட்ட முடியும்.

கொடை வழங்குதல்: பல்வேறு கொடைகளை வழங்குதல் மூலம் ஒருவர் இன்னொருவரின் நடத்தையை தமக்குத் தேவையான விதத்தில் கட்டுப்படுத்த முடியும். உதாரணமாக: பொருளாதார உதவி வழங்குதல், அரசியல் ரீதியில் செய்யும் உதவிகள், படை உதவிகள், பொருள் உதவிகள் என்பன இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. .

தண்டனை விதித்தல்: குறிப்பிட்ட பொருளினை அல்லது முதலீடுகளை வழங்குவதை நிறுத்துவதன் ஊடாகவும் அதிகாரம் பிரயோகிக்கப்பட முடியும். இதற்கேற்ப கொடைகளை வழங்குதலும் தண்டனை விதித்தலும் ஒன்றோடொன்று இணைந்து காணப்படும். இவை தவிர, எதிரிக்கு எதிராக பல்வேறு பிரச்சாரங்கள், கோபமூட்டும் செயற்பாடுகள், எதிராளிக்கு எதிரானவர்களுக்கு வெளிப்படையான உதவிகளை வழங்குதல் ஆகிய உத்திகளும் இதில் பயன்படுத்தப்படுகின்றன.

பலப்பிரயோகம்: அதிகாரச் செயற்பாட்டில் உயிர்ப்புடன் ஈடுபடுவதனையே இது குறிக்கின்றது. அதாவது போர் நடவடிக்கை மூலம் அதிகாரச் செயற்பாட்டில் ஈடுபடுவதாகும். முதல் மூன்று வழிகளும் சாத்தியமற்றுப் போகும் போது, இம்முறையினை அரசுகள் பயன்படுத்துகின்றன.

அரசியலின் உன்னத சக்தியாக அதிகாரம் கொள்ளப்படுகின்றது. ஒருவிதத்தில் அதனை அரசியலின் நாணயமாக அழைக்கலாம். பொருளாதாரத்தில் பொருட்கள், சேவைகள் பரிமாற்றத்திற்கு பணம் உதவுவதனைப் போன்று

அரசியலில் கூட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கும் அதனை அமுல்படுத்துவதற்கும் அதிகாரம் உதவுகின்றது. இதனால் அதிகாரம் இல்லாத அரசாங்கத்தினை இயந்திரமில்லாத ஒரு வாகனத்திற்கு ஒப்பிடுவர். அதேவேளை, ஆட்சியாளர்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு உபயோகிக்கும் ஒரு கருவியாகவும் அதிகாரத்தினைக் குறிப்பிடலாம்.

உண்மையில் ஒவ்வொரு சமூகத்திலும் அதிகாரத்தின் நிலை வரையறுக்கப்பட்டதாகும். எனினும் அதற்கான போட்டியாளர்கள் அதிகம். இப்போட்டியாளர்கள் அதிகாரத்தினைப் பெறுவதற்காக தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். அதிகார வட்டத்திற்கு வெளியே உள்ளவர்கள் அதிகாரத்தினைப் பெறமுயற்சிக்கின்ற போது, அதிகார வட்டத்திற்குள் உள்ளவர்கள் அதிகாரத்தினைத் தக்கவைத்துக்கொள்ள பகீரத பிரயத்தனம் மேற்கொள்கின்றனர். இவ்வழியில் அதிகாரமானது அரசியல் விளையாட்டினை உருவாக்குவதுடன், அதனை சிக்கலானதாகவும் சுவாரஸ்யமானதாகவும் மாற்றுகிறது.

அவ்வாறே, அதிகாரத்தில் நாட்டம் கொண்டவர்கள் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான தமது அரசியல் விளையாட்டில் தமது அதிகார இலக்கினை அடைந்துகொள்வதற்காக தந்திரோபாயங்களை திட்டமிடுவதுடன், பேச்சுவார்த்தை வாதப்பிரதிவாதங்கள், கூட்டுக்களை உருவாக்குதல், நடமாடும் மக்கள் செயற்பாடுகள் (mobile mass actions) போன்றவற்றிலும் ஈடுபடுகின்றனர். இதனால் அதிகாரத்திற்கான போராட்டம் என்பது ஒரு சிலருடன் மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல. மாறாக அதிகாரத்திற்கான போராட்டமானது ஒட்டுமொத்த சமூகத்தினையும் உள்ளடக்குகின்றது.

சில அறிஞர்கள் அதிகாரத்தினைக் கொண்டே அரசியலுக்கு விளக்கமளித்துள்ளனர். இதன்படி ஹே (Hay) என்ற அறிஞர் "அரசியல் என்பது அதிகாரத்தினை பங்கீடு செய்வதும் அதனைப் பிரயோகிப்பதுமாகும்" என்கிறார். மொகன்தோ (Morgenthau) போன்ற அறிஞர்களும் அரசியலில் அதிகாரத்தின் முக்கியத்துவத்தினை ஏற்றுக்கொண்டுள்ளனர். அவ்வறிஞர்களது கருத்துப்படி, அதிகாரம் அரசியலின் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது.

அரசியலில் அதிகாரத்தின் பங்கு குறித்த ஆய்வு, சமூகவியலாளரான தொல்கொட் பெர்சனுடன் (Talcott Parsons) அதிகளவு தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றது. இதன்படி அவர் கூட்டு நோக்கத்தினை அடைந்து

கொள்வதற்கான அரசாங்கமொன்றின் ஆற்றலாக அதிகாரத்தினை வரையறுக்கின்றார். இவ்வதிகாரத்தின் மூலமே அரசாங்கம் சட்ட ஒழுங்கினைப் பேணுதல் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் முதலியவற்றுக்கான பிரஜைகள் அடிபணிவினைப் பெறுகின்றது.

ஹரோல்ட் லாஸ்வெல் அதிகாரத்தினைப் பங்கிட்டுக் கொள்வதும் வடிவமைப்பதுமே அரசியல் என குறிப்பிடுவதுடன் அரசியலின் மையமாக அதிகாரம் விளங்கும் விதத்தினையும் எடுத்துக்காட்டுகின்றார். இது தொடர்பில் லாஸ்வெல் 'அரசியல்: யார், எதனை, எப்போது, எப்படிப் பெறுகின்றனர் (Politics: Who gets, What, When, How)' என்ற பிரபலமான நூலினை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சமூகவியலாளரான மெக்ஸ் வெபரினைப் பொறுத்தவரையில் அரசியல் என்பது அரசுகளுக்குள்ளான குழுக்கள் அல்லது அரசுகளுக்கிடையில் அதிகாரத் தினைப் பங்கிட்டுக் கொள்வதற்காக இடம்பெறும் போராட்டம் என வர்ணிக் கப்படுகின்றது.

கில்ட் மற்றும் பால்மர் ஆகிய அறிஞர்கள் அதிகாரத்திற்கும் (Power) ஆட்சியுரிமைக்கும் (Authority) இடையிலான உறவினைப் புரிந்துகொள்வதே அரசியல் என்று கூறுகின்றனர். அதேவேளை, ஜோர்ஜ் கெட்லின் என்ற அறிஞர் தனது 'முறைப்படியான அரசியல் (Systematic Politics)' என்ற நூலில் அரசியல் என்பது அதிகாரம் மற்றும் செல்வாக்குக்கான ஒரு போராட்டம் என வரையறுக்கின்றார்.

## 4.2 அதிகாரத்துவம்

அதிகாரம், அதிகாரத்துவம் ஆகிய இரண்டு எண்ணக்கருக்களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாகும். அதிகாரத்துவமும் ஒரு வகை அதிகாரமாயினும் அது அதிகாரத்தினை விடவும் விஷ்தீரனம் உடையதாகும். மெக் ஐவர் குறிப்பிடுவதன்படி அதிகாரத்துவம் அடிபணிவினைக் கோருவதற்கான அதிகாரமாகும். இவ்விளக்கத்தில் உள்ள தர்க்கம் யாதெனில் எல்லா அதிகாரங்களும் மக்களிடம் அடிபணிவினைக் கோரமுடியாது என்பதாகும்.

அதிகாரத்துவத்தினால் மட்டுமே முறையான அடிபணிவினைக் கோரமுடியும். அதற்கே மக்கள் விருப்பத்துடனான அடிபணிவு இருக்கும். எனவேதான் அதிகாரமானது கீழ்படிவினைக் கோருவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும்போது அது அதிகாரத்துவத் தன்மையினைப் பெறுகின்றது.

அதிகாரத்துவமானது ஏதேனும் ஒரு சமூக ஒழுங்கில் கொள்கைகளைத் தீர்மானிப்பதற்கும், குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினைக் கண்டறிவதற்கும், முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும், தலைவர்களாக செயற்படுவதற்கும், மற்றவர்களை வழிநடத்துவதற்கும் உள்ள உரிமை என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இதன்படி அதிகாரத்துவத்தினை ஒரு நபர் அல்லது நபர்கள் அடங்கியதொரு குழு கொண்டிருக்கலாம்.

அதிகாரத்துவமான அடிப்படையில் அதிகாரம் என்பதனை விடவும் உரிமையுடன் இணைந்த அதிகாரம் என்பதே சரியான அர்த்தப்படுத்தலாகும். பொதுவாக அதிகாரம் என்பது சட்டபூர்வத்தன்மையினைக் கொண்டிருப்பதில்லை, அதற்கான ஆணை கிடைப்பதில்லை, அதற்குரித்தான பதவியினையும் கொண்டிருப்பதில்லை. அதிகாரத்துடன் உரிமை இணைகின்ற போதுதான் அது சட்டபூர்வமானதாகவும், மக்கள் ஆணையினைக் கொண்டதாகவும், அதற்குரித்தான பதவியினைக் கொண்டதாகவும் மாறுகின்றது.

மெக்ஐவரின் அதிகாரம் - அதிகாரத்துவம் ஆகிய கருத்துக்களை பின்வரும் உதாரணத்தினூடாக விளங்கிக் கொள்ளமுடியும். ஒரு பாடசாலை அதிபரைப் பற்றியதே இவ்வுதாரணமாகும். ஒரு பாடசாலை அதிபர் அப்பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள், நிருவாகிகள், மாணவர்களுக்கு மேலான அதிகாரத் தினைக் கொண்டுள்ளார். அவர் ஆசிரியர்களுக்கான வகுப்புக்களையும் பாடங்களையும் அதற்கான நேரத்தினையும் ஒதுக்கீடு செய்வதற்கும், பாடசாலையின் ஒழுக்கத்தினை மேம்படுத்துவதற்கும், ஒழுங்கீனமாக நடந்து கொள்பவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கும் அதிகாரம் பெற்றுள்ளார். இந்த அதிகாரங்களை அதிபர் ஒரு தனிநபராக இருந்து செய்வதில்லை. அவர் அதிபர் என்ற பதவி நிலையினைப் பெற்றிருப்பதன் மூலமே அதனைச் செயற்படுத்துகின்றார். அதாவது அந்த அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கு அதிபர் என்ற பதவி நிலையினூடாக அவற்றிற்கு உரிமையளிக்கப்பட்டுள்ளது.

அதிகாரம், அதிகாரத்துவம் ஆகிய இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாகும். ஹேவூட் என்ற அறிஞர் அதிகாரத்துவம் என்பது சட்டபூர்வமான அதிகாரமே ஆகும் என்கிறார்.

வெபர் போன்ற அறிஞர்கள் அதிகாரத்துவம் என்பதனை ஆள்வதற்கான உரிமை என வரையறுக்கின்றனர். இங்கு அதிகாரத்துவம் அதிகாரம் செலுத்துவதற்கான உரிமை என்பதனூடாக அர்த்தப்படுத்தப்படுகின்றது.

வெபர் அதிகாரத்தினையும் சட்டபூர்வத் தன்மையினையும் ஒன்றிணைத்த வகையில் விளக்கியுள்ளார். சட்டபூர்வத்தன்மையானது அதிகாரத்திற்கு அதிகாரத்துவ அந்தஸ்தினை வழங்குகின்றது.

அதிகாரமற்ற நிலையில் ஆட்சியுரிமையினைப் பிரயோகிக்கமுடியாது என்பதால் அதிகாரத்துவமும் ஒரு வகை அதிகாரமே. ஆனால் சாதாரண அதிகாரத் திலிருந்து அதிகாரத்துவமானது சட்டபூர்வத்தன்மை என்ற விடயத்தினூடாக வேறுபடுத்தப்படுகிறது.

வெபர் அதிகாரத்துவத்தினை மூன்று வகைப்படுத்துகின்றார். அவை: மரபுசார் அதிகாரத்துவம், வசீகர அதிகாரத்துவம், சட்டரீதியான அதிகாரத்துவம்.

> மரபு, வழக்காறுகளின் அடிப்படையில் உரிமையளிக்கப்பட்ட அதிகாரத்துவம் மரபுசார் அதிகாரத்துவமாகும். எடுத்துக்காட்டாக சமூகத்தில் சமய நிறுவனத் தலைவர்கள் செலுத்தும் அதிகாரம் மரபு, வழக்காறுகள் அடிப்படையில் பெறப்பட்டதாக உள்ளது.
>
> சில தனிமனிதர்கள் கொண்டிருக்கும் அதி விஷேட திறன்கள் அல்லது ஆற்றல் காரணமாக அவர்கள் பிரயோகிக்கும் அதிகாரத்திற்கு மக்கள் சம்மதத்தினைத் தெரிவிக்கும்போது அத்தகைய வசீகரத் தலைவர்களை அதிகாரம் பொருந்தியவர்களாக மாற்றிவிடுகின்றது. இத்தகைய அதிகாரத்துவம் வசீகரத்துவ தன்மைமிக்கதாகும்.
>
> நடைமுறையிலுள்ள சட்டங்களினூடாக பகுத்தறிவு வழிமுறை களினூடாக உரிமையளிக்கப்பட்ட அதிகாரம் சட்ட ரீதியான அதிகாரத்துவமாகும். ஜனநாயக அரசாங்கமொன்று பிரயோகிக்கும் அதிகாரத்துவம் பகுத்தறிவுக்குட்பட்ட சட்ட ரீதியான அதிகாரத்து வமாகும்.

சிலர் அதிகாரத்துவத்தினை டீ ஜூரி (de jure) அதிகாரத்துவம், டீ பெக்டோ (de facto) அதிகாரத்துவம் எனவும் இரண்டாக வகைப்படுத்துகின்றனர்.

> டீ ஜூரி அதிகாரத்துவம் என்பது சட்ட ரீதியான அதிகாரத்துவமாகும். பதவிகளுக்குரிய அதிகாரங்கள் டீ ஜூரி அதிகாரத்துவத்தினுள் உள்ளடக் கப்படுகின்றன.
>
> டீ பெக்டோ அதிகாரத்துவம் என்பது நடைமுறைசார்ந்த அடிப்படையில் உள்ள அதிகாரத்துவத்தினைக் குறிக்கும். இது சட்ட ஏற்புடைமை கொண்டதல்ல.

அதிகாரம் சட்டரீதியாகப் பிரயோகிக்கப்படும் தன்மையின் அடிப்படையில் அதிகாரத்துவம் வரையறுக்கப்படுகிறது. இத்தகைய சட்டபூர்வத்தன்மையின் தளம் சட்டமாக, வசீகரத்துவமாக, பாரம்பரிய ஏற்புடைமையாக இருக்க முடியும்.

மாவோ எல்லா அதிகாரங்களும் துப்பாக்கியிலிருந்து பிறக்கின்றன என்கிறார். அவரது இந்தக் கருத்து அதிகாரத்துவச் சிந்தனைக்கு எதிரானது. ஏனெனில் எல்லா அதிகாரங்களும் எதிர்மறையான, மக்களால் வெறுக்கப்படுகின்ற ஒன்று அல்ல. மக்களால் அல்லது சட்டத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற அதிகாரங்களும் உள்ளன. அத்தகைய அதிகாரமே அதிகாரத்துவமாகும்.

அதிகாரத்துவம் குறித்து அரசியல் கோட்பாடுகளில் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. லிபரல்வாதிகள் அதிகாரத்துவம் என்பது ஆளப்படுப வர்களின் சம்மதத்தின்படி அமைந்தது என்கின்றனர். லிபரல்வாதிகள் அரசின் அதிகரித்த தலையீட்டினை ஏற்றுக்கொள்வதில்லை என்பதனால் அதிகாரத்துவம் வரையறுக்கப்பட்டதும் பகுத்தறிவு ரீதியானதும் என்கின்றனர்.

பழமைவாதிகள் அதிகாரத்துவத்தினை ஆளப்படுபவர்களுக்கு மேலான ஒன்றாகப் பார்க்கின்றனர். அவர்கள் அதிகாரத்துவம் ஞானம் மற்றும் அனுபவம் என்பவற்றிலிருந்து பிறக்கின்றது என்கின்றனர்.

## 4.3 சட்டபூர்வத்தன்மை

Legitimacy என்பது 'Legitimus' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். Legitimus என்பது சட்டபூர்வமானது என்ற அர்த்தத்தினைத் தருகின்றது. இதன்படி Legitimacy என்பது தமிழில் சட்டமுறைத்தளம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இதனை சட்டபூர்வத்தன்மை எனவும் அழைக்கமுடியும்.

இந்நூலில் Legitimacy என்பது சட்டபூர்வத்தன்மை என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. இது அதிகாரத்துவத்துடன் இணைந்த ஒரு சொற்பதமாகும். சாதாரண அதிகாரம், அதிகாரத்துவம் என்ற நிலையினைப் பெறுவதற்கு சட்டபூர்வத்தன்மை இன்றியமையாததாகும். இதனால் சட்டபூர்வத்தன்மை அதிகாரத்துவத்தின் அடிப்படைத்தளமாக உள்ளது.

அதிகாரம் பிரயோகிக்கப்படுதல், அதிகாரப் பிரயோகத்திற்கு குடிமக்கள் கீழ்படிவினைச் செலுத்துதல் போன்றன அதிகாரத்தின் சட்டபூர்த்தன்மையினைப்

பொறுத்தே சாத்தியமாகின்றன. சட்டபூர்வத்தன்மையில்லாத அதிகாரத்திற்கு கீழ்படிவினைச் செலுத்தவேண்டிய கடப்பாட்டினை நவீன அரசுகளிலுள்ள குடிமக்கள் கொண்டிருப்பதில்லை. இதனால் சட்டபூர்வ அதிகாரத்தினையும் அதிகாரிகளையும் அதிகாரத் தாபனங்களையும் ஊக்குவிக்கின்ற நடைமுறை நவீன அரசுகளில் காணப்படுகின்றது. இதனால் சட்டபூர்வத்தன்மை என்பது அதிகாரத்திற்கான நியாயத்தினை அல்லது அங்கீகரிப்பினை வெளிப்படுத்தும் ஒரு தளமாக உள்ளது.

நவீன அரசுகளில் சட்டபூர்வத்தன்மையினை வெளிப்படுத்தும் மிக முக்கிய பகுதியாக அரசியல் யாப்புக்கள் விளங்குகின்றன. அரசியல் யாப்பு ஒரு அரசின் அடிப்படைச் சட்டமாக இருந்து, அவ்வரசில் இயற்றப்படும் சட்டங்களுக்கு சட்டபூர்வத்தன்மையினை வழங்குகின்றது. அரசியலமைப்புக்கு முரணாக சட்டங்கள் இயற்றப்படுவதனையும் நிறைவேற்று அதிகாரம் பிரயோகிக்கப்படுவதனையும் அரசியல் யாப்புக்கள் தடைசெய்கின்றன. அரசியலமைப்புக்கு முரணாக இயற்றப்படும் சட்டங்களை, நிறைவேற்றுத் தீர்மானங்களை தடைசெய்வதற்கான அதிகாரம் நவீன அரசுகளில் நீதித் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்விதம் நவீன அரசுகளில் சட்டவாக்கத்தினதும் அதிகாரப் பிரயோகத்தினதும் சட்டபூர்வத்தன்மையினை நிர்ணயிக்கும் அரசியல் சாசனமாக அரசியல் யாப்புக்கள் விளங்குகின்றன. அரசியல் யாப்புக்கள் அவை இயற்றப்படும் போது வெளிப்படுத்தப்படும் குடிமக்கள் ஆணை, அதன் மீது குடிமக்கள் கொண்டிருக்கும் விசுவாசம் என்பவற்றின் மூலம் அவற்றின் சட்டபூர்வத்தன்மை நிரூபணமாகின்றது.

சட்டபூர்வத்தன்மைக்கு ஒரு பொதுவான வரைவிலக்கணத்தினைப் பெறுவது சிரமமாயினும், இவ் எண்ணக்கரு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பின்வரும் விளக்கங்களினூடாக சட்டபூர்வத்தன்மையினைப் புரிந்துகொள்ளமுடியும்.

மார்டின் லிப்சட் - சட்டபூர்வத்தன்மை என்பது நடைமுறையிலுள்ள அரசியல் நிறுவனங்களே சமூகத்திற்கு மிகவும் பொருத்தமானது என்ற நம்பிக்கையினை பேணிக்காப்பதற்காக ஒரு முறைமை கொண்டிருக்கும் திறன்களை உள்ளடக்கியதாகும் என்கிறார்.

ஜோன் லொக் - ஆளப்படுபவர்களின் சம்மதத்தினூடாகவே அரசியல் சட்டபூர்வத்தன்மை உருவாகின்றது என்று கூறுகின்றார். ஆளப்படுபவர்களின்

சம்மத்தினைப் பெறாத அரசாங்கம் சட்டரீதியற்ற அரசாங்கம் என லொக் குறிப்பிடுகின்றார்.

ஜீன் பிளன்டல் - சட்டபூர்வத்தன்மை என்பது மக்கள் தங்களுக்குரிய ஒழுங்கமைப்புக்களை கேள்விக்கிடமின்றி தாமாகவே ஏற்றுக்கொள்வதனைக் குறிக்கும் என்கிறார்.

ரொபர்ட் ஏ டால் - சட்டபூர்வத்தன்மையினை ஒரு நீர் தேக்கத்திற்கு ஒப்பிடுகின்றார். நீரினை ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் வைத்திருப்பதுபோன்று அரசியல் உறுதிப்பாடும் பேணப்படுகின்றது. உறுதிப்பாடு குறிப்பிட்ட மட்டத்தினை விட கீழ் இறங்குகிறபோது அதன் சட்டபூர்வத்தன்மை ஆபத்துக் குள்ளாகின்றது.

சட்டத்தின் அடிப்படையிலும் பகுத்தறிவின் அடிப்படையில் அரசியல் நிறுவனங்கள் செயற்படுவதற்கும் அதிகாரத்தினைப் பிரயோகிப்பதற்கும் உள்ள ஒரு தளமாக சட்டபூர்வத்தன்மை விளங்குகின்றது.

சட்டபூர்வத்தன்மையின் மூன்று மூலாதாரங்களை மெக்ஸ் வெபர் அடையாளப்படுத்துகின்றார். மரபுகள், தனிமனித ஆற்றல்கள், சட்டம் ஆகியன அம்மூன்று மூலாதாரங்களாகும்.

> சமூகம் ஏற்றுக்கொள்ளுகின்ற மரபுகளும் வழக்காறுகளும் அரசியல் நிறுவனங்களுக்கும் அவற்றின் அதிகாரப் பிரயோகத்திற்கும் சில சந்தர்ப்பங்களில் சட்டபூர்வத்தன்மையினை வழங்குகின்றன. ஐக்கிய இராச்சியத்தில் அரசியல் யாப்புக்கு சட்டபூர்வத்தன்மையினை வழங்கும் மிகவும் முக்கிய மூலாதாரமாக அந்நாட்டில் நடைமுறையிலுள்ள சில மரபுகளும் வழக்காறுகளும் உள்ளன.
>
> தலைவர்களின் தனிப்பட்ட திறன்களும் வசீகரத்தன்மைகளும் சில சந்தர்ப்பங்களில் மக்களின் ஏற்புடைமைக்குக் காரணமாக அமைகின்றன. அந்தவகையில் தனிப்பட்ட திறன்களும் சட்டபூர்வத்தன்மையின் மிக முக்கிய மூலாதாரங்களுள் ஒன்று என்கிறார் மெக்ஸ் வெபர்.
>
> சட்டபூர்வத்தன்மையினை வெளிப்படுத்தும் மிகவும் முக்கிய மூலாதாரம் நடைமுறையிலுள்ள சட்டங்களாகும். நடைமுறையிலுள்ள சட்டங்களே புதிய சட்டங்களுக்கும் அதிகாரப் பிரயோகங்களுக்கும் சட்டபூர்வத் தன்மையினை வழங்குகின்றது.

சட்டபூர்வத்தன்மையினை சிலர் கருத்தியல்சார் சட்டபூர்வத்தன்மை, அமைப்புசார் சட்டபூர்வத்தன்மை, ஆள்சார் சட்டபூர்வத்தன்மை என மூன்று வகைப்படுத் துகின்றனர்.

சமூகத்தில் நிலவுகின்ற கருத்தியல்கள் சட்டபூர்வத்தன்மையின் மூலாதாரமாக இருக்கின்றபோது, அது கருத்தியல்சார் சட்டபூர்வத் தன்மை என அழைக்கப்படுகின்றது.

அமைப்புசார் சட்டபூர்வத்தன்மை என்பது முறைமையொன்றில் உள்ள அமைப்புசார் விதிகளும் ஒழுங்குகளும் சட்டபூர்வத்தன்மையின் மூலாதாரமாக இருக்கும்போது அது அமைப்புசார் சட்டபூர்வத்தன்மை என அழைக்கப்படுகின்றது. ஜனநாயக முறைகளில் இத்தகைய அமைப்புசார் சட்டபூர்வத்தன்மை அதிகளவு செல்வாக்குச் செலுத்து வதனை அவதானிக்கமுடிகின்றது.

சில சந்தர்ப்பங்களில் தலைவர்களின் தனிப்பட்ட திறன்களும் பண்புகளும் சட்டபூர்வத்தன்மையினை நிர்ணயிக்கின்றன. அத்தகைய சட்டபூர்வத்தன்மை ஆள்சார் சட்டபூர்வத்தன்மை என அழைக்கப் படுகின்றது.

பல்வேறுபட்ட ஆட்சிமுறைகளிலும் சட்டபூர்வத்தன்மை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றது.

கம்யூனிசவாதிகள் அரசியல் சட்டபூர்வத்தன்மையினை புரட்சியினூடாக அல்லது கிளர்ச்சியினூடாக அல்லது தேர்தல் வெற்றியினூடாக பெற முயற்சிக்கின்றனர்.

ஜனநாயகவாதிகள் அரசியல் சட்டபூர்வத்தன்மையினை அரசியலமைப்பு விதிகளினூடாக உறுதிசெய்கின்றனர். அரசியலமைப்பு வழிமுறை களினூடாக மக்கள் ஆணையினைப் பெறுவது ஜனநாயக அரசாங்கமொன்றின் சட்டபூர்வத்தன்மைக்கு அவசியமான ஒன்றாக கருதப்படுகின்றது.

பாசிசவாதிகள் மரபுகள் மற்றும் தனியாள் ஆற்றல்களின் அடிப்படையில் சட்டபூர்வத்தன்மையினை நிறுவுவதற்கு முயற்சிக் கின்றனர்.

முடியாட்சி முறையில் தெய்வீக உரிமை, மரபுகள், வழக்காறுகள் என்பன சட்டபூர்வத் தன்மையினை உறுதிசெய்வதற்கான பிரதான மூலாதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

## பிரதான சொற்கள்

அதிகாரம், அதிகாரத்துவம், அதிகாரப் பிரயோகம், சட்டபூர்வத்தன்மை

## பயிற்சி வினாக்கள்

அரசியலுக்கும் அதிகாரத்திற்குமிடையே உள்ள தொடர்பின் இயல்பினைப் பரிசீலிக்குக.

“அதிகாரத்தினை யார், எப்போது, எப்படிப் பெறுகின்றனர் என்பது பற்றியதே அரசியலாகும்.”- ஆராய்க.

அதிகாரத்துவத்திற்கும் சட்டபூர்வத்தன்மைக்கும் இடையேயுள்ள தொடர்பினைப் பரிசீலிக்குக.

பின்வரும் எண்ணக்கருக்களைப் பரிசீலிக்குக.
(அ) அதிகாரம்
(ஆ) அதிகாரத்துவம்
(இ) சட்டபூர்வத்தன்மை

அதிகாரத்தின் பல்வேறு மட்டங்களை அடையாளம் கண்டு, அதிகாரம் பிரயோகிக்கப்படும் விதத்தினைத் தெளிவுபடுத்துக.

## உசாத்துணைகள்

Heywood, A. (1994). ***Political ideas and concepts: An introduction***. New Jersey: St. Martin Press.

Heywood, A. (2002). ***Key concept in politics***. London: Macmillan Publication.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

# அத்தியாயம் - 05

# அரசியல் கருத்தியல்கள்

**உள்ளடக்கங்கள்**


| | | |
|---|---|---|
| 5.1 | தாராண்மைவாதம் | 66 |
| 5.2 | சோசலிசம் | 70 |
| 5.3 | பாசிசமும் நாசிசமும் | 74 |
| 5.4 | பெண்ணியம் | 80 |


**அத்தியாய சுருக்கம்**


அரசு, அரசாங்கம் மற்றும் அரசியல் செயன்முறை தொடர்பாக பல்வேறு சிந்தனைத் தொகுதிகள் காணப்படுகின்றன. இச்சிந்தனைத் தொகுதிகளையே அரசியல் கருத்தியல்கள் என அழைப்பர். நடைமுறை அரசியலில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் சிந்தனைத் தொகுதியாக கருத்தியல்கள் உள்ளன. நடைமுறை அரசியலின் போக்கினை நிர்ணயிக்கும் அளவுக்கு அதன் தாக்கம் உள்ளது. உலகினை வெவ்வேறு முகாம்களாக அடையாளப்படுத்தி, அவற்றுக்கிடையே வேற்றுமையினைத் தோற்றுவிப்பதிலும் கருத்தியல் பங்காற்றியுள்ளது. அதற்கான சக்தி கருத்தியலுக்கு உண்டு. அரசியல் விஞ்ஞானக் கற்கையில் பழைமைவாதம், தேசியவாதம், பெண்ணிலைவாதம், சூழலியல்வாதம் போன்ற பல்வேறு நவீன கருத்தியல்கள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்ற போதிலும் தாராண்மைவாதம், சோசலிசம், மார்க்சியம், பாசிசம், நாசிசம் ஆகிய கருத்தியல்களே மிகவும் தாக்ககரமானதாக உள்ளது.


**அத்தியாயத்தின் நோக்கம்**

அரசியல் விஞ்ஞானத்தினை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்கு பிரதான அரசியல் கருத்தியல்கள் குறித்த அறிமுக அறிவினை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தினை மாணவர்கள் திறம்பட கற்பதன் மூலம் தாராண்மை வாதம், சோசலிசம், பாசிசம், நாசிசம் ஆகிய கருத்தியல்களின் பொருள், வரையறை, வடிவங்கள், பண்புகள், அவற்றின் மறுசீரமைப்புக்கள் குறித்த தெளிவான விளக்கங்களை பெற்றுக்கொள்வர்.

## 5.1 தாராண்மைவாதம் (Liberalism)

நவீன அரசியல் கருத்தியல்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்கும் தாராண்மைவாதம் தேசிய, சர்வதேச அரசியல் பரப்பில் மிகுந்த செல்வாக்குமிக்க அரசியல் நெறியாக உள்ளது. நீண்டகால ரீதியான படிமுறை வளர்ச்சிக்குட்பட்ட இக்கருத்தியல் ஒவ்வொரு கட்டத்திலும் அக்கால சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றமுற்று வந்துள்ளது.

நவீன அரசியல் கருத்தியல் என்றவகையில் தாராண்மைவாதம் 16 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற முதலாளித்துவக் கொள்கையுடன் இணைந்த ஒரு கொள்கையாக எழுச்சியடைந்தது. எனினும் அதன் தோற்றம் மிகவும் தொன்மையானது. கிரேக்க சிந்தனையாளரான அரிஸ்டோட்டிலின் எழுத்துக் களிலும் தாராண்மைவாத சிந்தனை வேர்விட்டுள்ளது. நவீன காலத்தில் அடம் ஸ்மித், டேவிட் றிகாடோ, ஜோன் லொக், ஜே.எஸ். மில், ஜெரமி பெந்தம் போன்றோர் தாராண்மைவாத சிந்தனை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர்.

நவீன அரசியல் கருத்தியல்களுள் மிகவும் செல்வாக்குமிக்க ஒரு கருத்தியலாக தாராண்மைவாதம் உள்ளது. நீண்ட காலமாக வளர்ந்து வந்துள்ள இக்கருத் தியல், உலகில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றம் கண்டு வந்துள்ளது. தாராண்மைவாதம் ‘liber’ என்ற இலத்தீன் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். இதன் பொருள் அடிமையாக அல்லது கொத்தடிமையாக இல்லாமல் சுதந்திரமாகச் செயற்படுவதைக் குறிக்கும். அடிப்படையில் தாராண்மைவாதம் மனித சுதந்திரத்துடன் தொடர்புடைய ஒரு எண்ணக்கருவாகும்.

நவீன கருத்தியல் என்றவகையில் தாராண்மைவாதம் 18 ஆம் நூற்றாண்டிலேயே பிரபல்யம் அடையத் தொடங்கியது. தாராண்மைவாதம் சமூக, பொருளாதார, அரசியல் பரப்பில் சுதந்திரத்தினை வலியுறுத்தும் ஒரு கருத்தியலாகும். இதன்படி தாராண்மைவாதம், சமூகப் பரப்பில் சமய மற்றும் ஒழுக்க ரீதியான சுதந்திரத்தை வலியுறுத்துகிறது. இதனால் தாராண்மைவாதம் உலகியல் தன்மை வாய்ந்ததாகும்.

பொருளாதாரப் பரப்பில் உற்பத்தி, பங்கீடு, ஏற்றுமதி, இறக்குமதி போன்றவற்றில் சுதந்திரத்தை வலியுறுத்துகிறது. இதனால் தாராண்மைவாதம் முதலாளித்துவத்துடன் இணைந்ததாகும். அரசியல் பரப்பில் அரச கட்டுப்பாட்டைக் குறைத்து தனிமனிதனின் அரசியல் சுதந்திரத்தை உறுதிப்

படுத்துவதற்கு முயல்கிறது. இதனால் தாராண்மைவாதம் ஜனநாயக தத்துவங்களைக் கொண்டதாகும்.

முடிவாகக் கூறுவதாயின் தாராண்மைவாதம் அரசின் தலையீட்டினைக் குறைத்து சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சுதந்திரத்தை வலியுறுத்துகின்ற ஒரு கருத்தியலாகும். இவ்வகையில் தாராண்மைவாதம் பின்வரும் பொதுப் பண்புகளைக் கொண்டுள்ளது. அவையாவன:

தனியாள்வாதம்: ஒரு மனிதன் தான் விரும்புபவற்றை தங்கு தடையின்றி செய்வதற்கு வழங்கப்படும் சம வாய்ப்புக்களை உள்ளடக்கியது தனியாள்வாதமாகும்.

சமூக நீதி: தனிமனிதன் ஒவ்வொருவரும் தமக்குரிய உரிமைகளைப் பெற்று வாழ்கின்ற போது அங்கு சமூக நீதி சாத்தியமாகின்றது.

தாராள அரசு: அரசு என்பது மக்களால் உருவாக்கப்பட்ட உயர் சமூக நிறுவனமாகும். அவ்வரசு மனிதர்களுக்கு மகிழ்ச்சியானதும் திருப்திகர மானதுமான வாழ்க்கையினை பெற்றுத்தர வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டில் எழுச்சியடைந்த பொதுநல அரசு பற்றிய சிந்தனை, உலகமயமாக்கம், தனியார்மயமாக்கம் போன்றன தாராண்மைவாதத்தில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தின. இதற்கமைய தாராண்மைவாதம் பாரம்பரிய (பழம்) தாராண்மைவாதம், நவீன (நவ) தாராண்மைவாதம் என்றவகையில் பகுக்கப்பட்டு ஆராயப்படும் போக்கு அதிகரிக்கலாயிற்று.

## 1. பாரம்பரிய தாராண்மைவாதம்

*18* ஆம் நூற்றாண்டில் முன்வைக்கப்பட்ட தாராண்மைவாதக் கருத்துக்களை பாரம்பரிய அல்லது பழம் தாராண்மைவாதம் என அழைப்பர். இந்நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி, அதனோடு இணைந்த முதலாளித்துவத்தின் வளர்ச்சி போன்றவற்றால் விருத்தி செய்யப்பட்ட அரசியல் கருத்துக்கள் பழம் தாராண்மைவாதமாகும். பழம் தாராண்மைவாதக் கருத்துக்களை ஜோன் லொக், அடம் ஸ்மித், டேவிட் ரிகாடோ போன்ற அறிஞர்கள் முன்வைத்தனர்.

பழம் தாராண்மைவாதம் தனிமனித விவகாரங்களில் அரசின் தலையீடுகளோ, கட்டுப்பாடுகளோ இருக்கக் கூடாது என வலியுறுத்துகிறது. இதன் மூலம் பழம் தாராண்மைவாதம் அரசின் தலையிடாக் கொள்கையினை

வலியுறுத்தியது. தனிமனிதன் சுதந்திரத்தினை உச்சமாக அனுபவிக்க வேண்டுமாயின் அரசு சட்டத்தினையும் ஒழுங்கினையும் நிலைநாட்டும் பணிகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தும் பழம் தாராண்மைவாதம், பொலிஸ் அரசு (தலையிடா அரசு) பற்றிய சிந்தனையினை முன்மொழிகிறது.

அரசினை ஒரு இரவுக் காவலாளிக்கு ஒப்பிட்டுப் பேசிய பழம் தாராண்மை வாதிகள் பின்வரும் மூன்று எண்ணக்கருக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்:

யாப்புறுவாதம்: யாப்புறுவாதம் யாப்பின் அடிப்படையிலான ஆட்சி முறையினை வலியுறுத்துகிறது. இதனால் பழம் தாராண்மைவாதிகள் யாப்புறுவாதத்தின் அவசியத்தினை வலியுறுத்துகின்றனர்.

இயற்கை உரிமைகள்: மனிதன் இயற்கையாகப் பெற்றுள்ள உரிமைகளை இது குறிக்கும். ஜோன் லொக் இயற்கை உரிமைகள் பற்றிய கருத்துக்களை வெளியிட்டார்.

தனிமனிதவாதம்: தனிமனித சுதந்திரத்தினை வலியுறுத்துவதன் மூலம் தனிமனிதனை முதன்நிலைப்படுத்துவது தனிமனிதவாதமாகும்.

அரசினை விட தனிமனித நலன்களை முதன்மைப்படுத்தும் பழம் தாராண்மைவாதம் பின்வரும் பண்புகளைக் கொண்டிருந்தது:

1. பொருளாதாரத்தில் தாராளத் தன்மையினை வலியுறுத்துகிறது.
2. தலையிடா அரசுக் கொள்கையினை வலியுறுத்துகிறது.
3. கட்டுப்பாடுகளற்ற சுதந்திரத்தினை வலியுறுத்துகிறது.
4. திறந்த சந்தைப் பொருளாதாரத்தை வலியுறுத்துகிறது.
5. உரிமை அடிப்படையிலான சமூக நீதியினை வலியுறுத்துகிறது.
6. அரசினை விட தனிமனிதனுக்கு முன்னுரிமையளிக்கிறது.

**2. நவீன தாராண்மைவாதம்**

19 ஆம் நூற்றாண்டில் முன்வைக்கப்பட்ட தாராண்மைவாதக் கருத்துக்களை நவீன தாராண்மைவாதம் என அழைப்பர். இந்நூற்றாண்டில் பழம் தாராண்மைவாதத்திற்கு எதிராக எழுந்த விமர்சனங்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் மறுசீரமைக்கப்பட்ட தாராண்மைவாதம் நவீன தாராண்மைவாதமாகும். இதன்படி அரசின் தலையிடாக் கொள்கை கைவிடப்பட்டு, தனிமனித

விவகாரங்களில் அரசின் தலையீடு அவசியம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. நவீன தாராண்மைவாதத்தின் எழுச்சிக்கு ஜெரமி பெந்தம், ஜே.எஸ். மில் ஆகியோரது பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாளித்துவத்தின் வளர்ச்சியினால் தோற்றம் பெற்ற பொருளாதார அசமத்துவம், வறுமை, வாழ்க்கைப் பிரச்சினை, சமூக மற்றும் சுகாதார நெருக்கடிகள், வேலை நேரம் மற்றும் ஓய்வு நேர நெருக்கடி, தொழிலாளர் உரிமைகள் தொடர்பான நெருக்கடிகள் போன்ற பிரச்சினைகளுக்கு நவீன தாராண்மைவாதம் தீர்வு காணமுற்பட்டது. இதற்கமைய நவீன தாராண்மைவாதம் பொதுநல அரசு பற்றிய சிந்தனையை முன்வைத்ததுடன் தனிமனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்து விவகாரங்களிலும் அரசின் ஈடுபாட்டினை அதிகரிக்கும் கருத்துக்களை முன்வைத்தது.

அரசினை பொதுநல ஸ்தாபனமாக வலியுறுத்தும் நவீன தாராண்மைவாதம் பின்வரும் எண்ணக்கருக்களை அறிமுகம் செய்தது:

பொதுநலவாதம்: அரசு மனிதர்களின் பொதுத் தேவைகளை இனங்கண்டு அவற்றை பூர்த்தி செய்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட மனித சுதந்திரம்: ஒவ்வொருவரும் சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டுமாயின் சுதந்திரம் வரையறுக்கப்பட வேண்டும்.

சமூக சீர்திருத்தம்: சமூகத் தேவைகளுக்கு ஏற்ப சகல துறைகளிலும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களால் தாராண்மைவாதம் வளர்ச்சி கண்டதுடன் புதிய சமூக, பொருளாதார, அரசியல் சூழலுக்கு ஏற்ப மாற்றமுற்றது. நவீன தாராண்மைவாதம் பின்வரும் பண்புகளைக் கொண்டிருந்தது.

1. சமூக தாராளவாதத்தினை வலியுறுத்துகிறது.
2. பொதுநல அரசுக் கொள்கையினை வலியுறுத்துகிறது.
3. கட்டுப்பாடுகளுடன் கூடிய சுதந்திரத்தினை வலியுறுத்துகிறது.
4. சமூக முதலாளித்துவத்தை வலியுறுத்துகிறது.
5. நியாய அடிப்படையிலான சமூக நீதியினை வலியுறுத்துகிறது.
6. சமூக முன்னேற்றத்தின் ஊடான தனிமனித மேம்பாடு.

*1970 களில் வளர்ச்சியடைந்த பூகோளமய சூழலுக்கு ஏற்ப தாராண்மைவாதம் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டது. இவ்விதம் மறுசீரமைக்கப்பட்ட தாராண்மைவாதத்தினை பின்வந்த தாராண்மைவாதம் என அழைப்பர். குறைந்தபட்ச அல்லது முகாமைத்துவ அரசுக் கொள்கையினை வலியுறுத்தும் பின்வந்த நவ தாராண்மைவாதத்தில் பின்வரும் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன:*

*அரசைக் குறுகியதாக்குதல்: சகல விடயங்களிலும் அரசு தலையிடாது குறிப்பிட்ட விடயங்களில் மட்டும் அரசு தலையிட வேண்டும்.*

*அரசின் பொதுநலப் பணிகளை தனியார்மயமாக்குதல்: அரசின் பொதுநலப் பணிகள் பலவற்றை நிறைவேற்றும் பொறுப்பினை தனியார்மயப்படுத்தல்.*

*அரசாங்கத்தை மீளமைத்தல்: அரசாங்கத்தை மீண்டும் ஒழுங்குபடுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.*

## 5.2 சோசலிசம் (Socialism)

*சமூக சமத்துவத்தினை வலியுறுத்தும் ஒரு கருத்தியலே சோசலிசமாகும். சோசலிசம் பிளேட்டோவின் 'குடியரசு', தோமஸ் மோரின் 'யுடோப்பியா' ஆகிய ஆக்கங்களில் வேர்விட்டுள்ள போதிலும் நவீன கருத்தியல் என்றவகையில் சோசலிசம் 19 ஆம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெற்றது. இந்நூற்றாண்டில் சோசலிசம் கைத்தொழில்மய முதலாளித்துவத்திற்கான ஒரு மாற்றீடாக எழுச்சியடைந்தது.*

*சோசலிசம் கைத்தொழில்மய முதலாளித்துவத்தின் தோற்றத்தினால் ஐரோப்பாவில் உருவான சமூக, பொருளாதார சூழ்நிலைகளுக்கு எதிரான கருத்தியலாக தோற்றம் பெற்றது. இதனால் சோசலிச சிந்தனைகள் கைத்தொழில்மயமாக்கத்தினால் துன்பப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுடன் இணைந்து கொண்டன. சோசலிசம் தாராள சந்தைச் சமூகத்திற்கு எதிரான கருத்தியலாகும்.*

*சோசலிசத்துடன் தொடர்புடைய* 'socialist' *எனும் சொல்* 'sociare' *எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். இச்சொல் பிரித்தானியாவில் 1827 இல் பிரசுரமான கூட்டுறவுச் சஞ்சிகையொன்றில் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது. 1830 களின் ஆரம்பப்பகுதியில் இருந்து பிரித்தானியாவில்* Robert Owen *மற்றும் பிரான்சில்* Saint Simon *ஆகியோர்*

தமது அரசியல் நம்பிக்கைகளைக் குறிப்பிடுவதற்கு சோசலிசம் எனும் சொல்லினைப் பயன்படுத்தினர். 1840 களில் கைத்தொழில்மயமான பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளில் சோசலிசம் எனும் சொல் பிரபல்யம் அடைந்தது.

சோசலிசம் என்பது சமதர்மம் எனும் பொருளை உணர்த்துகின்ற போதிலும் அச்சொல்லினை தெளிவாக வரையறுப்பது மிகவும் கடினமானது. அது பற்றி பல்வேறு அறிஞர்கள் பலதரப்பட்ட விளக்கங்களைத் தந்துள்ளனர். இது பற்றிக் குறிப்பிடும் Schadwell "சோசலிசம் மனிதன் மனதை ஆட்கொண்டுள்ள சிக்கலானதும் பல பொருள் தரும் குழப்பமான விளக்கங்களையும் கொண்டதுமாகும்" என்கிறார். Rappoport சோசலிசத்தினை, "பல மாடிகளைக் கொண்ட வீட்டிற்கு ஒப்பிடுகின்றார்." அவரது கருத்தின்படி நீதி, சமத்துவம், சகிப்புத் தன்மை, சுதந்திரம், அமைதி, உரிமை ஆகிய அனைத்தும் கொண்டது சோசலிசமாகும்.

Hugham சோசலிசம் என்பது "ஒரு அரசியல் இயக்கமாகும்" என்கிறார். இவ்வியக்கம் பங்கீட்டுக் கருவிகளை ஜனநாயக ரீதியாக முகாமைப்படுத்துதல் மற்றும் கூட்டுடைமை வழிமுறைகளின் ஊடாக சுரண்டலை ஒழிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். பொருட்களை நன்முறையில் உற்பத்தி செய்து சிறந்த முறையில் பகிர்ந்தளிப்பது சோசலிசம் என பிரித்தானிய கலைக்களஞ்சியம் கூறுகிறது. இதன்படி சோசலிசம் எந்தவொரு தனிமனிதனுக்கும் சொந்தமானதல்ல. அது அனைவருக்கும் பொதுவானதாகும். பொருட்கள் மீதான வரியும் அவற்றுக்கு காரணமான வையும் பொதுச் சொத்தாக இருக்க வேண்டும் என்பது சோசலிசத்தின் அடிப்படையாகும்.

சமதர்மவாதத்தினை வலியுறுத்தும் ஒரு அரசியல் கருத்தியலே சோசலிசமாகும். சோசலிசம் பின்வரும் பண்புகளைக் கொண்டுள்ளன: .

சமூகம்: சோசலிசம் தனிமனிதர்களை விட சமூகத்திற்கு அதி முக்கியத்துவம் கொடுக்கிறது. தனிமனித நலன்கள் சமூக நலன்களால் மாற்றீடு செய்யப்படுகின்றது. தொழில் விருத்தியும் விஞ்ஞான முறைகளின் பிரயோகமும் சமூக முன்னேற்றத்திற்கு பயன்படத்தக்கதாக இருக்க வேண்டும்.

நோக்கம்: சோசலிசத்தின் அடிப்படை நோக்கம் முதலாளித்துவத்தினை பூண்டோடு அழிப்பதாகும். முதலாளித்துவ வர்க்கத்தினரும் தனியார்

தொழில் துறைகளும் தொழிலாளர் வர்க்கத்தின் இயல்பான எதிரியாகக் கருதப்படுகின்றனர். அரசு மக்களின் பாதுகாவலன் என்றவகையில் முதலாளித்துவத்தின் கொடுங்கோண்மையிலிருந்து அது மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

எதிர்ப்பு: சோசலிசம் முதலாளித்துவத்திற்கு எதிர்ப்பினைக் காட்டுகிறது. முதலாளித்துவம் இலாபம் ஈட்டுவதனை நோக்காகக் கொண்டுள்ளது. முதலாளிகள் பொது நோக்கத்திற்காக உற்பத்திகளை அதிகரிப்பதில்லை. சொத்துள்ளவர்கள் தொடர்ந்து தமது சொத்தினைப் பெருக்கிக் கொண்டு செல்கின்றனர். சொத்தற்றவர்கள் எப்போதும் தாழ் நிலையிலேயே இருக்கின்றனர்.

போட்டி: சோசலிசம் முதலாளித்துவத்தின் வழியாக உருவாகும் போட்டித் தன்மையினை எதிர்க்கின்றது. போட்டித் தன்மை அதிகரித்த பொருளாதார வீண்விரயத்தினை ஏற்படுத்துகிறது. இதனால் சோசலிசம் போட்டிற்குப் பதிலாக ஒத்துழைப்பினை வரவேற்கிறது.

சமத்துவம்: சோசலிசம் சமத்துவத்தினை வரவேற்பதுடன் தற்போதுள்ள ஏற்றத் தாழ்வுகள் முதலாளித்துவத்தினால் உருவானது எனக் கூறி முதலாளித்துவத்தினை அது கண்டிக்கிறது. சமூக ஏற்றத்தாழ்வினை இல்லாதொழித்து சகல மட்டங்களிலும் சமத்துவத்தினை ஏற்படுத்துவதற்கு சோசலிசம் முயற்சிக்கிறது.

தனியார் சொத்து: சோசலிசம் நிலத்தினை அடிப்படையாகக் கொண்ட தனியார் சொத்துடைமைக்கு எதிராக வாதிக்கிறது. நிலம் இயற்கையின் கொடை எனக் கருதும் சோசலிசவாதிகள் அது தனிப்பட்டவர்களின் சுய நலன்களுக்காக வியாபாரப் பொருளாக மாற்றப்படக் கூடாது என்கின்றனர்.

தனியார் துறை: சோசலிசம் தனியார் துறையின் இருப்பினை கண்டிக்கிறது. முதலாளித்துவம் அழிக்கப்படும் போது கூடவே தனியார் துறையும் அழிக்கப்பட வேண்டும் என சோசலிசம் வாதிடுகிறது. சகல உற்பத்திக் கருவிகளும் அரச கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்பதுடன் அவை சமூகமயப்படுத்தப்படவும் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

கூட்டுறவு: சோசலிசம் சமூகக் கூட்டுறவினை வலியுறுத்துகிறது. மனிதன் ஒரு சமூகப் பிராணி என்றவகையில் அவர்களுக்கிடையிலான உறவு

ஒத்துழைப்புச் சார்ந்ததாக இருக்க வேண்டும் என சோசலிஸ்டுகள் வலியுறுத்துகின்றனர்.

சுரண்டல்: சோசலிசம் தொழிலாளர்கள் மீதான சுரண்டலையும் அடக்கு முறையினையும் எதிர்க்கின்றது. சோசலிசவாதிகள் சுரண்டலை ஊக்குவிக்கின்ற அடக்குமுறையினைப் பிரயோகிக்கின்ற கருவியாக அரசினை காண்கின்றனர். இதனால் அரசு இல்லாத ஒரு நிலையினையே அவர்கள் விரும்புகின்றனர்.

சோசலிசத்தினை நோக்கிய பாதை மிக நீண்டதும் நெருக்கடிமிக்கதுமாகும். சோசலிசத்தின் இறுதி இலக்கினை அடைவதற்கான வழிமுறைகளில் சோசலிசவாதிகளுக்கு மத்தியில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுள்ளன. இவ் அபிப்பிராய பேதங்கள் சோசலிச மரபினுள் பல புதிய வடிவங்கள் உருவாகக் காரணமாகியது. அவ்வடிவங்களாவன:

புரட்சிகர சோசலிசம்: முதலாளித்துவ ஆட்சி முறையினை புரட்சியின் ஊடாக மாற்ற வேண்டும் என வலியுறுத்தும் சோசலிசமே புரட்சிகர சோசலிசம் ஆகும். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய சோசலிசம் புரட்சிகர சோசலிசமாகும்.

பரிணாம சோசலிசம்: பரிணாம வளர்ச்சியின் ஊடாக சோசலிசத்தினை நிலைநாட்ட வேண்டும் என வலியுறுத்தும் ஒரு வகை சோசலிசம் பரிணாம சோசலிசமாகும். இது புரட்சிகர சோசலிசத்திற்கு எதிரான கொள்கையாகும்.

கற்பனா சோசலிசம்: இதனை யுடோப்பியவாதம் எனவும் அழைப்பர். முழுநிறைவான கற்பனை சமூகம் ஒன்றினை உருவாக்குவதனை நோக்காகக் கொண்ட சிந்தனைத் தொகுதி கற்பனா சோசலிசமாகும். இது நடைமுறைக்குப் பொருந்தாத சோசலிசமாகும்.

அரச சோசலிசம்: தீவிர தனியாள்வாதத்திற்கு எதிராகத் தோற்றம் பெற்றது அரச சோசலிசம் அல்லது கூட்டுடைமைவாதமாகும். அரசு அழிக்கப்பட வேண்டியதல்ல. முதலாளித்துவத்தின் கொடுமைகளே அழிக்கப்பட வேண்டும் என்கிறது.

ஜனநாயக சோசலிசம்: ஜனநாயக வழிமுறைகளினூடாக சோசலிசத் தத்துவங்களும் கொள்கைகளும் அமுலாக்கப்பட வேண்டும் எனக் கூறும்

சோசலிசம் ஜனநாயக சோசலிசமாகும். இலங்கை போன்ற நாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் சோசலிசம் ஜனநாயக சோசலிசமாகும்.

பேபியனிசம்: ஜனநாயக வழிமுறைகளின் ஊடாக படிப்படியாக சமூக நலனை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்ட சோசலிசம் பேபியனிசம் ஆகும். பிரிட்டன் போன்ற நாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் சோசலிசம் பேபியனிசம் ஆகும்.

சிண்டிக்கலிசம்: சிண்டிக்கலிசம் இடதுசாரிச் சிந்தனைகளின் திருத்திய வடிவமாகும். இது தொழிற் சங்கத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசுகளற்ற வர்க்கங்களில்லாத சமூகத்தின் உருவாக்கத்தினை வலியுறுத்துகிறது. பிரான்சில் இதன் ஆதிக்கம் நிலவுகின்றது.

கில்ட் சோசலிசம்: தீவிர சிண்டிகலிசத்திற்கும் அரச சோசலிசவாதத்திற்கும் இடைப்பட்ட ஒரு மத்திய வழிக்கொள்கையே கில்ட் சோசலிசம் ஆகும். இது சோசலிச சமூகம் ஒன்றினை உருவாக்குவதற்கு அரசியலமைப்புசார் சமாதான வழிமுறைகள் அவசியம் என வலியுறுத்துகிறது.

## 5.3 பாசிசமும் நாசிசமும் (Fascism and Nazism)

பாசிசமும் நாசிசமும் பழைமைவாதம், தாராண்மைவாதம், மார்க்சிசம் ஆகிய அரசியல் கருத்தியல்களுக்கு எதிரான ஒரு கருத்தியலாகும். பாசிசமும் நாசிசமும் அனைத்தாண்மை அரசினை வலியுறுத்துகிறது. இவ்விரு கருத்தியல்களும் முதலாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றன. பல ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகள் மூலம் ஏற்பட்ட அரசியல் இடைவெளி புதிய கருத்தியல்களின் உருவாக்கத்திற்கான கதவினைத் திறந்துவிட்டது. இதன் விளைவாக தோற்றம்பெற்றதே பாசிசமும் நாசிசமுமாகும். இக்கருத்தியல்கள் முதலாம் உலக மகா யுத்தத்தினைத் தொடர்ந்து இத்தாலியிலும் ஜேர்மனியிலும் எழுச்சியடைந்ததுடன் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவுடன் வீழ்ச்சியடையத் தொடங்கியது. எனினும் உலக அரசியலில் இக்கருத்தியல்களின் செல்வாக்கு இன்றும் உள்ளது.

பாசிசம் ஒரு தீவிர வலதுசாரிக் (Extreme Right - wing) கருத்தியலாகும். பாசிசம் தீவிர தேசியவாதம் மற்றும் உயர்குழாம் வாதத்தினை ஆதரிக்கின்றது; அனைத்தாண்மை அரசினை வலியுறுத்துகிறது; தனிமனித உரிமைகளை விட அரசின் நலன்களை முதன்மைப்படுத்துகிறது. பாசிசக் கருத்தியல் இத்தாலியில்

பெனிட்டோ முசோலினியினால் தோற்றுவிக்கப்பட்டது. முசோலினி உருவாக்கிய கட்சி தேசிய பாசிசக் கட்சி என அழைக்கப்பட்டது. இத்தாலியினை சுமார் இருபது ஆண்டுகள் முசோலினி பாசிசக் கருத்தியலினைக் கொண்டு ஆட்சி செய்தார்.

இத்தாலி முதலாம் உலக மகா யுத்தத்தின் மூலம் எதிர்கொண்ட பாதிப்புக்கள், அந்நாட்டின் பலவீனமான சமூக, அரசியல் கட்டமைப்பு, இத்தாலியில் இடதுசாரிகள் பலவீனமுற்றிருந்தமை முதலியன பாசிசம் தோற்றம் பெறுவதனை இயலுமானதாக்கியது. இத்தாலிய மக்கள் முதலாம் உலகப் போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். முசோலினி தனது பேச்சாற்றலின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களை தம் பக்கம் ஈர்த்தார்.

1922 இல் இத்தாலியின் தலைநகரில் ‘உரோம் அணி வகுப்பு’ என்ற பெயரில் முசோலினி பெரும் பேரணியினை வெற்றிகரமாகக் கொண்டு நடத்தினார். அவரது செல்வாக்கினைக் கண்டு அஞ்சிய ஆட்சியாளர்கள் முசோலினியிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்தனர். இவ்விதம் ஆட்சிப் பொறுப்பினை பெற்றுக் கொண்ட முசோலினி கொண்டு நடத்திய ஆட்சியினையே பாசிச ஆட்சி என அழைப்பர். முசோலினியின் செயற்பாடுகள் இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு வழிவகுத்தன. 1945 ஏப்ரலில் அவர் கொல்லப்பட்டதுடன் இத்தாலியில் பாசிச ஆட்சி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

நாசிசம் தீவிர ஜேர்மனிய இனத்துவ (ஆரிய) தேசியவாதத்தினை வலியுறுத்தும் ஒரு கருத்தியலாகும். நாசிசம் அனைத்தாண்மை அரசினை வலியுறுத்துகிறது; தேசிய சோசலிச ஜேர்மனிய தொழிலாளர் கட்சியின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது; ஆரிய இன மேலாதிக்கத்தை வலியுறுத்துகிறது; யூத எதிர்ப்புவாதத்தினை அடிப்படையாகக் கொண்டது. இக்கருத்தியல் ஹிட்லரினால் ஜேர்மனியில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஹிட்லர் எழுதிய ‘எனது போராட்டம்’ என்ற நூல் நாசிசக் கருத்தியலை விளக்கும் முக்கிய ஆவணமாக உள்ளது.

ஹிட்லர் 1920 இல் நாசிக் கட்சியினைத் தோற்றுவித்தார் (தேசிய சோசலிச ஜேர்மனிய தொழிலாளர்கள் கட்சி). தனது பேச்சாற்றலின் மூலம் ஜேர்மனிய மக்களை ஹிட்லர் கவர்ந்தார். 1919 ஆம் ஆண்டைய வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் ஜேர்மனிக்கு இழைக்கப்பட்ட அவமானங்களை மக்களிடம் உணர்ச்சிபூர்வமாக எடுத்துக்காட்டியதுடன் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் என்ற அணுகுமுறையை ஹிட்லர் கடைப்பிடித்தார். இரத்தம் சிந்தாமல்

பாராளுமன்ற வழிமுறைகளை தந்திரமாகப் பயன்படுத்தி 1933 ஆம் ஆண்டு ஹிட்லர் பதவிக்கு வந்தார்.

ஹிட்லர் தனது ஆட்சியில் அரசியலமைப்பு வழிமுறைகளைப் புறந்தள்ளினார்; யூத எதிர்ப்புவாதத்தினை முன்னிறுத்திச் செயற்பட்டார்; யூத இனப் படுகொலையினை நிகழ்த்தினார். ஆக்கிரமிப்புக் கொள்கையில் அதிக நம்பிக்கை கொண்டிருந்த ஹிட்லர் ஜேர்மனிய ஏகாதிபத்தியத்தினை நிலைநிறுத்துவதில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். ஹிட்லரின் செயற்பாடுகளும் இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு வித்திட்டதுடன் இறுதியில் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.

பாசிசமும் நாசிசமும் இரு வேறு கருத்தியல்களாயினும் அவற்றின் அடிப்படைப் பண்புகளில் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஒரு அறிஞர் குறிப்பிடுவதன்படி பாசிசமும் நாசிசமும் இரு வேறு கோப்பைகளில் ஊற்றப்பட்ட ஒரே நச்சுத் திரவமாகும். இவ்விரு கருத்தியல்களினதும் அடிப்படைப் பண்புகளை பின்வருமாறு நோக்கலாம்:

கோட்பாட்டுத் தளத்தினைக் கொண்டிராதது: பாசிசம் கோட்பாட்டு ரீதியானது என்பதை விட அது நடைமுறை சார்ந்த ஒரு வேலைத்திட்டமாகும். இதனால் பாசிசவாதிகள் பேச்சிற்கு அன்றி செயற்பாட்டுக்கே அதிக அழுத்தம் கொடுத்தனர். இது பற்றிக் குறிப்பிடும் முசோலினி "எனது வேலைத்திட்டம் பேச்சு அல்ல. அது செயற்பாடேயாகும் (My programme is action and not talk)" என்கிறார். செபைன் என்பவர் குறிப்பிடுவதன்படி, பாசிசம் என்பது நடைமுறை சூழ்நிலைக்குப் பொருந்தக்கூடிய பல்வேறுபட்ட மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்ட சிந்தனைகளைக் கொண்ட ஒரு தொகுதியாகும்.

அரசின் புகழ் பாடுதல்: அரசின் உயர் தன்மையும் அரசினை வழிபடுதலும் பாசிசத்தின் அடிப்படைக் குணாம்சங்களாகும். இதிலிருந்து பாசிசம் அரசுக்கு அதி உன்னத இடத்தினைக் கொடுக்கின்றது. முசோலினி குறிப்பிடுவதன்படி "எல்லாம் அரசுக்குள்தான். அரசுக்கு வெளியே எதுவும் இல்லை. அரசுக்கு எதிராகவும் எதுவுமே இல்லை." பொதுவாக பாசிஸ்டுகள் அரசு ஆத்மார்த்தமானதும் அதற்கென உரித்தான அபிலாஷைகளையும் கொண்ட ஒரு சுதந்திர நிறுவனமாகும் என்றும் கூறுகின்றனர். இதனால் அரசு மக்களுக்குரியதல்ல. மக்கள்தான் அரசுக்குரியவர்கள் என்ற கருத்து பாசிசத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

**ப**குத்தறிவுக்கு எதிரானது: பாசிஸ்டுகள் பகுத்தறிவில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மனிதன் பகுத்தறிவுடைய ஒரு பிராணியல்ல என்றும் மனிதனது சமூக, அரசியல் செயற்பாடுகள் சில தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டன என்றும் வாதிடும் பாசிஸ்டுகள், மக்கள் அரசுக்கும் தலைவனுக்கும் கண்மூடித்தனமான கீழ்படிவினை வழங்கவேண்டும் என்பதில் அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர். இதற்கமைவாகவே முசோலினியின் ஆட்சியின் கீழ் இத்தாலியின் ஒவ்வொரு வகுப்பறைகளிலும் அவரது உருவப்படம் தொங்க விடப்பட்டதுடன் முசோலினி எப்போதும் சரியானவர் என்ற கருத்தும் பரப்பப்பட்டது.

புனைவுகளில் நம்பிக்கை கொள்ளல்: ஆதாரபூர்வமான கருத்துக்கள் அல்லது நியாயங்களிலும் பார்க்க புனைவுகளை அடிப்படையாகக் கொண்ட பிரச்சாரங்களிலேயே பாசிஸ்டுகள் அதிக கவனம் செலுத்தினர். உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை மீண்டும் மீண்டும் உரைப்பதை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒரு பொய்யினை நூறு முறை கூறும்போது அது உண்மையாகின்றது என்பது சில பாசிஸ்டுகளின் நம்பிக்கையாக இருந்தது.

வன்முறையினை ஆதரித்தல்: பாசிசம் வன்முறையினையும் யுத்தத்தினையும் விரும்பி வரவேற்கின்றது. வன்முறையினை அரசியல் இலக்கினை அடைந்துகொள்வதற்கான ஒரு வழிமுறையாக கருதும் பாசிஸ்டுகள், அரசியல் வாழ்வில் யுத்தம் என்பது அவசியமானதும் தவிர்க்க முடியாததுமாகும் என்கின்றனர். இவர்களது பார்வையில் யுத்தம் ஒழுக்கத்தினையும் தன்னம்பிக்கையினையும் தேசத்தின் மீதான விசுவாசத்தினையும் அதிகரிக்கச் செய்யும் ஒரு கருவியாகும். இது குறித்துக் குறிப்பிடும் முசோலினி ‘‘யுத்தம் ஆண்களுக்குரியதும் மகப்பேறு பெண்களுக்குரியதுமாகும்’’ என்கிறார்.

மனித சுதந்திரம்: பாசிசம் தனிமனிதர்களின் உரிமைகளை விட அரசின் பலத்திலேயே அதிக கவனம் செலுத்துகிறது. அரச சுதந்திரம் என்பது தேசமொன்றின் பலத்தில் தங்கியுள்ளது எனக் குறிப்பிடும் பாசிஸ்டுகள், அரசுக்கே உரித்தான சுதந்திரம் அன்றி வேறு சுதந்திரம் எதுவும் இல்லை என்கின்றனர். எனினும் நடைமுறையில் தனிமனிதன் அரசுக்கு வழங்கும் விசுவாசத்தின் அளவினைப் பொறுத்து சில பரப்புக்களில் சுதந்திரத்தினை நுகர்வதற்கு பாசிச ஆட்சியாளர்கள் இடமளித்திருந்தனர்.

அனைத்தாண்மை அரசு: பாசிசம் அரசின் உயர் தன்மையினை வலியுறுத்துவதிலிருந்து அது சர்வவல்லமை கொண்ட அரசின் மீது அதீத நம்பிக்கை கொண்டுள்ளது. பிரஜைகளின் உரிமைகளில் அன்றி, அவர்கள் அரசுக்கு ஆற்றவேண்டிய கடமையிலேயே பாசிசம் அதிக அழுத்தம் கொடுக்கின்றது. பாசிசத்தின்படி தனிமனிதர்கள் அரச பலிபீடத்தில் தம்மை தியாகம் செய்வதற்கு எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

ஜனநாயகத்திற்கு எதிரானது: முசோலினி ஜனநாயகச் சித்தாந்தம் இத்தாலிக்குப் பொருத்தமற்றது என வாதிட்டதிலிருந்து பாசிசத்தின் ஜனநாயக விரோதப் போக்கினை அறிந்துகொள்ள முடியும். ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்று அம்சங்களிலும் பாசிசவாதிகளுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. பாசிசவாதிகளின் கருத்துப்படி சுதந்திரம் என்பது மக்களின் உரிமை அல்ல. அது அரசின் தயவிலானதாகும். சமத்துவம் பயனற்றதாகும். மனிதன் இயல்பிலேயே சமத்துவமற்றவனாகவே பிறந்துள்ளான். உலகளாவிய சகோதரத்துவம் சாத்தியமானதன்று.

பாராளுமன்ற முறையில் நம்பிக்கையற்றிருத்தல்: பாசிசம் பாராளுமன்ற ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கையற்றது. ஜனநாயகம் இயல்புநிலைக்கு முரணானது எனவும் பாராளுமன்றங்கள் என்பது வெறும் பேச்சுச் சந்தைக் கூடங்கள் என்றும் பாராளுமன்ற அரசாங்க முறை என்பது ஆமை வேகத்தில் நடைபோடும் வினைத்திறனற்ற, ஊழல் நிறைந்த, முட்டாள்களின் அரசாங்கம் எனவும் பாசிசவாதிகள் விமர்சனம் செய்கின்றனர்.

ஆட்சியுரிமை சிலருக்குரியது: பாசிசக் கருத்தாக்கத்தின்படி சாதாரண மக்கள் ஆளும் தகுதியினைக் கொண்டவர்களல்ல. சிலர் மட்டுமே ஆளுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளனர். அரச அதிகாரம் ஒரு சிலரிடமே இருக்க வேண்டும். அவ்வதிகாரத்திற்கு எதிராக கிளர்ந்தெளவோ விமர்சிக்கவோ மக்களுக்கு உரிமையில்லை. மக்களது ஒரே பணி அரசினால் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதேயாகும்.

தனிமனிதவாதத்திற்கு எதிரானது: தனிமனிதவாதத்தின் அடிப்படைக் குணாம்சங்களை பாசிசம் ஏற்றுக்கொள்வதில்லை. பாசிசத்தில் தனிமனிதனுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுவதுமில்லை. தனிமனிதன்

அரசுக்கும் தலைவர்களுக்கும் வழங்கும் அடிபணிவினைப் பொறுத்தே அவர்களுக்குரிய இடம் வழங்கப்படுகின்றது.

பொதுவுடைமைவாதத்திற்கு எதிரானது: பாசிசம் பொதுவுடைமைச் சிந்தனையினை எதிர்ப்பதிலிருந்து தனியார் சொத்துடைமையினை ஏற்றுக்கொள்கிறது. தேசத்தின் நலன்களுக்கு பங்காற்றும் தனியார் நிறுவனங்களை பாசிசம் ஆதரிக்கின்றது. எனினும் வேலை நிறுத்தங்களுக்கும் கடையடைப்புகளுக்கும் பாசிசத்தில் இடமில்லை.

சர்வதேசவாதத்திற்கு எதிரானது: பாசிசம் ஆக்கிரமிப்பினை ஆதரிப்பதிலிருந்து சர்வதேசவாதத்திற்கு எதிரான கொள்கையினைக் கொண்டுள்ளது. அது சர்வதேச சட்டத்தினை நிராகரிப்பதுடன் சர்வதேச நிறுவனங்களின் இருப்பினையும் கண்டிக்கிறது. பாசிஸ்டுகள் சர்வதேச சமாதானத்தினை கோழைகளின் கனவு எனவும் பரிகாசம் செய்கின்றனர்.

ஒரு கட்சி முறையினை ஆதரித்தல்: அரச நிருவாகம் ஒரு கட்சியினால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் எனக்கூறுவதிலிருந்து பாசிசம் ஒரு கட்சி முறையின் இருப்பினை வலியுறுத்துகிறது. ஒரு கட்சி முறையினை ஆதரித்த பாசிஸ்டுகள், ''ஒன்றே கட்சி, ஒருவரே தலைவர்'' என்ற சுலோகத்தினை அதிகம் பரப்புரை செய்தனர்.

தலைமைத்துவ வழிபாடு: பாசிசம் தலைவர்களை அதி உன்னத மனிதர்களாக வலியுறுத்துவதிலிருந்து அது தலைமைத்துவ வழிபாட்டினை ஆதரிக்கின்றது. இத்தாலியில் முசோலினியும் ஜேர்மனியில் ஹிட்லரும் தத்தமது அரசுகளில் அதிக பிரபல்யம் பெற்றிருந்ததோடு மட்டுமல்லாமல் மக்களின் அதிக நம்பிக்கைக்குரியவர்களாகவும் சித்தரிக்கப்பட்டனர். இது விடயத்தில் ''ஹிட்லர்தான் ஜேர்மனி. ஜேர்மனிதான் ஹிட்லர்'' என்ற வாசகம் மிகவும் பிரபலமானது.

தீவிர தேசியவாதம்: இத்தாலிய பாசிசத்தின் மிக முக்கிய அடிப்படை தீவிர தேசியவாதமாகும். இதற்கமைய முதலாம் உலகப் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இத்தாலிய தேசியவாதத்தினை மீள் எழுச்சிபெறச் செய்வதில் பாசிசம் கூடிய கவனம் செலுத்தியது. ஒருவருடைய சொந்தத் தேசம் மற்றைய எல்லாவற்றையும் விட மேன்மைமிக்கது என வாதிட்ட பாசிஸ்டுகள், அரசின் புகழ்ச்சியினை மேலெழச் செய்வதிலும் அதன் உயர் தன்மையினை நிலைநிறுத்துவதிலும் அதிக சிரத்தை எடுத்தனர்.

வர்க்க / இன மேலாதிக்கம்: வர்க்க / இன மேலாதிக்கம் பாசிசத்தின் மிக முக்கிய அடிப்படையாகும். ஹிட்லர் ஆரம்பம் முதலே யூத எதிர்ப்புவாதத்தினை பரப்புரை செய்ததுடன் ஜேர்மனிய ஆரிய இனத்தினை மேன்மைப்படுத்தும் கருத்துக்களை அதிகம் வெளியிட்டார். ஹிட்லரினைப் போன்று முசோலினி இன மேலாதிக்கத்தில் கூடிய அழுத்தம் தரவில்லையாயினும் ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கத்தினை அவர் வலியுறுத்தியதுடன் ஆதிக்கமுள்ள தேசமொன்றின் மூலமே உலகில் உள்ள பலவீனமான தேசங்களை ஆக்கிரமிக்க முடியும் எனவும் அவர் வாதிட்டார்.

இராணுவ மேலாதிக்கம்: பாசிசம் வன்முறையில் நாட்டம் கொண்டிருந்ததனால் இராணுவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. வலுவான இராணுவத்தின் மூலமே உறுதியான தேசத்தினைக் கட்டியெழுப்ப முடியும் என்ற சிந்தனைக்கமைய பெருமளவிலான அரசாங்க நிதியினை பாசிஸ்டுகள் இராணுவத்திற்கு செலவிட்டனர். இராணுவ சேவைக்கும் இராணுவ வீரர்களுக்கும் பாசிசத்தில் அதி உன்னத இடம் வழங்கப்பட்டது.

## 5.4 பெண்ணியம் (Feminism)

பெண்ணியம் என்ற அரசியல் எண்ணக்கரு 19 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. எனினும் 1960 களுக்குப் பின்னரே பெண்ணியம் பிரபல்யம் அடைந்தது. பெண்ணியம் பெண்ணியல்வாத இயக்கங்களுடன் தொடர்புடைய ஒரு கருத்தியலாகும். இது பெண்களின் சமூக ஈடுபாட்டினை அதிகரிப்பதற்கு முயற்சிக்கிறது. பெண்களுக்கு எதிரான சகல விதமான பாரபட்சங்களும் அடக்குமுறைகளும் ஒழிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது.

பெண்ணியம் பெண்களுக்கான வாக்குரிமை, கல்விக்கான உரிமை, பொதுவாழ்வில் பங்குபற்றுவதற்கான உரிமை, சொத்துரிமை போன்றவற்றினை முதன்மைப்படுத்துகிறது. பெண்ணியம் கருக்கலைப்பினை சட்டபூர்வமாக்குதல், பெண்களின் பாலுறுப்பு சிதைக்கப்படுதல் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் முயற்சிக்கிறது. பெண்ணியக் கருத்தியலை வலியுறுத்தும் அறிஞர்கள் புரட்சிகர மற்றும் சீர்திருத்த வழிமுறைகளின் ஊடாக பெண்களை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர்.

பெண்ணிய சிந்தனைகளை ஒரு கருத்தியலாக வளர்ச்சியடையச் செய்தவர் களுள் மேரி வோல்ஸ்டன் கிராப்ட், கேற் மில்லட், பெற்றி பிரிடன் ஆகியோரின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்பத்தில் பெண்களுக்கு வாக்குரிமையினைப் பெற்றுக்கொடுப்பதற்காக குரல்கொடுத்த பெண்ணிலை வாதிகள், பின்னர் பெண்களின் சமூக, அரசியல் ஈடுபாட்டினை அதிகரிப்

பதற்கான முயற்சியில் கவனம் செலுத்தினர். மேலும் வீட்டு வன்முறைகள், பாலியல் துன்புறுத்தல்கள், வேலைத்தள உரிமைகள், தாய்மார் விடுமுறைகள், பால்நிலை சமத்துவம் போன்றன தொடர்பிலும் பெண்ணிலைவாதிகள் தெளிவான வேலைத் திட்டங்களைக் கொண்டு செயற்படுகின்றனர். இவ்விதம் பெண்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடுதலைக்காக குரல் கொடுக்கும் பெண்ணியவாதக் கருத்தியல் நீண்ட காலப் போராட்டங்களின் அடிப்படையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இவ்வரலாற்று வளர்ச்சியினை பின்வரும் தலைப்புக்களின் கீழ் நோக்கலாம்.

**1. முதல் அலைப் பெண்ணியம்**

1800 களின் பிற்பகுதியிலும் 1900 களின் முற்பகுதியிலும் செல்வாக்குச் செலுத்திய பெண்ணிலைவாதக் கருத்துக்கள் முதல் அலைப் பெண்ணியம் என அழைக்கப்படுகின்றது. முதல் அலைப் பெண்ணியம் பெண்கள் வாக்குரிமை மற்றும் பெண்களுக்கான சொத்துரிமை விடயத்தில் கவனம் செலுத்தியது. இதற்கமைய 1917 - 1920 வரையான காலப்பகுதியில் வட அமெரிக்காவில் பெண்கள் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும் சொத்துக்களை வைத்திருப்பதற்கும் வாரிசுச் சொத்துக்களைப் பெறுவதற்கும் வாக்களிப்பதற்கும் உரிமை பெற்றனர். எனினும் கனடா போன்ற நாடுகளில் 1960 கள் வரை பழங்குடி இன பெண்கள் வாக்களிப்பதற்கான உரிமையினைப் பெறவில்லை.

**2. இரண்டாம் அலைப் பெண்ணியம்**

1960 களிலிருந்து 1990 கள் வரை செல்வாக்குச் செலுத்திய பெண்ணியல்வாதக் கருத்துக்கள் இரண்டாம் அலைப் பெண்ணியம் என அழைக்கப்படுகின்றது. இரண்டாம் அலைப் பெண்ணியம் சமூக வாழ்விலும் வேலைத் தளங்களிலும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் பாரபட்சங்கள் குறித்து கவனம் செலுத்தியது. இக்காலத்தில் கற்பழிப்பு, வீட்டு வன்முறை, ஊடகங்களில் பெண்கள் தவறாக சித்தரிக்கப்படல், இனப் பெருக்கத் தெரிவு போன்ற விடயங்களை பெண்ணிலைவாதிகள் முன்னிலைப்படுத்திச் செயற்பட்டனர். இதற்கமைய கனடா போன்ற நாடுகளில் பெண்களின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இதன் பின்னர் உலகின் பல நாடுகளிலும் பெண்களின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

**3. மூன்றாம் அலைப் பெண்ணியம்**

1990 களில் தோற்றம் பெற்ற பெண்ணிலைவாதக் கருத்துக்கள் மூன்றாம் அலைப் பெண்ணியம் என அழைக்கப்படுகின்றது. மூன்றாம் அலை பெண்ணியம் பால்நிலை சமத்துவம் குறித்து அதிக அழுத்தம் கொடுக்கிறது.

வயது, இனம், வகுப்பு அல்லது வர்க்கம் என்பவற்றின் அடிப்படையில் பெண்கள் ஓரங்கட்டப்படுவதை மூன்றாம் அலைப் பெண்ணியம் எதிர்க்கிறது. மூன்றாம் அலைப் பெண்ணியத்தை வெள்ளையின மத்தியதர வர்க்கப் பெண்கள் தீவிரமாக முன்னெடுத்தனர்.

மேற்குறிப்பிட்டவாறு மூன்று அலைகளாக பெண்ணிய அரசியல் கருத்தியல் வளர்ச்சியுற்று வந்துள்ளது. இம் மூன்று அலைப் பெண்ணியத்திலும் தாராண்மைவாத, சோசலிச மற்றும் தீவிரத் தன்மை பொருந்திய கருத்துக்களின் தாக்கம் இடம்பெற்றிருந்தது. இதற்கேற்ப பெண்ணியவாதம் தாராண்மைவாத பெண்ணியம், சோசலிச பெண்ணியம், தீவிரப் பெண்ணியம் எனவும் பிரித்து நோக்கப்படுகிறது. தற்காலத்தில் பெண்ணியவாதத்தில் பின் நவீனப் பெண்ணியம், கறுப்பினப் பெண்ணியம், ஓரினப் பெண்ணியம் ஆகிய புதிய மரபுகள் தோற்றம் பெற்றுள்ளன.

**பிரதான சொற்கள்**

தாராண்மைவாதம், சோசலிசம், மார்க்சியம், பாசிசம், நாசிசம், பெண்ணியம்

**பயிற்சி வினாக்கள்**

"தாராண்மைவாதம் ஒரு நிலையான கருத்தியல் அன்று. அது மாற்றமுறும் சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப வளர்ச்சியுற்று வருகின்றது." ஆராய்க.

பாசிசவாத அரசியல் கருத்தியலுடன் தொடர்புபடுத்தி, பின்வரும் தலைப்புக்களைப் பரிசீலிக்குக.
(அ) தோற்றத்திற்கான காரணங்கள்
(ஆ) அடிப்படைத் தத்துவங்கள்
(இ) அரசு பற்றிய நோக்கு

சோசலிச அரசியல் கருத்தியலின் பிரதான பண்புகளைக் குறிப்பிட்டு, சோசலிச மரபில் உருவாகியுள்ள நவீன கருத்தியல் மாதிரிகளை இனங்காண்க.

பாசிசவாத அரசியல் கருத்தியலின் அடிப்படைத் தத்துவங்கள் குறித்து நுணுக்கக் கட்டுரையொன்று வரைக.

## உசாத்துணைகள்

Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

Heywood, A. (2012). ***Political ideologies: An introduction***. New York: Palgrave Macmillan.

Kapur, A.C. (1996). ***Principles of political science***. New Delhi: Chand & Company.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

# அத்தியாயம் - 06

# அரசியல் நிறுவனங்கள்

**உள்ளடக்கங்கள்**


| | | |
|---|---|---|
| 6.1 | சட்டவாக்கத்துறை | 85 |
| 6.2 | நிறைவேற்றுத்துறை | 90 |
| 6.3 | நீதித்துறை | 93 |


## அத்தியாய சுருக்கம்

*அரசாங்கம் என்பது பல்வேறு நிறுவனங்களின் கூட்டுமொத்தமாகும். அவற்றுள் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகியன பிரதான நிறுவனங்களாகும். இந்நிறுவனங்களை அரசாங்கத்தின் உறுப்புக்கள் அல்லது கிளைகள் எனவும் அழைப்பர். இங்கு அரசுக்குத் தேவையான சட்டங்களை இயற்றுவது சட்டவாக்கத்துறையாகும். நவீன அரசுகளில் சட்டவாக்கத்துறை ஒருமன்ற முறையிலானதாகவோ இருமன்ற முறையிலானதாகவே அமையப் பெற்றுள்ளது. சட்டவாக்கம், நிறைவேற்றுத்துறையினைக் கட்டுப்படுத்துதல், நிதியினைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை சட்டவாக்கத்துறை நிறைவேற்றுகிறது. ஒரு சட்டம் ஆரம்பத்தில் மசோதாவாக தொடக்கப்பட்டு பல படிமுறைகளை நிறைவு செய்த பின்னர் அதிகாரமளிக்கப்பட்டவர்களின் ஒப்புதலுடன் சட்டமாக ஆக்கப்படுகிறது. அரச சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் அரச நிர்வாகத்தினை மேற்கொள்கின்ற துறை நிறைவேற்றுத் துறையாகும். நிறைவேற்றுத்துறை அதன் தன்மையினைப் பொறுத்து பலவாறு வகையீடு செய்யப்படுகின்றது. நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு பொருள்கோடல் செய்யும் துறை நீதித்துறையாகும்.*

## அத்தியாயத்தின் நோக்கம்

*பிரதான அரசியல் நிறுவனங்கள் தொடர்பான மாணவர்களின் அடிப்படை அறிவினை விருத்தி செய்வதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.*

## கற்றல் பெறுபேறுகள்

*இவ்வத்தியாயத்தினை திறம்படக் கற்பதன் மூலம் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய அரசாங்கத்தின் முத்துறைகள் குறித்த தெளிவான விளக்கங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வர்.*

## 6.1 சட்டவாக்கத்துறை

அரசாங்க நிறுவனங்களுள் மிகவும் பிரதானமானது சட்டவாக்கத்துறையாகும். பெரும்பாலான நாடுகளில் சட்டவாக்கத்துறை பாராளுமன்றம் என்ற பெயரில் அறியப்படுகிறது. சட்டவாக்க நிறுவனம் நாட்டிற்குத் தேவையான சட்டங்களை உருவாக்கும் பொறுப்பினைக் கொண்டதாகும்.

நவீன அரசாங்கங்களின் சீரான தொழிற்பாட்டிற்கு சட்டங்கள் அவசியமான வையாகும். இச்சட்டங்களை உருவாக்கும் பொறுப்பு சட்டவாக்கத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நவீன அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் சட்டவாக்க அமைப்பினைக் கொண்டுள்ளபோதிலும் அவற்றின் அமைப்பு, வடிவம், இயல்பு என்பவற்றில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சட்டவாக்கத்துறையின் அமைப்புத் தொடர்பில் பொதுவான கருத்தொன்று காணப்படுவதில்லை. சில அரசுகளில் சட்டவாக்கத்துறை ஒருமன்ற முறையிலானதாக உள்ள அதேவேளை, வேறு சில நாடுகளில் இருமன்ற முறையிலானதாக உள்ளது. இவ்விரு சட்டவாக்க அமைப்பு வடிவங்களின் சாதக, பாதகங்கள் தொடர்பிலும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

சட்டவாக்கத்துறையானது ஒரு சபையினை மட்டும் கொண்டிருக்குமாயின் அதனை ஒருமன்ற முறை என அழைப்பர். இலங்கை போன்ற ஒற்றையாட்சி அரசுகளில் சட்டவாக்கத்துறையானது ஒருமன்ற முறையிலானதாக அமைந்துள்ளது. எனினும் பிரித்தானியா போன்ற ஒற்றையாட்சி நாடுகளில் சட்டவாக்க அமைப்பு இருமன்ற முறையிலானதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

முதலாம் மன்றமானது கீழ் சபை அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபை எனவும் அழைக்கப்படுகிறது. முதலாம் மன்றத்தின் பெருமளவான உறுப்பினர்கள் மக்களின் நேரடிப் பிரதிநிதிகளாக உள்ளனர். எனினும் முதலாம் மன்ற உறுப்பினர்களின் தகைமைகள், உறுப்பினர் தொகை, தெரிவு முறை என்பன நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. முதலாம் மன்றத்தின் பதவிக்காலம் தொடர்பிலும் ஒத்த கருத்து நிலவுவதில்லை.

ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் முதலாம் மன்றம் இரண்டு வருட பதவிக் காலத்தினைக் கொண்டிருக்க பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளில் முதலாம் மன்றம் ஐந்து வருட பதவிக் காலத்தினைக் கொண்டுள்ளது.

ஒருமன்ற முறைக்கு ஆதரவாகக் கருத்துக்கள் தெரிவிப்போர் பின்வரும் வாதங்களை முன்வைக்கின்றனர்:

இருமன்றங்களின் மூலம் மட்டுமன்றி ஒருமன்றத்தின் மூலமும் பொதுஜன அபிப்பிராயத்தினை பிரதிநிதித்துவப்படுத்த முடியும்.

இருமன்ற முறையில் இரண்டாம் மன்றம் அதிகாரம் குறைந்த மன்றமாக உள்ளது. அத்தகையதொரு மன்றம் தேவையற்றது.

சட்டமியற்றுவதற்கு பின்பற்றப்படும் நீண்ட நடைமுறைகளினால் முதலாம் மன்றம் அவசர அவசரமாக சட்டமியற்றுவதில்லை.

இரண்டாம் மன்றம் அதிகாரம் குறைந்த மன்றமாக இருப்பதால் முதல் மன்றத்தின் சர்வாதிகாரத்தினை தடுக்க முடிவதில்லை.

இரண்டாம் மன்றம் மசோதாக்களை தாமதப்படுத்துவதனால் அது கால தாமதத்திற்கு வழிவகுக்கிறது.

இரண்டாம் மன்றத்தினை ஒழுங்கமைப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதனால் அத்தகையதொரு மன்றம் தேவையற்றது.

இன்று சமஷ்டி நாடுகளில் கூட இரண்டாம் மன்றம் தேவையற்றது என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.

இரண்டாம் மன்றத்தின் அதிகாரத்தினை வரையறுப்பதிலும் சிக்கல்கள் நிலவுவதால் அத்தகைய மன்றம் தேவையற்றது.

இரண்டாம் மன்றத்தினைக் கொண்டிருப்பது அரசாங்கத்தின் செலவீனத்தினை அதிகரிக்கச் செய்கிறது.

ஒரு மன்றத்தின் மூலமும் சிறுபான்மை ஜனக்குழுக்களுக்கான பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த முடியும்.

சட்டவாக்கத்துறையானது இரண்டு சபைகளைக் கொண்டிருக்குமாயின் அதனை இருமன்ற முறை என அழைப்பர். ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் சட்ட வாக்க அமைப்பு இரண்டு சபைகளைக் கொண்டுள்ளது. பொதுவாக சமஷ்டி நாடுகளின் சட்டவாக்கத்துறையானது இரண்டு சபைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற நடைமுறை காணப்படுகிறது.

இரண்டாம் மன்றத்தினை மேல் சபை எனவும் அழைப்பர். பல நாடுகளில் இரண்டாம் மன்றம் செனட் மன்றம் என்ற பெயரில் அறியப்படுகிறது. சில

நாடுகளில் இரண்டாம் மன்ற உறுப்பினர்கள் பரம்பரையாக நியமிக்கப் படுகின்றனர் (பிரித்தானியா). இன்னும் சில நாடுகளில் ஆயுட்காலம் முழுவதற்குமான உறுப்பினர்களும் உள்ளனர் (கனடா), சில நாடுகளில் இரண்டாம் மன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர் (ஐக்கிய அமெரிக்கா). இரண்டாம் மன்றத்தின் பதவிக்காலம், அதிகாரம் தொடர்பிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

இருமன்ற முறைக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்போர் பின்வரும் வாதங்களை முன்வைக்கின்றனர்:

முதலாம் மன்றத்தின் சர்வாதிகாரத்தினைத் தடுப்பதற்கு இரண்டாம் மன்றம் உதவுகிறது.

முதல் மன்றம் அவசர அவசரமாக இயற்றும் மசோதாக்களை தாமதப்படுத்தி, சிறந்த சட்டங்கள் உருவாக வழிவகுக்கிறது.

சிறுபான்மை ஜனக்குழுக்களுக்கு பிரதிநிதித்துவத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு உதவுகிறது.

சமஷ்டி நாடுகளில் மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவத்தினை உறுதி செய்வதற்கு இரண்டாம் மன்றம் உதவுகிறது.

ஒருமன்ற முறையினை விட இருமன்ற முறை பொதுஜன அபிப்பிரா யத்தினை நன்கு பிரதிபலிக்கிறது.

இரண்டாம் மன்றங்கள் நிலையான மன்றங்களாக இருப்பதனால் அரசியல் உறுதிப்பாட்டிற்கு வழிவகுக்கிறது.

அரசியல் பாரம்பரியங்களை, மரபுகளை பாதுகாப்பதற்கு இருமன்ற முறை உதவுகிறது.

தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு இருமன்ற முறை உதவுகிறது.

பெரும்பான்மைக் கட்சியின் சர்வாதிகாரத்தினை தடுப்பதற்கு இருமன்ற முறை உதவுகிறது.

இரண்டாம் மன்றம் சட்டவாக்கம் தொடர்பில் கேள்விகளைத் தொடுப்பதுடன் தமது அனுபவங்களையும் பகிர்ந்துகொள்கிறது.

சட்டவாக்கத்துறை பல்வேறு பணிகளை ஆற்றுகிறது. அப்பணிகளுள் முக்கியமான சில பணிகளை பின்வருமாறு நோக்கலாம்:

சட்டவாக்கம்: சட்டமியற்றுதல் சட்டவாக்கத்துறையின் மிக முக்கிய பணியாகும். சாதாரண சட்டங்கள், நிதிச் சட்டங்கள் என இரு வகையான சட்டங்களை சட்டவாக்கத்துறை இயற்றுகிறது.

நிதியினைக் கட்டுப்படுத்துதல்: அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தினை கட்டுப்படுத்துவதன் மூலம் சட்டவாக்கத்துறை நிதியினைக் கட்டுப்படுத்துகிறது.

நிறைவேற்றுத்துறையைக் கட்டுப்படுத்துதல்: நிறைவேற்றுத் துறையிடம் கேள்வி கேட்டல், நிறைவேற்றுத் துறைக்கு எதிராக குற்றப் பிரேரணையினை, நம்பிக்கையில்லாப் பிரேரணையினைக் கொண்டு வருதல் போன்றவற்றின் மூலம் சட்டவாக்கத்துறை நிறைவேற்றுத் துறையினைக் கட்டுப்படுத்துகிறது.

நீதித்துறைப் பணிகள்: சில நாடுகளில் சட்டவாக்கத்துறை நீதித்துறையுடன் தொடர்புடைய பணிகளையும் ஆற்றுகிறது. இதன் படி பிரித்தானியாவின் பிரபுக்கள் சபை, கனடாவின் மேல் சபை என்பன சில நீதிமன்ற பணிகளை ஆற்றுகின்றன.

தெரிவுப் பணிகள்: சில நாடுகளில் ஜனாதிபதி, உப ஜனாதிபதி, நீதிபதிகளை சட்டவாக்கத்துறை தெரிவு செய்கிறது. எடுத்துக்காட்டாக சுவிற்சர்லாந்தில் சமஷ்டிப் பேரவை சட்டவாக்க சபையினாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின் றமையினை குறிப்பிடலாம்.

அரசியலமைப்பினைத் திருத்துதல்: ஜனநாயக நாடுகளில் அரசியலமைப் பினைத் திருத்துவதற்கான அதிகாரம் சட்டவாக்கத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சில நாடுகளில் சட்டவாக்கத்துறையின் சாதாரண பெரும்பான்மையினைக் கொண்டு அரசியலமைப்பு திருத்தப்படுகிறது. இன்னும் சில நாடுகளில் சட்டவாக்கத்துறையின் 2/3 பெரும்பான்மையின் மூலம் அரசியலமைப்பு திருத்தப்படுகிறது.

பொதுஜன அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துதல்: சட்டமன்றங்கள் மக்கள் கருத்துக்களை பிரதிபலிக்கின்றன. மக்கள் நலன்சார்ந்த விடயங்களை விவாதிப்பதன் மூலம் சிறந்த சட்டங்கள் உருவாகுவதற்கு சட்டவாக்கத்துறை உதவுகிறது.

நீதிபதிகளை பதவி நீக்கம் செய்தல்: நீதிபதிகள் மீது குற்றப் பிரேரணையினைக் கொண்டு வந்து, அவர்களை பதவியிலிருந்து நீக்கும் அதிகாரமும் சட்டவாக்கத்துறைக்கு உள்ளது.

அரசாங்கக் கொள்கைகளே சட்டவாக்கத்திற்கு அடிப்படையாக உள்ளன. சமூகத்தில் உள்ள பல்வேறு விடயங்களைக் கையாள்வதற்கு சட்டங்கள் தேவைப்படுமிடத்து அவற்றினை ஒரு சட்டமாக உருவாக்குவதற்கான முயற்சிகளில் அரசாங்கங்கள் ஈடுபடுகின்றன. இவ்விதம் சட்டவாக்கத்துறையில் ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கு பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சில பொதுவான சட்டவாக்க நடைமுறைகளை பின்வருமாறு நோக்கலாம்:

மசோதா நிலை: எல்லா சட்டவாக்கங்களும் ஆரம்பத்தில் ஒரு மசோதாவாகவே அறிமுகமாகின்றன. இதன்படி சட்டவாக்கத்துறையில் பொதுமக்கள் மசோதா, தனிநபர் மசோதா, தனிப்பட்ட மசோதா என மூன்று வகையான மசோதாக்கள் கொண்டுவரப்படுகின்றன.

பொதுமக்கள் மசோதா பாராளுமன்ற கவுன்சிலரினால் வரையப்பட்டு, அரசாங்க அமைச்சர்களினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. தனியாள் மசோதாக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களால் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

குழுநிலைச் செயற்பாடு: குறித்த மசோதாக்கள் பொருத்தமான பாராளுமன்றக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு பரீட்சிக்கப்படுகின்றன. பின்னர் பாராளுமன்ற விவாதத்திற்கு விடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

விவாதநிலை: குழுநிலை விவாதத்திற்கு உட்பட்ட மசோதாக்கள் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு சபையில் திறந்த விவாதத்திற்கு விடப்படும். விவாதத்தின் முடிவில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை செய்து மசோதா இறுதி வாக்கெடுப்புக்கு விடப்படும்.

அத்தாட்சிப்படுத்துதல்: பாராளுமன்ற வாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்படும் மசோதாக்கள், மசோதாக்களுக்கு ஒப்பமிட அதிகாரமளிக்கப்பட்ட நபர்களிடம் அனுப்பிவைக்கப்படும்.

சில நாடுகளில் ஜனாதிபதியும் இன்னும் சில நாடுகளில் அரசர்களும் வேறு சில நாடுகளில் சபாநாயகரும் மசோதாக்களுக்கு இறுதி ஒப்பமிடும் அதிகாரத்தினைப் பெற்றுள்ளனர்.

மசோதா சட்டமாகுதல்: அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் இறுதி ஒப்பமிடப்பட்ட மசோதாவொன்று சட்டமாக அறிவிக்கப்படும்.

## 6.2 நிறைவேற்றுத்துறை

நிறைவேற்றுத்துறை இரண்டாவது முக்கிய அரசியல் நிறுவனமாகும். சட்டவாக்கத்துறை இயற்றுகின்ற சட்டத்தினை அமுலாக்கும் பொறுப்பினை நிறைவேற்றுத்துறை பெற்றுள்ளது. நிறைவேற்றுத்துறை அரசியல், சிவில் நிறைவேற்றுத்துறை என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. அரசியல் நிறைவேற்றுத்துறை அரசாங்கத் தலைவர்களை உள்ளடக்கியதாகும்.

சிவில் (பொதுத்துறை) நிறைவேற்றுத்துறை சிவில் நிர்வாகிகளை உள்ளடக்கிய துறையினைக் குறிக்கும். இவ்விரு நிறைவேற்று அமைப்புக்களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட போதிலும் இவையிரண்டுக்குமிடையே பரஸ்பர தொடர்புகள் காணப்படுகின்றன. அரசாங்கத்தின் சீரான தொழிற்பாட்டிற்கு இவ்விரு நிறைவேற்றுப் பகுதிகளினதும் ஒருங்கிணைந்த செயற்பாடு இன்றியமை யாததாகும்.

நிறைவேற்றுத்துறை பல்வேறு பணிகளை ஆற்றுகிறது. அப்பணிகளுள் முக்கியமான சில பணிகளை பின்வருமாறு நோக்கலாம்:

நிறைவேற்றுப் பணிகள்: எல்லா நாடுகளிலும் நிருவாகத்துறையினைக் கொண்டு நடத்துவது நிறைவேற்றுத்துறையாகும். நிறைவேற்றுத்துறை நியமனங்களை வழங்குதல், பதவி நீக்குதல், பதவி உயர்வு வழங்குதல், அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் பரிபாலித்தல் போன்ற பணிகள் நிறைவேற்றுத்துறையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டவாக்கப் பணிகள்: சட்டவாக்கத்திற்கான மசோதாக்களை தயாரித்தல், மசோதாக்களுக்கு இறுதி ஒப்பமிடல், அதனை சட்டவாக்க சபையில் சமர்ப்பித்தல், சட்டவாக்க சபையினை கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல் போன்றன நிறைவேற்றுத்துறையின் பணிகளாகும்.

பாதுகாப்புப் பணிகள்: அநேகமாக எல்லா நாடுகளிலும் முப்படைகளுக்கு அரச தலைவர்களே தலைமை தாங்குகின்றனர். இவை தவிர்ந்த படைத்துறை உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமித்தல், நீக்குதல், போர்ப் பிரகடனம் செய்தல், சமாதானம் செய்தல் போன்ற பணிகளையும் நிறைவேற்றுத்துறை மேற்கொள்கின்றன.

நீதித்துறைப் பணிகள்: உயர் நீதிபதிகளை நியமித்தல், அரசியல் யாப்பு வழிமுறைகளுக்கு ஏற்ப அவர்களைப் பதவி நீக்கம் செய்தல், குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல், தண்டனையைக் குறைத்தல்,

அரச வழக்கறிஞர்களை நியமித்தல் உள்ளிட்ட நீதித்துறைசார் பணிகளை நிறைவேற்றுத்துறை ஆற்றுகிறது.

பொது நிதியைக் கையாளுதல்: சட்டவாக்கத்துறை பொது நிதியினைக் கட்டுப்படுத்துகின்ற போதிலும் தேசிய வரவு செலவு அறிக்கையினை தயாரித்து கையாள்கின்ற பொறுப்பு நிறைவேற்றுத்துறையிடம் உள்ளது.

வெளிவிவகாரப் பணிகள்: வெளிநாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுதல், இராஜதந்திர தூதுவர்களை நியமித்தல், வெளிநாட்டு இராஜதந்திர தூதுவர்களை ஏற்று - அங்கீகரித்தல், வெளிநாட்டு ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் போன்றன நிறைவேற்றுத்துறையின் பணிகளுள் அடங்குகின்றன.

கட்டளைகளைப் பிறப்பித்தல்: அரச ஆணைகளை, உத்தரவுகளைப் பிறப்பித்தலும் நிறைவேற்றுத்துறையின் பணிகளாகும்.

சடங்கு முறையான பணிகள்: சட்டமன்றத்தில் சடங்கு முறையான இருக்கைகளுக்கு தலைமை தாங்குதல், அரச விழாக்களுக்கு தலைமை தாங்குதல், கௌரவப் பட்டங்களை வழங்குதல், அரச இலட்சினையினை பேணிப்பாதுகாத்தல் உள்ளிட்ட பணிகளையும் நிறைவேற்றுத்துறை மேற்கொள்கிறது.

நவீன அரசுகளில் நிறைவேற்றுத்துறையானது பல்வேறு வடிவங்களில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அவ்வடிவங்களுள் பின்வருவன குறிப்பிடத் தக்கனவாகும்.

பெயரளவு - உண்மை நிறைவேற்றுத்துறை: அரச தலைவர் உண்மையான நிறைவேற்று அதிகாரத்தை கொண்டிராதிருக்கும் போது அம்முறையினை பெயரளவு நிறைவேற்று முறை என அழைப்பர். பிரித்தானியா, இந்தியா, நோர்வே போன்ற நாடுகளில் அரச தலைவர்கள் பெயரளவான அதிகாரத்தினையே கொண்டுள்ளனர். உண்மையான நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்டுள்ள துறை உண்மை நிறைவேற்றுத் துறையாகும். பிரித்தானியாவிலும் இந்தியாவிலும் கபினட் உண்மை நிறைவேற்றுப் பகுதியாகும். ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதி உண்மையான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

ஒருமை பன்மை நிறைவேற்றுத்துறை: நிறைவேற்று அதிகாரங்கள் ஒரு அரச தலைவரிடம் வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று முறை ஒருமை

நிறைவேற்று முறையாகும். ஐக்கிய அமெரிக்காவில் நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று அதிகாரம் ஒரு தனிநபரிடம் அன்றி சம அந்தஸ்துள்ள நபர்களைக் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் முறையினை பன்மை நிறைவேற்றுத்துறை என அழைப்பர். சுவிற்சர்லாந்தில் ஏழு பேர் கொண்ட சமஷ்டிக் கவுன்சிலிடமே நிறைவேற்று அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற - ஜனாதிபதித்துவ நிறைவேற்றுத்துறை: நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்றத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிறைவேற்று முறையினை பாராளுமன்ற முறை என அழைப்பர். பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளில் பாராளுமன்ற முறை நடைமுறையிலுள்ளது. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி என்ற ஒரு தனிநபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிறைவேற்று முறையினை ஜனாதிபதி முறை என அழைப்பர். ஐக்கிய அமெரிக்கா, இலங்கை போன்ற நாடுகளில் ஜனாதிபதித்துவ முறை நடைமுறையிலுள்ளது.

பரம்பரை - தெரிவு முறையிலான நிறைவேற்றுத்துறை: பரம்பரை பரம்பரையாக நிறைவேற்று அதிகாரம் கைமாற்றப்படும் முறையினை பரம்பரை நிறைவேற்றுத் துறை என அழைப்பர். முடியாட்சி முறையுள்ள நாடுகளில் முடியின் அதிகாரம் பரம்பரை பரம்பரையாகவே கைமாற்றப்படுகிறது. பிரித்தானியா, டென்மார்க், நோர்வே போன்ற நாடுகளில் இவ்வகை நிறைவேற்று முறை உள்ளது. நிறைவேற்றுத்துறைத் தலைவர்கள் பரம்பரையாக அன்றி மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற ஒரு நிறைவேற்று முறையினை தெரிவு முறையிலான நிறைவேற்றுத்துறை என அழைப்பர். ஐக்கிய அமெரிக்கா, இலங்கை போன்ற நாடுகளில் நிறைவேற்றுத் தலைமைத்துவம் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றது.

சர்வாதிகார நிறைவேற்றுத்துறை: அரச அதிகாரம் அனைத்தும் ஒரு சர்வாதிகாரத் தலைவரிடம் ஒன்று குவிக்கப்பட்டிருக்கும் முறையினை சர்வாதிகார நிறைவேற்றுத்துறை என அழைப்பர். இத்தாலியில் முசோலினியும் ஜேர்மனியில் ஹிட்லரும் தலைமை தாங்கிய நிறைவேற்றுத்துறை சர்வாதிகார நிறைவேற்றுத்துறையாகும்.

அரசாங்க அமைப்புக்களுள் முக்கியமான ஒன்றாக விளங்கும் நிறைவேற்றுத்துறையினைத் தெரிவு செய்வதற்கு பல்வேறு முறைகள்

பயன்படுத்தப்படுகின்றன. அம்முறைகளுள் முக்கியமான சிலவற்றை பின்வருமாறு நோக்கலாம்:

பரம்பரையாகத் தெரிவு செய்யப்படுதல்: பிரித்தானியா, யப்பான், சவூதி அரேபியா, டென்மார்க் போன்ற நாடுகளில் முடிக்குரியவர்கள் பரம்பரையாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுதல்: பிரான்ஸ், இலங்கை, மெக்சிக்கோ, பிரேசில் போன்ற நாடுகளில் நிறைவேற்றுத் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மக்களால் மறைமுகமாகத் தெரிவு செய்யப்படுதல்: ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் மக்களால் தெரிவு செய்யப்படும் தேர்வாளர் கழகமொன்றின் மூலம் நிறைவேற்றுத் தலைவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

சட்டவாக்கத்துறையினால் தெரிவு செய்யப்படுதல்: சுவிற்சர்லாந்து நிறைவேற்றுத்துறையான சமஷ்டிக் கவுன்சில் அந் நாட்டின் சட்டவாக்க அமைப்பான பெடரல் அசெம்பிளியினால் தெரிவு செய்யப்படுகிறது.

நியமன முறை: பிரித்தானியாவில் பிரதமர் முடியினாலும் இந்தியாவிலும் இலங்கையிலும் பிரதமர் ஜனாதிபதியினாலும் நியமிக்கப்படுகின்றனர்.

## 6.3 நீதித்துறை

அரசியலமைப்புக்கள் தாமாக உருவாகின்ற போதிலும் அவை சுயமாக அமுலாகுவதில்லை. அதன் அமுலாக்கத்துடனும் நடைமுறையுடனும் பல்வேறு நிறுவனங்கள் தொடர்புபடுகின்றன. அந்நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றே நீதித்துறையாகும். ஜனநாயக அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களை இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தினைப் பெற்றிருப் பதிலிருந்து நீதித்துறை அரசியலில் தனித்துவமான இடத்தினைப் பிடித்துள்ளது.

நீதித்துறை அதிகாரம் அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள போதிலும் அரசியலமைப்புக்கு பொருள்கோடல் செய்தல் உள்ளிட்ட தத்துவங்களை நடைமுறையில் பிரயோகிக்கக் கூடிய ஆற்றலை நீதிமன்றங்கள் பெற்றிருக்கின்றன. இது விடயத்தில் ஐக்கிய அமெரிக்காவின் தலைமை நீதிபதி ஹூகஸ் என்பவரின் பின்வரும் கூற்று குறிப்பிடத்தக்கது: ''நாம் ஒரு அரசியலமைப்புக்கு உட்பட்டே வாழ்கின்றோம். ஆனால் நமது அரசியலமைப்பு

என்பது நீதிபதிகள் அது பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதாகவே உள்ளது" என்கிறார்.

நீதித்துறை பல்வேறு பணிகளை ஆற்றுகிறது. அப்பணிகளுள் முக்கியமான சில பணிகளை பின்வருமாறு நோக்கலாம்:

சட்டங்களுக்கு விளக்கமளித்தல்: நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு விளக்கமளித்தலும் நீதிமன்ற வியாக்கியானங்கள் மூலம் சட்ட விளக்கங்களை மேம்படுத்தலும் நீதித்துறையின் பணியாகும்.

சிவில் உரிமைகளைப் பாதுகாத்தல்: சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்களின் மூலம் அரசு மக்களுக்கு பல உரிமைகளை வழங்குகின்றன. இவ்வுரிமைகள் நீதித்துறையின் மூலம் பாதுகாக்கப்படுகின்றன.

நீதித் தீர்ப்பினை வழங்குதல்: நீதிமன்றங்களிடம் கொண்டுவரப்படுகின்ற வழக்குகளுக்கு நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி நீதித் தீர்ப்பினை வழங்குவது நீதித்துறையின் பணியாகும்.

அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன்: அரசியலமைப்பு ரீதியாக பிரஜைகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள உரிமைகள் அடிப்படை உரிமைகளாகும். இவ்வடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரஜைகள் தமது அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது உச்ச நீதிமன்றத்திற்கு முறையீடு செய்வதன் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அரசியலமைப்பின் பாதுகாவலன்: நீதித்துறை அரசியலமைப்பின் பாதுகாவலனாகும். அரசியலமைப்புக்கு விரோதமாக இயற்றப்படும் சட்டங்களை அல்லது நிறைவேற்றுக் கட்டளைகளை தடைசெய்வதற்கு நீதித்துறைகள் அதிகாரம் பெற்றுள்ளன. இவ் அதிகாரத்தினை நீதிப்புணராய்வு அதிகாரம் என அழைப்பர். ஐக்கிய அமெரிக்காவில் மார்பரி - மடிசன் வழக்கினூடாக அந்நாட்டின் உச்ச நீதிமன்றத்திற்கு நீதிப்புணராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆலோசனை வழங்குதல்: சட்டவாக்க மற்றும் நிறைவேற்றுக் கருமங்கள் தொடர்பில் மதியுரை வழங்குகின்ற பணிகளையும் நீதித்துறை ஆற்றுகிறது. இலங்கையில் தலைமை நீதிமன்றம் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குகின்ற அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

மத்திய - மாநில பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்: சமஷ்டி நாடுகளில் மத்திய - மாநில அரசுகளுக்கிடையில், மாநில அரசுகளுக்கு மத்தியில் எழுகின்ற பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் நடுத்தீர்ப்பாளர் அந்நாடுகளில் செயற்படும் உச்ச நீதிமன்றமாகும். இதனாலேதான் சமஷ்டி நாடுகளில் வலுவான நீதித்துறை இருக்க வேண்டும் என்ற விடயம் வலியுறுத் தப்படுகிறது.

ஏனைய பணிகள்: மனுக்களை விசாரணை செய்தல், சிறப்புரிமை மீறல் வழக்குகளை விசாரித்தல், வழக்குச் சட்டங்களை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகளையும் நீதித்துறை ஆற்றுகிறது.

ஜனநாயக அரசாங்க முறையின் வெற்றிக்கு நீதித்துறை சுதந்திரமாக செயற்படுவது இன்றியமையாததாகும். நீதித்துறை சுதந்திரத்தை இழக்கின்ற போது சட்டத்தினைப் பாதுகாக்க முடியாமற் போவதுடன் பிரஜைகளின் உரிமைகள் மீறப்படுவதற்கும் வழியேற்படும். இந்தவகையில் நீதித்துறையின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்கு நவீன அரசுகள் மேற்கொண்டுள்ள சில முக்கிய ஏற்பாடுகளை பின்வருமாறு நோக்கலாம்:

நீதிபதிகளின் நியமனம்: நவீன அரசுகளில் நீதிபதிகளை நியமிப்பதற்கு மூன்று வழிகள் பின்பற்றப்படுகின்றன. அவை: (1) மக்களால் தெரிவு செய்யப்படுதல், (2) சட்டவாக்கத்துறையினால் தெரிவு செய்யப்படுதல், (3) நிறைவேற்றுத் துறையினால் நியமிக்கப்படுதல் என்பனவாகும். எனினும் பெரும்பாலான நாடுகளில் உயர் நிலை நீதிபதிகள் அரச தலைவர் களினாலேயே நியமிக்கப்படுகின்றனர். லஸ்கி போன்ற அறிஞர்கள் உயர் நீதிபதிகள் அடங்கிய ஒரு குழுவின் பரிந்துரையின் பேரில் நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்.

நீதிபதிகளின் பதவிக்காலம்: நீதிபதிகள் நீண்ட பதவிக்காலத்தினைக் கொண்டிருப்பது நீதித்துறை சுதந்திரத்திற்கு அவசியமான முந் நிபந்தனையாகும். நீதிபதிகளின் பதவிக்காலம் குறைவாக இருக்கும் போது மோசமான விளைவுகள் ஏற்படும். சிலவேளை நீதிபதிகள் ஊழல்களில் ஈடுபடக் கூடும். இதனாலேதான் பெரும்பாலான நாடுகளில் நீதிபதிகளின் பதவிக்காலம் ஆண்டுக் கணக்கில் வரையறுக்கப்படாமல் மேலெல்லை வயதாக (ஓய்வுபெறும்) குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிபதிகளின் சேவைக்காலப் பாதுகாப்பு: நீதித்துறையின் சுதந்திரத்தினை உறுதிசெய்வதற்கு நீதிபதிகளின் சேவைக்காலம் பாதுகாக்கப்படுவது

இன்றியமையாததாகும். நீதிபதிகளை நியமிப்பவர்கள், விரும்பிய போது நீக்குவதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கக் கூடாது. நீதிபதிகள் குற்றமிழைக்கும் போது அரசியலமைப்பு வழிமுறைகளினூடாக குற்றப்பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டு, நீதிபதிகள் பதவி நீக்கப்பட வேண்டும்.

நீதிபதிகளின் சம்பளம்: நீதிபதிகளின் வாழ்க்கைத் தரத்தினை உறுதி செய்வதற்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்பட வேண்டும். கவர்ச்சிகரமான சம்பளம் இன்றி திறமையானவர்களை உள்ளீர்க்க முடியாது. குறைந்தளவு சம்பளம் பெறும் நீதிபதிகள் இலஞ்சம், ஊழல்களில் அகப்படும் நிலை ஏற்படும். எனவேதான் நீதித்துறையின் சுதந்திரத்தினை உறுதி செய்வதற்கு நீதிபதிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளமும் வேறு சலுகைகளும் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

நீதிபதிகளின் தகைமைகள்: நீதிபதிகள் சிறந்த தகைமைகளைக் கொண்டவர்களாக இருப்பது நீதித்துறையின் சுதந்திரத்திற்கான மற்றுமொரு முந்நிபந்தனையாகும். நீதிபதிகள் திறமையானவர்களாக இருக்கும்போதே அவர்கள் சிறந்த தீர்மானங்களை எடுப்பர்; சுதந்திரமாகச் செயற்படுவர். இதனாலேதான் பெரும்பாலான நாடுகளில் உயர் நீதிபதிகளுக்கான தகைமைகள் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

அரசியல் தலையீடுகளிலிருந்து நீதித்துறையினை பாதுகாத்தல்: நீதித்துறையின் செயற்பாடுகளில் சட்டவாக்கத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை என்பன தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்வது நீதித்துறையின் சுதந்திரத்தினைப் பாதிக்கக் கூடியதாகும். எனவேதான் அவ்விரு துறைகளிலிருந்து நீதித்துறை வேறாக்கப்படுவதுடன் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும் இடமளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.
இளைப்பாறிய பின்னர் கருமமாற்ற முடியாதிருத்தல்: நீதிபதிகள் இளைப்பாறிய பின்னர் சட்டத் தொழிலில் ஈடுபடுவதைத் தடுப்பதன் மூலமும் நீதித்துறையின் சுதந்திரத்தினைப் பாதுகாக்க முடியும். இதன் மூலம் நீதிபதிகளின் பக்கச்சார்பு நிலையினைத் தவிர்க்க முடியும்.

நீதித்துறையின் முக்கிய அதிகாரங்களுள் நீதிப்புணராய்வு அதிகாரம் குறிப்பிடத்தக்கதாகும். நீதிப்புணராய்வு அதிகாரம் என்பது அரசியலமைப்புச் சட்டங்கள் உள்ளடங்கலாக, சட்டங்களுக்கு அதிகாரபூர்வ பொருள்கோடல் வழங்குவதற்கும் சட்டரீதியற்ற அல்லது அரசியலமைப்புக்கு முரணான

நிறைவேற்றுத்துறை அல்லது சட்டத்துறை செயற்பாடுகளைத் தடைசெய்வதற்கும் நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமாகும்.

இதையொத்த விளக்கத்தினையே ஸ்மித் என்பவரும் முன்வைத்துள்ளார். அவரது கருத்தின்படி "அரசியலமைப்புக்கு அதிகாரபூர்வ பொருள்கோடல் வழங்குவதற்கு சாதாரண அல்லது விசேட நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் நீதிப்புணராய்வு அதிகாரமாகும். இவ்வதிகாரம் மூன்று பிரதான விடயங்களை உள்ளடக்கியது: குறிப்பிட்ட சட்டங்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டதா என்பதைத் தீர்மானிப்பது; அடிப்படை சுதந்திரங்கள் தொடர்பாக அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பது; அரசாங்கத்தின் பல மட்டங்களுக்கு இடையிலும் பல நிறுவனங்களுக்கு இடையிலும் உள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பது".

19 ஆம் நூற்றாண்டில் நீதிப்புணராய்வு பற்றிய தத்துவம் ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்புடன் மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது. 20 ஆம் நூற்றாண்டில் இத்தத்துவம் உலகளாவிய கவனயீர்ப்பினைப் பெற்றுக் கொண்டது. அதிலும் குறிப்பாக சமஷ்டி நாடுகளில் அரசாங்கத் துறைகளுக்கிடையில் மட்டுமன்றி மத்திய - மாநில அரசுகளுக்கிடையில் எழுகின்ற நெருக்கடிகளையும் தீர்ப்பதற்கான பொறுப்பினை நீதிமன்றங்கள் பெற்றுக் கொண்டதிலிருந்து நீதிப்புணராய்வு பற்றிய தத்துவம் முக்கியத்துவம் பெற வந்தது.

எனினும் பெல்ஜியம், பின்லாந்து, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து போன்ற சில நாடுகள் இன்னும் நீதிப்புணராய்வு அதிகாரத்தினை நீதித்துறைக்கு வழங்கவில்லை. ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் கோட்பாட்டளவில் நீதித்துறை, நீதிப்புணராய்வு அதிகாரத்தினை கொண்டிருக்காவிட்டாலும் நடைமுறையில் நீதிப்புணராய்வு அதிகாரம் அந்நாடுகளில் பிரயோகிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஐக்கிய இராச்சியத்தில் ஐரோப்பிய யூனியன் சட்டங்கள் ஊடாக அந்நாடுகளின் நீதிமன்றம் நீதிப்புணராய்வினை பிரயோகிக்கின்றது.

ஒஸ்ரியா, பிரான்ஸ், ஐரோப்பிய யூனியன், ஜேர்மன், கிரேக்கம், போர்த்துக்கல், ஸ்பெய்ன் போன்ற நாடுகளிலும் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள பல புதிய ஜனநாயக நாடுகளிலும் நீதிப்புணராய்வு அதிகாரம் விஷேட அரசியலமைப்பு நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை, அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க், இந்தியா, யப்பான், சுவீடன், ஐக்கிய அமெரிக்கா முதலான நாடுகளில் நீதிப்புணராய்வு அதிகாரம் வழமையான நீதிமன்றங்களால் பிரயோகிக்கப்படுகின்றன. சமகாலத்தில் நீதிப்புணராய்வு

அதிகாரத்தினை வெற்றிகரமாகப் பிரயோகித்துச் செயற்படும் இரு முக்கிய நீதி நிறுவனங்களாக ஜேர்மனிய சமஷ்டி அரசியலமைப்பு நீதிமன்றம், ஐரோப்பிய நீதிமன்றம் ஆகியன விளங்குகின்றன.

## பிரதான சொற்கள்

சட்டவாக்கத்துறை, ஒருமன்ற முறை, இருமன்ற முறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, நீதித்துறை சுதந்திரம்

## பயிற்சி வினாக்கள்

பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக:
(அ) சட்டவாக்கத்துறையின் பணிகள்
(ஆ) நிறைவேற்றுத்துறையின் பணிகள்
(இ) நீதித்துறையின் பணிகள்

நீதித்துறையின் பணிகளைக் குறிப்பிட்டு, நீதித்துறையின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்குள்ள ஏற்பாடுகளைப் பரிசீலிக்குக.

அரசாங்கத்தின் முத்துறைகளைக் குறிப்பிட்டு, அவற்றின் கடமைப் பொறுப்புக்களை ஆராய்க.

## உசாத்துணைகள்


Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

Kapur, A.C. (1996). ***Principles of political science***. New Delhi: Chand & Company.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

# அத்தியாயம் - 07
# குடியுரிமை

**உள்ளடக்கங்கள்**


| | | |
|---|---|---|
| 7.1 | குடியுரிமை | 100 |
| 7.2 | குடியுரிமையின் சட்ட - ஒழுக்க அடிப்படைகள் | 103 |
| 7.3 | குடியுரிமையினைப் பெறும் முறைகள் | 104 |


## அத்தியாய சுருக்கம்

நவீன அரசியல் எண்ணக்கருக்களுள் குடியுரிமை முக்கியமான ஒன்றாகும். குடியுரிமையின் மூலமே அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு வெளிப்படுத்தப்படுகின்றது. இன்று அரசின் அங்கத்தவர்களையும் அரசின் அங்கத்தவர் அல்லாதவர்களையும் பிரித்தறிவதற்கு குடியுரிமை உதவுகின்றது. குடியுரிமை குறித்த அனுபவங்கள் வரலாற்று ரீதியாக பல்வேறு விவாதத் திற்கு உட்பட்டு வந்துள்ளன. ஆரம்பகாலத்தில் பெண்கள், சிறுவர்கள், வெளிநாட்டவர்கள் உள்ளிட்டவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டிருக் கவில்லை. சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட சாரார் மட்டுமே குடியுரிமையினை அனுபவிக்க முடியுமானதாக இருந்தது. இன்று அந்த நிலை மாறியுள்ளது. அரசின் அங்கத்துவம் என்பது மிகவும் விரிந்ததாக உள்ளது. இன்று குடியுரிமையினைப் பெற்றிருத்தல் என்பது ஒரு அரசில் வாழ்வதற்கான, தொழில் புரிவதற்கான மற்றும் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கான உரிமைகளுடன் தொடர்புபட்டதாக உள்ளது. ஏதாவதொரு அரசின் குடியுரிமையினைப் பெறுவதன் மூலமே ஒரு தனிமனிதனின் உரிமைகள் அர்த்தமுள்ளதாக மாறுகின்றன. அவ்வாறன்றி எந்தவொரு அரசினதும் குடியுரிமையினைக் கொண்டிராதோர் நாடற்றவர்கள் என்று கருதப்படுகின்றனர்.

## அத்தியாயத்தின் நோக்கம்

நவீன அரசுகளில் குடியுரிமை குறித்த கருத்தாடல் முக்கிய இடம் பிடித்துள்ளது. அது குறித்து ஒரு அறிமுக விளக்கத்தினை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தினை வெற்றிகரமாகக் கற்பதன் மூலம் மாணவர்கள் குடியுரிமை குறித்த அடிப்படையான விளக்கங்களை அறிந்துகொள்வர்.

## 7.1 குடியுரிமை

குடியுரிமை குறித்து ஒரு பொதுவான கருத்து இல்லையாயினும் எளிமையான அர்த்தத்தில் குடிமக்கள் என்போர் ஒரு குறிப்பிட்ட அரசில் தமக்கான வதிவிடத்தினைக் கொண்டு, அவ் அரசின் சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிப்பவர்கள் ஆவர் எனக் குறிப்பிடமுடியும். இதன் மூலம் ஒரு ஆட்சிப் பிரதேசத்திற்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பினை குடியுரிமை என்ற பதம் குறித்து நிற்கின்றது.

நவீன காலத்தில் மனிதனின் சமூக-அரசியல் வாழ்வில் மிக முக்கிய அலகாக அரசு காணப்படுகின்றது. இவ்வரசு வழங்கும் உரிமைகளையும் சலுகை களையும் அனுபவித்துக் கொண்டு, அரசுக்கான தமது கடமைகளை நிறை வேற்றி, அரசிற்கான முழுக் கடப்பாட்டினைக் கொண்டிருப்பது அரசின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். இவ்விதம் அரசின் அங்கத்த வர்களாக உள்ளவர்களே குடிமக்கள் என அழைக்கப்படுகின்றனர்.

குடியுரிமை என்கிறபோது அது அரசுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள உறவு முறையினைக் குறித்து நிற்கின்றது. இதனால் குடியுரிமை மக்களுக்குரிய உரிமையினை உள்ளடக்கியுள்ள அதேவேளை, மக்கள் அரசுக்கு ஆற்ற வேண்டிய கடமையினையும் குறித்து நிற்கின்றது. உரிமையினைப் போன்று மக்களினதும் அரசினதும் கடப்பாடுகள் குடியுரிமை விடயத்தில் முக்கிய மானதாகும்.

குடியுரிமையினை அரசின் உறுப்புரிமை எனவும் வரையறுக்கமுடியும். பிளக்வெல் குறிப்பிடுவதன்படி, முழுமையானதும் பொறுப்புமிக்கதுமான அரசின் உறுப்புரிமை குடியுரிமையாகவும். இதன்படி அரசியல் சமூகத்தின் அங்கத்தவர்கள் குடியுரிமை பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர்.

குடியுரிமையின் மூலமே மக்கள் அரசியல் சமூகத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை அனுபவித்து, தம்மீது பொறுப்பாக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றி, அரசியல் சமூகத்தின் மீதான தமது விசுவாசத்தினைக் காட்டுகின்றனர்.

ரீ.எச். மார்ஷல் குடியுரிமை பற்றிக் குறிப்பிடும்போது, ஒரு சமூகத்தின் முழுமையான அங்கத்தவர்களாக உள்ள அனைவருக்கும் வழங்கப்படும் ஒரு அந்தஸ்து குடியுரிமையாகும் என்கிறார். அத்தகைய அந்தஸ்தை உடையவர்கள், அதனோடு இணைந்த உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பில் சமமானவர்களாவர்.

ரீ.எச். மார்ஷல் தனது குடியுரிமை குறித்த கருத்தாக்கத்தினை சிவில் குடியுரிமை, அரசியல் குடியுரிமை, சமூகக் குடியுரிமை என மூன்றாக வகையீடு செய்து விளக்குகின்றார்.

> சிவில் குடியுரிமை என்பது பேச்சு, சிந்தனை, சொத்துக்களை வைத்திருத்தல், நீதியினைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட தனி மனிதர்களின் அடிப்படை சிவில் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுடன் தொடர்புடைய குடியுரிமையாக இது வரையறுக்கப்படுகின்றது.
>
> அரசியல் குடியுரிமை என்பது அரசியல் விடயங்களில் பங்குபற்றல், அதிகாரத்தினைக் கைப்பற்றுதல், அவ்வதிகாரத்தினைப் பிரயோகித்தல், தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தல் உள்ளிட்ட அரசியல் உரிமை களுடன் தொடர்புடைய குடியுரிமையாக இவ்வகைப்படுத்தல் உள்ளது.
>
> சமூகக் குடியுரிமை என்பது முதலிரு குடியுரிமை வகைப்பாட்டினுள் இருந்தும் வேறுபட்டதும் பொருள் பொதிந்ததுமாகும். தனிமனி தனுக்கான சமூக அந்தஸ்தும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பும் சமூகக் குடியுரிமை மூலம் கிடைப்பதாக மார்ஷல் குறிப்பிடுகின்றார்.

டேவிட் மில்லர் என்பவர் குடியுரிமை என்பது வெறுமனே உரிமைகளை மட்டும் கொண்டிருப்பதல்ல. அது நம்பிக்கை, பொது நலனை மேம்படுத்து வதற்கான பற்றுறுதியினைக் கொண்ட சமூகத்தின் உறுப்புரிமையினைக் குறிப்பதாகும் என்கிறார்.

நவீன அரசுகளில் குடியுரிமை என்ற விடயம் அதி முக்கிய கவன ஈர்ப்பினைக் கொண்டுள்ளது. அரசுகளின் வெற்றி - தோல்வியிலும் குடிமக்களின் வகிபங்கு தாக்கம் செலுத்துகின்றது. இதனால் செயலூக்கமுள்ள குடிமக்கள் அரசுகளில் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தில் குடியுரிமை என்பது செயலூக்கமான குடியுரிமை (Active Citizenship), செயலூக்கமற்ற குடியுரிமை (Passive Citizenship) என இரண்டாக வகையீடு செய்யப்படுகின்றது.

குடியுரிமை குறித்த கருத்துக்கள் கிரேக்க காலமளவிற்குப் பழமையானது. கிரேக்கத்தில் செயற்பட்ட நகர அரசுகளில் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்கமுடியுமானதாக இருந்தவர்கள் குடிமக்களாகக் கருதப்பட்டனர்.

அத்தகைய வகுப்பினுள் சிறுவர்கள், பெண்கள், வெளிநாட்டவர்கள் உள்ளடக்கப்படவில்லை.

கிரேக்கத்தில் குடிமக்களுக்கு மட்டுமே அரசியல், நிருவாக மற்றும் நீதித்துறைசார் பதவிகளை வகிக்கவும், தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பங்குபற்றவும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

கிரேக்ககால அறிஞரான அரிஸ்டோட்டில் குறிப்பிடுவதன்படி ஆட்சி நிருவாகத்தில் பங்கெடுப்பதற்கு யார் அதிகாரம் பெற்றுள்ளனரோ அவர்கள் அரசின் குடிமக்கள் ஆவர். இதன்படி அரிஸ்டோட்டில் பெரும்பான்மையான மக்களை அரசின் குடிமக்களாகக் கருதவில்லை. குடியுரிமை குறித்த அரிஸ்டோட்டிலிய சிந்தனை உயர்குடியாட்சியினை மையப்படுத்தியதாக இருந்தது.

உரோமானிய ஆட்சிக்காலத்தில் குடியுரிமை குறித்த கருத்தாக்கம் விரிவடைந்தது. எந்தவொரு குடிமகனும் நீண்டகாலத்திற்கு அதிகபட்ச அதிகாரத்தினைக் கொண்டிருக்கக்கூடாது என்ற சிந்தனையின் அடிப்படையில் உரோமானியர்களின் குடியுரிமை குறித்த கருத்து ஒழுங்கமைந்திருந்தது.

உரோமர்கள் குடியுரிமையினை ஒரு சட்ட ரீதியான அந்தஸ்த்தாகக் கருதினர். இராணுவத்தில் சேவையாற்றுதல், சட்டவாக்கச் செயற்பாடுகளில் பங்குபற்றல், பொதுப் பதவிகளை வகித்தல் உள்ளிட்ட விடயங்களில் பங்குகொள்வதற்கான சட்ட அந்தஸ்தினை உரோமானிய குடியுரிமைக் கொள்கை வழங்கியது.

மத்திய காலத்தின் பிற்பகுதியிலும் மறுமலர்ச்சிக் காலத்தின் ஆரம்பப் பகுதியிலும் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட நகரங்களில் குடியுரிமை பெற்றிருப்பது வணிக மற்றும் பிற சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியது.

குடியுரிமை குறித்த நவீன கருத்துக்கள் 18ஆம் நூற்றாண்டு காலத்திலேயே எழுச்சியடைந்தன. குறிப்பாக பிரான்சிய மற்றும் அமெரிக்கப் புரட்சிகள் மூலம் இத்தகைய மாற்றம் நிகழ்ந்தன.

நவீன கருத்தாக்கத்தில் குடிமகன் என்பது சில சுதந்திரங்களைக் கொண்டிருப்பவன் என்று கருதப்பட்டது. பரிபூரண முடியாட்சியின் கீழும் குடிமகன் என்பவன் சில சுதந்திரங்களுக்கு உட்பட்டிருந்தான்.

ஆரம்பகால இங்கிலாந்து நாட்டில் குடிமகன் என்பவன் அந்நாட்டின் மாநகர அமைப்புக்களில் அங்கத்துவம் பெற்றவன் என்றே கருதப்பட்டது. இதன் மூலம் குடிமகன் என்பவன் ஆட்சிச் செயற்பாட்டில் துணைநிலை வகிபாகத்தினைக் கொண்டவனாகக் கருதப்பட்டான்.

பின்நாட்களில் உலகளவில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக குடியுரிமை குறித்த சிந்தனையில் மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக தாராளவாதக் கருத்தியல் தாக்கம், உலகமயமாதல் போன்றவற்றின் காரணமாக குடியுரிமை குறித்த புதிய கருத்துக்கள் தோற்றம் பெற்றுள்ளன.

சமகாலத்தில் குடியுரிமையினை ஒரு தேசத்துடன் மட்டுமன்றி உலகளாவிய ரீதியானதாக கருதும் சிந்தனைகளும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதனால் உலகக் குடியுரிமை என்ற புதிய சொல்லாடல் வளர்ந்து வருகின்றது.

## 7.2 குடியுரிமையின் சட்ட - ஒழுக்க அடிப்படைகள்

சட்டரீதியாக குடிமகன் என்போர் அரசுக்கு விசுவாசத்தினைக் காட்டி அரசிலிருந்து பாதுகாப்புப் பெறுபவர்கள் ஆவர். இதன்படி குடியுரிமை என்பது சட்ட ரீதியான ஒரு அந்தஸ்தாகும்.

குடிமகன் சட்ட ரீதியாக சுதந்திரத்தினை அனுபவிப்பதற்கும் சொத்துக்களை வைத்திருப்பதற்கும் அரசியல் உரிமைகளை அனுபவிக்கவும் உரித்துப் பெறுகின்றான். இத்தகைய உரிமைகள் மீறப்படும்போது குடிமக்கள் சட்ட வழிமுறைகளுக்கு உட்பட்டு நியாயத்தினைப் பெற்றுக் கொள்வதற்கும் சட்டத்தில் இடமளிக்கப்பட்டிருக்கும்.

குடியுரிமையின் சட்ட அடிப்படைகள் தெளிவாக உள்ளபோதிலும் ஒழுக்க அடிப்படைகளை தெளிவாக வரையறுப்பது கடினமானதாகும். எனினும் ஒழுக்கரீதியாக குடியுரிமை என்பது அரச மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் தொடர்புடைய ஒன்றாகும்.

இதன்படி குடியுரிமை என்பது சுய ஒழுக்கம் மற்றும் சுய கட்டுப்பாட்டு விழுமியங்களை உள்ளடக்கியதாகும். ஒரு குடிமகன் என்பவன் அதிக சுயநலமிக்கவனாக இருக்கக்கூடாது. அவனது தனிப்பட்ட நலன் பொது நலனுக்கு குறுக்கே இருக்கக்கூடாது.

ஒழுக்கரீதியாக குடிமகன் தான் ஒரு குடும்பத்தின், சமூகத்தின், கிராமத்தின், அரசின், மனித குலத்தின் அங்கத்தவன் என்பதனை மறந்துவிடக்கூடாது.

இவை அனைத்தும் ஒருவர் குடியுரிமையுடன் செயற்படும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய ஒழுக்க அடிப்படைகளாகும். எனவேதான் குடிமகன் என்பவன் பொது நல்வாழ்வில் எப்போதும் கவனம்கொள்பவனாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

ஒழுக்க ரீதியாக ஒரு சிறந்த குடிமகன் என்பவர் சமூதாய உணர்வு, சுயகட்டுப்பாடு, மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு, நாட்டுப்பற்று, வாக் குரிமையினை முறையாகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட குணாம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும் சுயநலவாதம், குழுவாதம், எழுத்தறிவின்மை, வறுமை, பிராந்தியவாதம், இனவாதம் உள்ளிட்ட விடயங்கள் சிறந்த குடிமக்களை உருவாக்குவதற்கு தடையாக அமைகின்றன.

### 7.3 குடியுரிமையினைப் பெறும் முறைகள்

ஒருவர் குடியுரிமை பெற்றிருக்க வேண்டுமாயின் அவர் மூன்று நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்: குறித்ததொரு அரசின் அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல், அவ்வரசு வழங்கும் சிவில் - அரசியல் உரிமைகளை அனுபவிக்க முடியுமானதாக இருத்தல், குறித்த அரசுக்கு விசுவாசத்தினைக் காட்டல்.

குடியுரிமை விடயத்தில் யார் குடிமகன், யார் குடிமகன் அல்ல என்ற வேறுபடுத்தலும் முக்கியமானது. குடிமகன் என்பவர் அரசு வழங்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை அனுபவிக்கக்கூடியவர்கள் ஆவர்.

குடிமகன் அல்லாதவர் ஒரு நாட்டின் அரசியல் உரிமையினை அனுபவிப் பதற்கான சலுகையினைக் கொண்டிராதவர் ஆவர். இத்தகையவர்கள் அரசுகள் வழங்கும் சில சிவில் உரிமைகளை அனுபவிக்கும் வாய்ப்பினைக் கொண் டிருக்க முடியும். இவ்விடயம் அந்தந்த நாடுகளைப் பொறுத்து அமைகின்றன.

குடிமகன் அல்லாதவர்கள் மூன்று வகைக்குள் அடங்குகின்றனர். குடியுரிமையினைப் பெற்றிராது ஒரு நாட்டில் வசிப்பவர்கள், தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோர் இம்மூன்று பகுதியினருமாவர்.

தமது சொந்த அரசினை விட்டு வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் முதல் வகையினைச் சேர்ந்தவர்களாவர். உதாரணமாக

பல்லாயிரக்கணக்கான இலங்கையர் வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். சிலர் அந்தந்த நாடுகளில் குடியுரிமையினைப் பெற்றுள்ள போதிலும் பலர் அவர்கள் வாழும் நாடுகளில் குடியுரிமையினைக் கொண்டிருப்பதில்லை.

தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு விஜயம் செய்பவர்கள் தற்காலிக தங்கியிருப்பாளர்கள் ஆவர். உதாரணமாக ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தமது உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்கு சென்று தங்கிவாழ்வதனைக் குறிப்பிடமுடியும்.

தத்தமது நாடுகள் சார்பாக வெளிநாடுகளில் தூதுவர்களாகச் செயற்படுபவர்கள் மூன்றாவது வகையினைச் சேர்ந்தவர்கள். உதாரணமாக இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்களைக் குறிப்பிடமுடியும். இவர்கள் இலங்கைக் குடிமக்களுக்குரிய அரசியல் உரிமைகளை அனுபவிக்கமுடியாது.

குடிமகன் என்ற தகுதி இறைமையுள்ள ஒரு அரசின் அரசியல் யாப்பின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது. பல்வேறு காரணங்களுக்காக குடிமகன் என்ற தகுதியினை ஒருவர் பெறுகின்றார்.

ஒரு அரசில் வாழ்கின்ற பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறப்பதன் மூலம், வேறொரு நாட்டில் குடியுரிமை பெற்றுள்ளவர்களை திருமணம் முடிப்பதன் மூலமும் குடியுரிமை அந்தஸ்துக் கிடைக்கின்றது.

பொதுவாக ஒருவர் குடியுரிமையினை பின்வரும் இரண்டு வழிகளில் பெறுகின்றனர். அவை பிறப்பின் அடிப்படையில், இயல்பின் அடிப்படையில் ஆகும்.

ஒருவர் பிறப்பின் அடிப்படையில் குடியுரிமையினைப் பெறுகின்றபோது அது முதல் வகையினைச் சேர்ந்தது. அதேவேளை, ஒருவர் நீண்டகாலம் வெளிநாடு ஒன்றில் வசித்து வந்ததன் மூலம் குடியுரிமையினைப் பெறமுடியும் அது இயல்பின் அடிப்படையிலான குடியுரிமையாகும்.

வெளிநாடொன்றில் ஒருவர் குடியுரிமையினைப் பெறுகின்றபோது தனது சொந்த நாட்டின் குடியுரிமையினை இழக்க வேண்டி ஏற்படலாம். சில நாடுகள் இரட்டைக் குடியுரிமையினை அங்கீகரித்துள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது.

வெளிநாடொன்றில் ஒருவர் குடியுரிமையினைப் பெறுவதற்கு அந்நாடுகள் வகுத்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். இவ்விதம் வெளிநாட்டவர்களுக்கு குடியுரிமையினை வழங்கும் நிபந்தனைகள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது.

குடியுரிமையினைப் பெற்றிருக்கும் ஒருவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனது குடியுரிமையினை இழக்கமுடியும். அவைவருமாறு:

ஒருவர் தனது நாட்டுக் குடியுரிமையினைக் கைவிட்டு பிறிதொரு நாடொன்றின் குடியுரிமையினைப் பெற விரும்பும்போது.

ஒரு பெண் வெளிநாட்டவர்களை மணப்பதன் மூலமும் குடியுரிமையினை இழக்கநேரிடும்.

ஒருவர் நீண்டகாலத்திற்கு நாட்டில் வசிக்காத சந்தர்ப்பங்களிலும் குடியுரிமையினை இழக்கநேரிடும்.

ஒருவர் நாட்டை விட்டு தப்பியோடும் சந்தர்ப்பங்களிலும் தமது குடியுரிமையினை இழக்கநேரிடும்.

ஒருவர் தமது நாட்டின் அனுமதியில்லாமல் வெளிநாட்டு சேவைகளில் இணைந்துகொள்ளும் சந்தர்ப்பங்களிலும் தனது குடியுரிமையினை இழக்கநேரிடும்.

சில சந்தர்ப்பங்களில் வம்சாவளி அடிப்படையிலும் குடியுரிமை கிடைக்கின்றது. இலங்கை மலைநாட்டு தமிழ் மக்களின் குடியுரிமை விடயத்தினை இதனுடன் தொடர்புபடுத்தி நோக்கமுடியும்.

பதிவின் மூலம் குடியுரிமையினைப் பெற்றுக்கொள்ளும் முறையும் காணப்படுகின்றது. உதாரணமாக ஒரு நாட்டுக் குடிமகனை பிறிதொரு நாட்டுக் குடிமகன் திருமணம் செய்கின்ற சந்தர்ப்பங்களில் பதிவுக் குடியுரிமையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எவ்வாறாயினும் பிறிதொரு நாட்டில் குடியுரிமை பெறுகின்றபோது அந்தந்த நாடுகளின் சட்ட விதிமுறைகள் கருத்திற்கொள்ளப்பட்டே வெளிநாட்டவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படுகின்றது.

**பிரதான சொற்கள்**

குடியுரிமை, குடிமகன், குடிமகன் அல்லாதோர்

**பயிற்சி வினாக்கள்**

குடியுரிமை என்ற எண்ணக்கருவினை விளக்கி, குடியுரிமையினைப் பெறும் வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக.

குடியுரிமையின் அடிப்படை அம்சங்கள் குறித்து நுணுக்கக் கட்டுரை ஒன்று வரைக.

பின்வருவனவற்றை விளக்குக.
(அ) குடியுரிமை எண்ணக்கரு
(ஆ) குடியுரிமையின் சட்ட மற்றும் ஒழுக்க அடிப்படைகள்
(இ) குடியுரிமையினைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள்

குடியுரிமை பெறுவதற்கான சந்தர்ப்பங்களையும் குடியுரிமையினை இழப்பதற்கான சந்தர்ப்பங்களையும் தெளிவுபடுத்துக.

**உசாத்துணைகள்**

Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

Kapur, A.C. (1996). ***Principles of political science***. New Delhi: Chand & Company.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

# அத்தியாயம் - 08

## பிரதிநிதித்துவம், தேர்தல்கள், வாக்களித்தல்

**உள்ளடக்கங்கள்**


| | | |
|---|---|---|
| **8.1** | **பிரதிநிதித்துவம்** | **109** |
| **8.2** | **தேர்தல்கள்** | **111** |
| **8.3** | **வாக்காளர் நடத்தை** | **114** |


### அத்தியாய சுருக்கம்

*பிரதிநிதித்துவம், அதன் வழியமைந்த தேர்தல் ஜனநாயகத்தின் மிக முக்கிய அடிப்படை மட்டுமல்ல. அது ஜனநாயகத்தின் இருப்புக்கு அவசியமான முந்நிபந்தனையாகும். இதனால் ஜனநாயகம் நியாயமானதும் போட்டித் தன்மை மிக்கதுமான தேர்தலை முன்நிறுத்துகின்றது. ஒரு நாட்டில் ஜனநாயகத்தின் எதிர்காலம் குடிமக்கள் தேர்தலில் பங்குபற்றும் விதத்திலேயே தங்கியிருக்கிறது. மக்கள் தமது அரசியல் உரிமையினை அனுபவிப்பதற்கும், தாம் விரும்பும் தலைவர்கள் (பிரதிநிதிகள்) மூலம் ஆளப்படுவதற்கும் தேர்தல்கள் களம் அமைக்கின்றன. இதன்போது கவனிக்கத்தக்க முக்கிய விடயம் தேர்தல்கள் நியாயமாகவும் நீதியாகவும் இடம்பெற வேண்டும் என்பதாகும். அப்போதுதான் நீதியான ஆட்சியினைத் தாபிக்கமுடியும் என்பதுடன் மக்கள் இறைமையும் பெறுமானமுள்ளதாக அமையும். இவ்விதம் ஜனநாயகப் பிரதிநிதித்துவ சிந்தனையில் தேர்தல் முக்கியமான ஒன்றாயினும் ஜனநாயக நாடுகள் ஒவ்வொன்றும் தமக்கு இசைவான தேர்தல் முறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதனால் ஒரு பொதுவான தேர்தல் முறையொன்று ஜனநாயகத்தில் இல்லை எனலாம்.*

### அத்தியாயத்தின் நோக்கம்

*நவீன ஜனநாயக அரசியல் செயற்பாட்டு முறைக்கு அடிப்படையாக இருக்கும் பிரதிநிதித்துவம், தேர்தல்கள், வாக்காளர்களின் நடத்தை உள்ளிட்ட விடயங் களைத் தெளிவுபடுத்துவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.*

### கற்றல் பெறுபேறுகள்

*இவ்வத்தியாயத்தினை வெற்றிகரமாகக் கற்பதன் மூலம் மாணவர்கள் பிரதிநிதித்துவம், தேர்தல்கள், வாக்காளர் நடத்தை உள்ளிட்ட விடயங்கள் குறித்த தெளிவினைப் பெற்றுக்கொள்வர்.*

## 8.1 பிரதிநிதித்துவம்

பிரிநிதித்துவம் என்பது ஒன்றின் சார்பாக அல்லது ஒருவர் சார்பாக ஆஜராகுவதைக் குறிக்கும். பிறருக்காகப் பேசுதல் அல்லது பிறருக்காகச் செயற்படுதல் அல்லது பிறருக்காக நிற்றல் பிரதிநிதித்துவம் என அழைக்கப்படுகிறது.

ஜனநாயக முறையினை நேரடி ஜனநாயக முறை, மறைமுக ஜனநாயக முறை என இரண்டு வகைப்படுத்துவர். தற்காலத்தில் நேரடி ஜனநாயக முறையினை நடைமுறைப்படுத்துவது சிரமமானதாகையினால் மறைமுக ஜனநாயக முறை அதிகளவு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மறைமுக ஜனநாயக முறையினை பிரதிநித்துவ ஜனநாயக முறை எனவும் அழைப்பர். பிரதிநித்துவ ஜனநாயக முறையில் மக்கள் தத்தமது பிரதிநிதிகளினூடாக ஆட்சி செய்கின்றனர். இந்தவகையில் தற்கால ஜனநாயக முறையில் பிரதிநிதித்துவம் என்பது அதன் முக்கிய அடிப்படைகளுள் ஒன்றாகும்.

பிரதிநிதித்துவ சிந்தனை 17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் தோற்றம் பெற்ற பிரதிநிதித்துவ அரசாங்க முறையுடன் எழுச்சியடைந்தது. அதிலும் குறிப்பாக இங்கிலாந்தில் பாராளுமன்ற முறையின் வளர்ச்சியோடு பிரதிநிதித்துவ எண்ணக்கரு பிரபல்யமடைந்தது.

ஜனநாயகப் பிரதிநிதித்துவ சிந்தனை வளர்ச்சியில் தாராளவாதக் கருத்தியல் முக்கிய பங்காற்றியது. பாரிய நிலப்பரப்பினையும் அதிக சனத்தொகை யினையும் கொண்டுள்ள தற்கால அரசுகளில் மக்கள் பங்கேற்பினை இலகுபடுத்துவதற்காக ஜனநாயகப் பிரதிநிதித்துவம் முன்மொழியப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சமகாலத்தில் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு தேர்தலினைப் பயன்படுத்துகின்றனர். தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருந்து செயற்படுகின்றனர். பாராளுமன்ற ஜனநாயகத்தினைப் பின்பற்றுகின்ற நாடுகளில் சட்டவாக்க சபைகள் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டதாகவே உள்ளன.

தற்கால ஜனநாயக நாடுகளில் பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஆகிய இரு பிரதான பிரதிநிதித்துவ முறைகள் நடைமுறையிலுள்ளன.

பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை என்பது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறையினைக் குறிப்பதாகும். இம்முறையில் தேர்தலானது ஒரு அங்கத்துவ தொகுதி முறையில் அல்லது பல அங்கத்துவ தொகுதி முறையில் இடம்பெறமுடியும்.

பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை சாதாரன பெரும்பான்மை முறை, தனிப்பெரும்பான்மை முறை, மாற்று வாக்களிப்பு முறை, இரு சுற்று வாக்களிப்பு முறை என வகையீடு செய்யப்படுகின்றது.

சாதாரன பெரும்பான்மை முறை என்பது குறித்த ஒரு தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களுள் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளரைத் தெரிவு செய்யும் முறையாகும்.

தனிப்பெரும்பான்மை முறை என்பது அளிக்கப்பட்ட செல்லுபடியான மொத்த வாக்குகளுள் ஐம்பது சதவீதத்திற்கு அதிமான வாக்குகளைப் பெற்றவர் வெற்றி பெற்றவராகத் தெரிவு செய்யப்படும் முறையாகும்.

மாற்று வாக்களிப்பு முறை என்பது பல வேட்பாளர்கள் மொத்தமாகப் பெற்ற வாக்குகளை மாற்றுவதன் மூலம் வாக்காளர்களின் ஒட்டுமொத்த விருப்பமும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

இரு சுற்று வாக்களிப்பு முறை என்பது இரு சுற்றுத் தேர்தலுக்கு இடமளிக்கும் ஒரு பிரதிநிதித்துவ முறையாகும். முதல் சுற்றில் அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படாத விடத்து இரண்டாம் சுற்று வாக்களிப்பு பயன்படுத்தப்படுகிறது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை என்பது தேர்தலில் கட்சிகள் அல்லது குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் ஆசனங்களை ஒதுக்கீடு செய்யும் ஒரு முறையாகும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை கட்சிப் பட்டியல் முறை, தனிமாற்று வாக்கு முறை ஆகிய இரண்டு முறைகளில் இடம்பெறுகிறது. கட்சிப் பட்டியல் முறையில் திறந்த பட்டியல், மூடிய பட்டியல் ஆகிய இரு பட்டியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. சில நாடுகள் திறந்த பட்டியல் முறையினையும் சில நாடுகள் மூடிய பட்டியல் முறையினையும் பயன்படுத்துகிறது.

இனவாரிப் பிரதிநிதித்துவம், சிறுபான்மை பிரதிநிதித்துவம், பெண்கள் பிரதிநிதித்துவம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பிரதிநிதித்துவம் போன்ற விசேட பிரதிநிதித்துவ மாதிரிகளும் காணப்படுகின்றன.

## 8.2 தேர்தல்கள்

ஜனநாயகத்தில் காலத்திற்கு காலம் இடம்பெறும் தேர்தல் முக்கிய அம்சங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. குடிமக்கள் தமது இறையாண்மை அடிப்படையில் அரசாங்கத்தினை தெரிவு செய்வதற்கு தேர்தல் உதவுகின்றது. மக்கள் அரசாங்கம் தொடர்பான தமது அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துவதற்கும் கிரமமாக இடம்பெறும் தேர்தல்கள் துணைபுரிகின்றன.

குடிமக்களை ஆட்சிக் கட்டமைப்புடன் ஒன்றிணைக்கும் கருவியாக தேர்தல் உள்ளது. தேர்தலில் வாக்களித்தல் குடிமக்களின் உரிமைகளுள் ஒன்றாக இருப்பதுடன் தேர்தல் மூலம் அமையும் அரசாங்கங்களே ஜனநாயகத்தில் சட்டபூர்வமான அரசாங்கமாகக் கொள்ளப்படுகின்றது. தேர்தல் தவிர்ந்த வன்முறை வழிகளிலான ஆட்சியமைப்பினை ஜனநாயகம் அங்கீகரிக்கப்பதில்லை.

ஜனநாயக அரசாங்க முறையில் தேர்தல் முக்கியமான ஒன்றாயினும் தேர்தல் என்றால் என்ன என்பது தொடர்பாக ஒரு பொதுவான கருத்துக் காணப்படுவதில்லை. எனினும் ஜே.எஸ். மில் என்ற அறிஞர், பொதுப் பணி செய்யக்கூடிய ஏதேனும் பதவிக்கு அல்லது நிறுவனத்திற்கு வேட்பாளர்களாக நிற்கும் பலரில் ஒருவரை அல்லது சிலரை அப்பதவிக்குத் தகுதியுடையவர் என்று வாக்காளர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக தெரிவு செய்யும் ஒரு முறையே தேர்தல் என்கிறார்.

ஜனநாயகத்தில் அதிகாரத்தின் தளமாக மக்கள் விளங்குவதனால் மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, தாம் விரும்பும் அரசாங்கத்தினை அமைப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான சிறந்த வழிகளுள் ஒன்றாக தேர்தல் உள்ளது.

சமகால அரசாங்கங்களில் பல்வேறு ஆட்சித் தாபனங்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு தேர்தல் நடத்தப்படுகின்றது. இலங்கையில் ஜனாதிபதி, பாராளுமன்றம், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என்போர் தேர்தல் மூலமே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தேர்தல் குறித்துப் பேசுகிறபோது, பிரதான தேர்தல் முறைகள் குறித்தும் அறிந்திருக்க வேண்டும். இதன்படி ஒரு உறுப்பினர் தொகுதி முறை, பல உறுப்பினர் தொகுதி முறை, நேரடித் தேர்தல் முறை, மறைமுகத் தேர்தல் முறை ஆகிய நான்கு வகையான தேர்தல் முறைகள் நடைமுறையிலுள்ளதாக சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஒரு உறுப்பினர் தொகுதி முறை என்பது முழு நாடும் ஒரு தலைவரைத் தெரிவு செய்வதற்கு ஒரு தொகுதியாக அல்லது முழு நாட்டிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படத்தக்க பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப நாடு பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்படும் முறை ஒரு உறுப்பினர் தொகுதி முறையாகும்.

ஒரு உறுப்பினர் தொகுதி முறையில் தொகுதிகளின் எண்ணிக்கைக்கும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் எண்ணிக்கைக்கும் இடையில் சமனிலைத் தன்மை காணப்படும்.

ஒரு உறுப்பினர் தொகுதி முறையில் இடம்பெறும் தேர்தலில் ஒவ்வொரு தொகுதிகளிலும் யார் அதிகபட்ச வாக்குகளைப் பெறுகின்றாரோ அவர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுவார். இம்முறையில் ஒவ்வொரு குடிமகனும் ஒரு வாக்கினை அளிக்கும் உரிமையினைப் பெற்றிருப்பர்.

எடுத்துக்காட்டாக ஒரு உறுப்பினர் தொகுதி முறையில் 100 மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் எனின் அந்நாடு 100 தனி அங்கத்துவ தொகுதிகளாப் பிரிக்கப்படும். பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகளில் இம்முறை நடைமுறையிலுள்ளது.

பல உறுப்பினர் தொகுதி முறையில் முழு நாடும் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதிகளிலிருந்தும் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இம்முறையில் ஒரு உறுப்பினர் வெற்றி பெறுவதற்கு குறிப்பிட்ட ஒரு தொகுதி வாக்கினைப் பெற்றுக் கொண்டால் போதுமானது.

பல உறுப்பினர் தொகுதி முறை நடைமுறையில் உள்ள சில நாடுகளில் விருப்பு வாக்கு முறையும் பின்பற்றப்படுகின்றது. இங்கு வாக்காளர்கள் பிரதிநிதிகள் தொடர்பான தமது விருப்புரிமையினைக் குறிப்பிடுவதற்கு

இடமளிக்கப்பட்டிருக்கும். இச்சந்தர்ப்பங்களில் ஒரு வாக்காளர் ஒன்றுக்கு மேற்பட்ட விருப்புரிமையினைக் குறிப்பிடுவதற்கான வாய்ப்பினைக் பெற்றிருப்பர்.

பல உறுப்பினர் தொகுதி முறையில் ஒரு தொகுதியில் எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது அத்தொகுதியின் சனத்தொகை, நிலப்பரப்பு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் படுகின்றது.

பல உறுப்பினர் தொகுதி முறை பொதுச் சீட்டு முறை எனவும் அழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக இலங்கை, சுவீடன் போன்ற நாடுகளில் இம்முறை நடைமுறையில் உள்ளது.

நேரடி தேர்தல் முறை என்பது வாக்காளர்கள் தாமாகவே நேரடியாக வாக்களிப்பதன் மூலம் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறையாகும். இம்முறையில் ஒவ்வொரு வாக்காளரும் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று தாம் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்.

நேரடித் தேர்தல் முறையில் வாக்காளர்கள் வாக்களிப்பதனை இலகுபடுத்துவதற்காக வாக்குச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. சில நாடுகளில் இலத்திரனியல் வாக்குச் சீட்டுக்களும் வழங்கப்படுகின்றன.

நேரடித் தேர்தல் முறையில் அதிகபட்ச வாக்கினைப் பெற்றவர்கள் வெற்றி பெற்ற வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்படுவர். நேரடித் தேர்தல் முறை ஒரு அங்கத்தவர் அல்லது பல அங்கத்தவர் தொகுதி முறையின் கீழ் இடம்பெறமுடியும்.

மறைமுகத் தேர்தல் முறை என்பது வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளை நேரடியாகத் தெரிவு செய்வதற்கு இடமளிக்காத தேர்தல் முறையாகும். இம்முறையில் வாக்காளர்கள் தேர்வாளர்களைத் தெரிவு செய்கின்றனர். தேர்வாளர்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றனர்.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்கு மறைமுகத் தேர்தல் உபாயம் பயன்படுத்தப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி வாக்காளர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் கல்லூரி ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இந்திய ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதிலும் மறைமுகத் தேர்தல் உபாயம் பயன்படுத்தப்படுகின்றது.

## 8.3 வாக்காளர் நடத்தை

வாக்காளர் நடத்தையினை அறிவதற்கு முன்னர் அதற்கு அடிப்படையாக உள்ள வாக்குரிமை குறித்து நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

வாக்குரிமை என்பது ஜனநாயக சமூகத்தில் ஒரு அடிப்படை அரசியல் உரிமையாகும். இவ்வுரிமையினைக் கொண்டே ஜனநாயக முறையில் மக்கள் தமக்கான ஆளும் வகுப்பினரைத் தெரிவு செய்கின்றனர்.

அரசாங்க விவகாரங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துவதற்கு மக்களுக்கு உந்துசக்தியாக இருப்பது வாக்குரிமையாகும். மக்கள் தாம் விரும்பும் அரசாங்கத்தினை ஆட்சி பீடம் ஏற்றவும் விரும்பாத அரசாங்கத்தினை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கும் வாக்குரிமை உதவுகின்றது.

வாக்குரிமையினை யார் பெற்றிருக்க வேண்டும் என்ற விடயத்தில் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை நிலவிய காலத்தில் வயது, பால், கல்வி, சொத்து போன்றன வாக்குரிமைக்கான தகைமைகளாகக் கருதப்பட்டன.

தற்கால ஜனநாயக அரசுகளில் மேற்குறிப்பிட்ட வரையறைகளைக் கருத்திற்கொள்ளாது ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட ஆண் - பெண் இருபாலாருக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான நாடுகளில் இன்று 18 வயதுக்கு மேற்பட்ட குடிமக்கள் வாக்குரிமையினைப் பெற்றுள்ளனர். இவ்வாக்குரிமையினை வயது வந்தோர் வாக்குரிமை அல்லது சர்வஜன வாக்குரிமை என அழைப்பர்.இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டோர் வாக்குரிமை பெற்றுள்ளதனை நாம் அறிவோம்.

இலங்கையில் வாக்குரிமையினை வெளிப்படுத்தும் உரிமை உடையவர் களாகவும் தேருநர் இடாப்பில் பெயர் பதியப்பட்டு உத்தியோகபூர்வ அடையாள அட்டையினை வைத்திருப்பவராகவும் உரிய தேர்தல் நடவடிக்கைகளுக்குச் சமூகமளிக்க உரித்துடையவராகவும் இருப்பவர் வாக்காளர்களாகக் கருதப் படுகின்றனர்.

வாக்காளர்களின் தேர்தல் நடத்தைகள் வாக்காளர் நடத்தை என அழைக்கப்படுகிறது. வாக்காளர்களின் தேர்தல் நடத்தையினைப் புரிந்து கொள்வது சிறந்த கொள்கை வகுப்புக்கு உதவுகின்றது. இதனால் வாக்காளர் நடத்தை குறித்த விடயம் அரசியல் அறிஞர்களின் அதீத கவனத்திற்கு உள்ளாகியுள்ளது.

வாக்களிப்புக் காலத்தில் வாக்காளர்கள் நடந்து கொள்ளும் விதத்தினையே வாக்காளர் நடத்தை என்பது குறித்து நிற்கின்றது. இந்நடத்தையினை உன்னிப்பாக அவதானிப்பதன் மூலம் வாக்காளர்களின் எதிர்பார்ப்பினைக் கண்டறியமுடியும்.

தேர்தல் கருத்துக்கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் வாக்காளர் நடத்தையினை உன்னிப்பாக அவதானித்து, பகுப்பாய்வுகளைச் செய்து, துல்லியமான கருத்துக்கணிப்பு முடிவுகளை வெளியிடுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

வாக்காளர் நடத்தை குறித்த ஆய்வுகளில் ஈடுபடும் அரசியல் உளவியலாளர்கள் வாக்காளர்களின் உளப்பாங்குகளும் நம்பிக்கைகளும் எவ்வாறு வடிவமைக் கப்படுகிறது, மக்கள் தாம் எதிர் கொள்ளும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பான அறிவினை எவ்வாறு கட்டமைத்துக் கொள்ளுகின்றனர், அவர்களுக்கு கொடுக்கப்படும் தகவல்கள் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது என்பன போன்ற விடயங்களை பகுப்பாய்வு செய்கின்றனர்.

வாக்காளர் நடத்தைகளுள் குறுங்கால வாக்காளர் நடத்தை, நீண்டகால வாக்காளர் நடத்தை ஆகிய இரு வடிவங்கள் உள்ளன.

> குறுங்கால வாக்காளர் நடத்தை என்பது குறுகிய காலத்திற்கு வாக்காளர் நடத்தையினைப் பாதிக்கும் விடயங்களை உள்ளடக்கியதாகும். சில சிறிய பிரச்சினைகள் குறுங்கால நடத்தையினைத் தீர்மானிக்கின்றது.
>
> நீண்டகால வாக்காளர் நடத்தை என்பது நீண்ட காலத்திற்கு வாக்காளர் நடத்தையினைப் பாதிக்கும் விடயங்களை உள்ளடக்கியதாகும். மிகவும் சிக்கலான பல் முனைக் காரணிகள் வாக்காளர்களின் நீண்டகால நடத்தையினைப் பாதிக்கின்றது.

வகுப்பு, பால், வயது, இனத்துவம், சமயம், மொழி, பிரதேசம், கருத்தியல்கள் கட்சிக் கொள்கைகள் உள்ளிட்ட காரணிகள் வாக்காளர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் பொதுவான காரணிகளாக உள்ளன. பிரத்தியேகக் காரணிகளும் வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தக் கூடும்.

வாக்காளர் நடத்தை குறித்த ஆய்வுகளின் வளர்ச்சியினால் பல நாடுகளில் வாக்காளர் நடத்தை குறித்த தனியான கல்விப் பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்**

பிரதிநிதித்துவம், தேர்தல், வாக்காளர், வாக்காளர் நடத்தை

**பயிற்சி வினாக்கள்**

பிரதிநிதித்துவம் என்ற எண்ணக்கருவினை விளக்கி, பிரதான பிரதிநிதித்துவ முறைகளைத் தெளிவுபடுத்துக.

ஜனநாயக முறையில் பிரதிநிதித்துவத்தின் அவசியம் குறித்துக் கருத்துரைக்குக.

பின்வருவனவற்றை விளக்குக.
(அ) தேர்தல் எண்ணக்கரு
(ஆ) பிரதிநிதித்துவ முறைகள்
(இ) வாக்காளர் நடத்தை

ஜனநாயகப் பிரதிநிதித்துவ முறையின் முக்கிய அம்சங்களைப் பரிசீலிக்குக.

**உசாத்துணைகள்**

Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

Kapur, A.C. (1996). ***Principles of political science***. New Delhi: Chand & Company.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

# அத்தியாயம் - 09

# கட்சிகளும் கட்சி முறைமையும்

**உள்ளடக்கங்கள்**


| | | |
|---|---|---|
| 9.1 | அரசியல் கட்சி | 118 |
| 9.2 | அரசியல் கட்சி முறைமை | 121 |
| 9.3 | கட்சி முறைமையின் நன்மை - தீமைகள் | 122 |


## அத்தியாய சுருக்கம்

அரசியல் கட்சிகள் ஜனநாயக அரசாங்க முறையில் முக்கியத்துவம் பெறும் ஒரு கருவியாகும். அவை தெளிவான கொள்கை, இலக்குகளுடன் உருவாக்கப் படுவதுடன் சமூக, அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டுகின்றன. கட்சிகள் மக்கள் மத்தியில் சிதறிக் கிடக்கின்ற பொதுஜன அபிப்பிராயத்தினை ஒன்று திரட்டி அவற்றை அரசியல் அரங்கிற்கு கொண்டு செல்வதுடன் குறித்த அபிப்பிராயங்கள் தொடர்பில் பொதுக் கொள்கைகள் வகுக்கப்படுவதற்கும் கட்சிகள் துணைபுரிகின்றன. தற்காலத்தில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான ஒரு கருவியாக அரசியல் கட்சிகள் பயன்படுத்தப்படுவதுடன் ஆளும் கட்சி - எதிர்க் கட்சி என்ற பகுப்புடன் அரசாங்கங்கள் நிறுவப்படுவதற்கும் அரசியல் கட்சிகள் தளமாக அமைகின்றன. இவ்விதம் நடைமுறை அரசியலில் கட்சிகள் பெறும் முக்கியத்துவம் காரணமாகவே எல்லா அரசுகளும் கட்சி முறையின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்படுகின்றன. நடைமுறையில் பலவிதமான கட்சி முறைகள் காணப்படுகின்றன.

## அத்தியாயத்தின் நோக்கம்

அரசியல் இயங்குநிலையினை உருவாக்கும் முக்கிய கருவிகளுள் அரசியல் கட்சிகள் குறிப்பிடத்தக்கனவாகும். இவ்வரசியல் கட்சிகள் குறித்தும் பல்வேறுபட்ட அரசியல் கட்சி முறைகள் குறித்தும் தெளிவுபடுத்துவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தினை வெற்றிகரமாகக் கற்பதன் மூலம் மாணவர்கள் அரசியல் கட்சிகள் குறித்தும் பலதரப்பட்ட கட்சி முறைகள் குறித்தும் அவற்றின் சாதக, பாதகங்கள் குறித்தும் தெளிவான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வர்.

## 9.1 அரசியல் கட்சி

லீகொக் (Leacock) என்ற அறிஞரது கருத்துப்படி அரசியல் கட்சி என்பது "ஒரு அரசியல் அலகாகச் செயற்படுவதற்காக ஒன்றிணைந்த மக்கள் குழுவினைக் குறிக்கும்." இத்தகைய குழுக்கள் பொதுமக்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஒத்த கருத்துக்களை தங்களுக்குள் பகிர்ந்துகொள்வதுடன் பொது இலக்கினை நோக்கியதாக வாக்காளர் அதிகாரத்தினையும் ஒன்று திரட்டுகின்றனர். இதன் மூலம் அரசாங்கத்தின் மீது கட்டுப்பாட்டினைச் செலுத்துவதற்கு இக்குழுக்கள் முயற்சிக்கின்றன.

இதையொத்த விளக்கத்தினையே கெட்டல் (Gettell) என்ற அறிஞரும் வழங்கியுள்ளார். அவரது கருத்துப்படி அரசியல் கட்சி என்பது "ஒரு அரசியல் அலகாகச் செயற்படுவதற்கு ஒன்றிணைந்த மக்கள் குழுவினைக் குறிப்பதாகும்." இத்தகைய குழுக்கள் அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கும் பொதுக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கும் வாக்காளர் சக்தியினைப் பயன்படுத்துகின்றன.

கில்கிறிஸ்ட் (Gilchrist) என்பவரது கருத்துப்படி அரசியல் கட்சி என்பது "ஒரேவிதமான அரசியல் கருத்தினை தமக்கிடையே பகிர்ந்துகொண்டுள்ள; அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு அரசியல் அலகாகச் செயற்பட விரும்புகின்ற மக்கள் குழுவினைக் குறிப்பதாகும்."

மெக்ஐவர் (MacIver) என்ற அறிஞர் அரசியல் கட்சியினை "அரசாங்கத்தினை அமைப்பதற்கான அரசியலமைப்பு வழிமுறைகளில் நம்பிக்கைகொண்ட ஒரு குழு" என வரையறுக்கின்றார்.

எட்மன்ட் பேர்க் (Edmund Burk) என்பவரது கருத்துப்படி "தமது கூட்டு முயற்சியினூடாக தேசிய நலனை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்த நபர்களின் கூட்டமே" அரசியல் கட்சியாகும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணங்களின் அடிப்படையில் நோக்கும் போது, அரசியல் கட்சியானது பின்வரும் நான்கு பிரதான பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது:

ஒழுங்கமைப்பு: ஒத்த கொள்கைகளைக் கொண்டவர்கள் அரசியல் நோக்கங்களுக்காக ஒழுங்கமைகின்ற போது அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுகின்றன. இதனால் ஒழுங்கமைப்பு அரசியல் கட்சிகளுக்கு

அவசியமானது. ஒழுங்கமைப்பு இல்லாத கட்சிகள் தெருக் கூட்டங்களுக்கு ஒப்பானதாகும்.

கொள்கைத் தத்துவங்கள்: பொது விவகாரங்களில் ஒத்த கருத்தினைக் கொண்டவர்களே அரசியல் கட்சிகளாக ஒன்றிணைகின்றனர். இவ்வகையில் கொள்கை ஒருமைப்பாடு அரசியல் கட்சிகளுக்கு இன்றியமையாத தாகின்றது. அவையன்றி கட்சிகளை குறிப்பிட்ட இலக்கு நோக்கி முன்நகர்த்திச் செல்ல முடியாது.

அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான விருப்பம்: அரசியல் கட்சிகளின் பிரதான இலக்கு அரசியல் அதிகாரத்தினூடாக அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்துவதாகும். இதற்காக கட்சிகள் வாக்காளர் சக்தியினை ஒன்றுதிரட்டுவதுடன் அதனூடாக அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கும் முயற்சிக்கின்றன.

அரசியலமைப்பு வழிமுறைகளை நாடுதல்: அரசியல் கட்சிகள் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கு அரசியலமைப்பு வழிமுறைகளை நாடுகின்றன. இதன்படி நவீன அரசுகளில் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான பிரதான ஊடகமாகத் தேர்தல்கள் பயன்படுத்தப் படுகின்றன.

அரசியல் கட்சிகள் தோற்றம்பெறுவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கனவாகும்:

சமயம்: அரசியல் கட்சிகள் தோற்றம்பெறுவதில் சமயம் செல்வாக்குமிக்க ஒரு காரணியாகச் செயற்படுகிறது. இதன்படி பல்வேறு நாடுகளில் வேறுபட்ட சமயப்பிரிவினர்கள் தத்தமது சமய மற்றும் குழு நலன் களுக்காக கட்சிகளை அமைத்துக்கொள்வதனை அவதானிக்க முடிகின்றது. இந்தியாவில் அகாளி தள், முஸ்லீம் லீக், இந்து மகா சபை போன்ற கட்சிகள் தோற்றம் பெறுவதில் சமயத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கு கிறிஸ்தவ சமயச் செல்வாக்கு காரணமாக அமைந்தது. எடுத்துக்காட்டாக ஜேர்மனியில் உள்ள கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியினைக் குறிப்பிட முடியும்.

பொருளாதாரம்: அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யும் அடுத்த முக்கிய காரணி பொருளாதாரமாகும். பொருளாதாரம்

சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதுடன் வர்க்கப் பிளவுகளுக்கும் காரணமாக அமைகின்றன. இவ்வம்சம் கட்சிகளின் உருவாக்கத்திலும் தாக்கம் செலுத்துகின்றது. சமகாலத்தில் உலகின் பல்வேறு நாடுகளில் செயற்படுகின்ற பழைமைவாதக் கட்சி (முதலாளித்துவ நலன்களைப் பாதுகாத்தல்), கம்யூனிசக் கட்சி (தொழிலாளர் நலன்களைப் பாதுகாத்தல்) என்பவற்றின் தோற்றத்திற்கு பொருளாதாரக் காரணி அடிப்படையாக அமைந்தது எனலாம்.

இனம்: இன ரீதியான தளத்தில் நின்றும் அரசியல் கட்சிகள் பல தோற்றம் பெறுகின்றன. குறிப்பாக பல்லின, கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்டுள்ள நாடுகளில் இனக் குழுக்கள் தமது நலன்களை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளை அமைத்துச் செயற்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் ஜாதிக ஹெல உறுமய, தமிழரசுக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் குறிப்பிட்ட இனங்களை மையப்படுத்தியதாகவே தோற்றம் பெற்றன. ஜேர்மனியில் ஹிட்லரின் நாசிசக் கட்சி (யூத இனத்திற்கு எதிரானது) தோற்றம் பெறுவதற்கும் இனத்துவக் காரணி அடிப்படையாக அமைந்தது.

அரசியல்: குறிப்பிட்டுக் கூறக்கூடிய அரசியல் காரணங்களுக்காகவும் அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுகின்றன. குறிப்பாக அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்காக குழுக்கள் முயற்சிக்கின்ற போது அவை கட்சிகளாக ஒழுங்கமைக்கப்படுவதனை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக இலங்கையில் பிரித்தானிய காலனித்துவ காலத்தில் செயற்பட்ட இலங்கை தேசிய காங்கிரஸ் (1919) என்ற அமைப்பு தேர்தல் அரசியலில் பங்கேற்பதற்காக 1946 இல் ஐக்கிய தேசியக் கட்சியாக மாற்றமுற்றது. அவ்வாறே இந்திய சுதந்திரத்திற்காகச் செயற்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் இந்திய சுதந்திரத்தினை அடுத்து அந்நாட்டில் செல்வாக்குமிக்க ஒரு அரசியல் கட்சியாக தொழிற்பட்டு வருகின்றது.

உளவியல்: சிலவேளைகளில் கட்சிகள் தோற்றம் பெறுவதில் உளவியல் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பெரும்பாலான மக்கள் பழைய நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என விரும்புகின்ற போது முற்போக்கான கட்சிகள் தோற்றம் பெறுகின்றன. மறுபுறத்தில் பழைய மரபுகள் சிதைந்து செல்வதனை தவிர்க்க விரும்புவோரும் கட்சிகளை ஒழுங்கமைத்துக் கொள்வதனை அவதானிக்கலாம். அவ்வாறே, தீவிர கொள்கைப் பகுதியினரும் தமது

உளவியல் விருப்பங்களுக்கு ஏற்ப கட்சிகளை அமைத்துச் செயற்படுகின்றனர்.

## 9.2 அரசியல் கட்சி முறைமை

பொதுவாக அரசியல் கட்சி முறைமையினை ஒரு கட்சி, இரு கட்சி, பல கட்சி என மூன்று வகைப்படுத்துவர். ஒரு அரசியல் முறைமையில் ஒரு கட்சி மட்டும் செல்வாக்குச் செலுத்தும் முறையினை ஒரு கட்சி முறை என அழைப்பர். ஒரு கட்சி முறை உள்ள நாடுகளில் எதிர் அரசியல் கருத்துக்கள் தடுக்கப்பட்டிருப்பதுடன் எதிர்க் கட்சிகளின் செயற்பாடுகளும் அங்கீகரிக்கப் படுவதில்லை. முன்னாள் சோவியத் யூனியனில் கம்யூனிசக் கட்சி என்ற தனிக்கட்சியே ஆளும் கட்சியாக இருந்தது. தற்போதும் மக்கள் சீனக் குடியரசில் ஒரு கட்சி ஆட்சி நடைமுறையிலுள்ளது. பாசிச இத்தாலியிலும் நாசி ஜேர்மனியிலும் ஒரு கட்சி முறையே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இரு பிரதான கட்சிகளுள் ஏதாவதொரு கட்சி தனிப்பெரும்பான்மை அரசாங்கத்தினை (Single-Party Government) அமைப்பதற்கான வாய்ப்பினை பெறக்கூடியதாக இருப்பின் அம்முறையினை இரு கட்சி முறை என அழைப்பர். இதன்பொருள் குறிப்பிட்ட நாட்டில் இரு கட்சிகள் மட்டும் செயற்படுகின்றன என்பதல்ல. மாறாக ஒரு குறிப்பிட்ட அரசியல் முறைமையில் பல கட்சிகள் காணப்படினும் இரு கட்சிகள் மட்டுமே அம்முறைமையில் கணிசமான தாக்கத்தினைச் செலுத்தும் திறனைக் கொண்டிருக்கும்.

இரு கட்சி முறையினைப் பின்பற்றுகின்ற நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளைக் குறிப்பிட முடியும். பிரித்தானியாவில் இன்று பல அரசியல் கட்சிகள் காணப்படுகின்ற போதிலும் பழைமைபேணும் கட்சி, தொழில் கட்சி ஆகிய இரு கட்சிகளே அந்நாட்டு அரசியல் முறைமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆரம்பத்தில் பழமைபேணும் கட்சி, லிபரல் கட்சி ஆகியன அந்நாட்டில் இரு கட்சி முறையினைப் பேணிவந்தன. எனினும் தற்காலத்தில் லிபரல் (தாராளவாதக்) கட்சியின் எழுச்சி பிரித்தானிய கட்சிமுறையினை பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

பல கட்சி முறை உள்ள நாடுகளில் சட்டத்துறையில் பல்வேறு கட்சிகளுக்கு ஆசனங்கள் கிடைப்பதால் அத்தகைய நாடுகளில் கூட்டணி அரசாங்கமே உருவாக்கப்படுகின்றது. இதன்போது கூட்டணிக் கட்சிகளுள் முன்னிலையில் உள்ள கட்சியின் தலைமையில் அரசாங்கம் கொண்டுசெல்லப்படுகிறது. இதனால் பல கட்சி முறையின் கீழ் அமைக்கப்படும் அரசாங்கம்

பலவீனமானதாக உள்ளது. பல கட்சி முறை தோற்றம் பெறுவதில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை செல்வாக்குச் செலுத்துகிறது. பெல்ஜியம், நெதர்லாந்து, ஸ்கன்டிநேவிய நாடுகளிலும் பல கட்சி முறை நடைமுறையிலுள்ளது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலும் பல கட்சி முறையே உள்ளது.

ஒரு குறிப்பிட்ட அரசியல் முறைமையில் பல கட்சிகள் செயற்பாட்டில் உள்ளபோதிலும் தனியொரு கட்சி மட்டும் ஆதிக்கம் செலுத்தும் திறனைக் கொண்டிருப்பின் அத்தகைய முறையினை முதன்மைக் கட்சி முறை என அழைப்பர். சமகாலத்தில் சில நாடுகளில் முதன்மைக் கட்சி முறை நடைமுறையிலிருக்கிறது.

முதன்மைக் கட்சி முறையினை பின்பற்றுகின்ற நாடுகளுக்கு எடுத்துக்காட்டுக்களாக யப்பான், தென் ஆபிரிக்கா, சுவீடன் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். குறிப்பாக யப்பானில் லிபரல் ஜனநாயக் கட்சியும் தென் ஆபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரசும் சுவீடனில் சமூக ஜனநாயகக் கட்சியும் முதன்மைக் கட்சிகளாக உள்ளன.

## 9.3 அரசியல் கட்சி முறைமையின் நன்மை - தீமைகள்

அரசியல் கட்சி முறைமையின் நன்மைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்:

மனித இயல்பினைப் பிரதிபலிக்கின்றது: மனிதர்கள் குழு, கூட்டாக வாழ்கின்றனர். இத்தன்மையினை பிரதிபலிக்கும் ஒன்றாக கட்சிகள் விளங்குகின்றன. குழு, கூட்டாகச் செயற்படுவதன் மூலமே மனிதன் தனது பொதுத்தேவைகளை சிறப்பாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். இத்தன்மையினை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக நாம் அரசியல் கட்சிகளை அடையாளப்படுத்தலாம்.

பிரதான பிரச்சினைகள் மீது மக்கள் கவனயீர்ப்பினை ஏற்படுத்துகின்றது: சமூகத்தில் பொருளாதார, அரசியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகள் சிதறிக் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகள் தொடர்பான மக்கள் கவன ஈர்ப்பினை ஏற்படுத்தும் ஒரு கருவியாக அரசியல் கட்சிகள் விளங்குகின்றன. அரசியல் கட்சிகள் மக்களோடு மக்களாக இணைந்து மக்களின் அதிகாரத்திற்காகச் செயற்படும் அமைப்புக்களாக இருப்பதனால் அவற்றின் மூலம் மக்களின் பிரதான பிரச்சினைகள் தொடர்பான கவனயீர்ப்பினை வெற்றிகரமாக உருவாக்க முடிகின்றது.

நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்கும் இடையே ஒத்துழைப்பினை ஏற்படுத்துதல்: அரசாங்கமொன்றின் முக்கிய துறைகளாக நிறைவேற்றுத்துறையும் சட்டத்துறையும் விளங்குகின்றன. இவ்விரு துறைகளுக்குமிடையேயான ஒத்துழைப்பு அரசாங்கத்தின் வெற்றிக்கு இன்றியமையாததாகும். அத்தகைய ஒத்துழைப்பினை ஏற்படுத்தும் இணைப்புப் பாலமாக அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன எனலாம்.

அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாட்டினை தடைக்குட்படுத்துகின்றது: ஜனநாயக சமூகமொன்றில் அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளை கட்டுப்படுத்தி, அரசாங்கச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் பணியினையும் அரசியல் கட்சிகள் நிறைவேற்றுகின்றன. இதன்மூலம் அரசாங்கங்களின் சர்வாதிகாரப் போக்குகள் தடைப்படுத்தப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஜனநாயக நாடுகளில் செயற்படும் எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பாக விழிப்பாகச் செயற்படுவதன் மூலம் அரசாங்கத்தினை நெறிப்படுத்த முடிகின்றது.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்றது: அரசாங்கத்திற்கும் சாதாரண மக்களுக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக அரசியல் கட்சிகள் செயற்படுவதனால் மக்கள் மத்தியில் சமூக, அரசியல் விழிப்புணர்வுகளை அரசியல் கட்சிகளால் உருவாக்க முடிகின்றது. அரசாங்க மட்டத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளை மக்கள் மயப்படுத்தி மக்களை விழிப்பூட்டும் பணியினை அரசியல் கட்சிகள் நிறைவேற்றுகின்றன. துண்டுப்பிரசுரங்களை வெளியிடுதல், ஆர்ப்பாட்டங்கள், பாதயாத்திரைகள் போன்ற வழிமுறைகள் மூலம் மக்கள் மத்தியில் சமூக, அரசியல் விழிப்புணர்வினை அரசியல் கட்சிகள் ஏற்படுத்துகின்றன.

எதிர்க் கட்சிகள் மூலம் சட்டங்களின் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன: ஜனநாயக அரசியல் முறையில் ஆளும், எதிர்க் கட்சிச் செயற்பாடுகள் முக்கியமானவையாகும். ஆளும் கட்சி அரசாங்கக் கட்சியாகவும் எதிர்க் கட்சி அரசாங்கக் கட்சியின் தீர்மானங்களை மறுபரிசீலனை செய்யும் கட்சியாகவும் விளங்குகிறது. பாராளுமன்ற ஆட்சி முறையுள்ள நாடுகளில் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படுகின்ற சட்டமூலங்களை தாமதப்படுத்தி சிறந்த சட்டங்கள் உருவாகுவதற்கு எதிர்க் கட்சிகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்குகின்றன. இதனாலேதான் பாராளுமன்ற ஜனநாயகத்தின் காவல்நாயாக எதிர்க் கட்சிகளைக் குறிப்பிடுவர்.

அரசாங்க இயக்கத்திற்கு உதவுகின்றது: ஒரு நாட்டின் அரசாங்க இயக்கத்திற்கு உதவுகின்ற ஒரு சக்தியாக அரசியல் கட்சிகள் விளங்குகின்றன. அரசாங்கம் ஒன்று அமைவதற்கும், அவ்வரசாங்கம் ஆளும் கட்சி - எதிர்க் கட்சிகளைக் கொண்டு செயற்படுவதற்கும் அரசியல் கட்சிகள் இன்றியமையாதனவாகும். பாராளுமன்ற ஆட்சி முறையுள்ள நாடுகளில் அரசியல் கட்சிகள் இன்றி அரசாங்கத்தினை அமைக்கவோ, அரசாங்கத்தினை செயற்படுத்தவோ முடியாது. இதனாலேதான் பாராளுமன்ற ஆட்சி முறையின் முன்நிபந்தனையாக அரசியல் கட்சிகள் வலியுறுத்தப்படுகின்றன. பாராளுமன்ற ஆட்சி முறையுள்ள நாடுகளில் அரசியல் கட்சிகளைக் கொண்டே தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகள், தோல்வியடைந்த கட்சிகள் என்ற பாகுபாட்டினை ஏற்படுத்த முடிவதுடன் வெற்றியடைந்த கட்சியினால் அரசாங்கத்தினை அமைக்க முடியுமானதாக உள்ளது.

மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான இணைப்புப் பாலமாக செயற்படுகின்றன: மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான இணைப்புப் பாலமாகச் செயற்படுவதும் அரசியல் கட்சிகளின் நிறைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதன்படி மக்களிடமுள்ள பிரச்சினைகளை அரசாங்க உயர்பீடங்களுக்கு கொண்டுசெல்லுதல் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளையும் தீர்மானங்களையும் மக்களிடம் கொண்டுசேர்த்தல் ஆகிய இரு வழித்தொடர்பினை அரசியல் கட்சிகள் பேணுகின்றன. இதன் மூலம் அரசியல் இயக்கத்தின் தொடர்ச்சிக்கு அரசியல் கட்சிகள் பங்காற்றுகின்றன.

சமூக மறுசீரமைப்புக்கு உதவுகின்றது: சமுக மறுசீரமைப்புக்கு உதவுகின்ற ஒரு கருவியாகவும் நாம் அரசியல் கட்சியினை அடையாளப்படுத்த முடியும். இதன்படி அரசியல் கட்சிகள் கொள்கைகளை வகுத்துச் செயற்படுவதனால் அக்கொள்கைகளின் அடிப்படையில் சமூகத்தில் முற்போக்கு மாற்றங் களைக் கொண்டுவருவதற்கும் அரசியல் கட்சிகள் உதவத்தக்கனவாகும். அநேகமான வளர்ச்சியடைந்த நாடுகளில் சமூக மறுசீரமைப்புக்கு உதவிய முக்கிய கருவிகளுள் ஒன்றாக அரசியல் கட்சிகள் செயற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

அரசியல் கல்வியினை விரிவுபடுத்துகின்றது: அரசியல் கல்வியினை விரிவுபடுத்தும் ஒரு முகவராகவும் அரசியல் கட்சிகளை நோக்கமுடியும். தேர்தல் காலங்களில் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள், விஞ்ஞாப

னங்களை வெளியிடுதல், துண்டுப்பிரசுரங்களை வெளியிடுதல், கொள்கை அறிக்கைகளை வெளிப்படுத்துதல், ஊடக மாநாடுகளை நடத்துதல் போன்ற உத்திகளின் ஊடாக சமூகத்தில் அரசியல் கல்வியினை விரிவுபடுத்துவதற்கு அரசியல் கட்சிகள் உதவுகின்றன. இதனாலேதான் அரசியல் சமூகமயமாக்கத்தின் பிரதான முகவர்களுள் ஒன்றாக அரசியல் கட்சிகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டவாறு பல்வேறு நன்மைகளை அரசியல் கட்சிகள் கொண்டுள்ள போதிலும் அவற்றின் மூலம் பல பாதகமான விளைவுகள் ஏற்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது. இந்தவகையில் அரசியல் கட்சி முறையின் பிரதான குறைபாடுகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்:

கட்சிகளின் தனிப்பட்ட பிரச்சாரங்களினால் தேசிய நலன் பாதிக்கப் படுகின்றது: அரசியல் கட்சிகள் அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்று வதற்காக வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டு செயற்படுவதுடன் தத்தமது கட்சிகளின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு தமது பிரச்சாரங்களையும் அமைத்துக்கொள்கின்றன. இதனால் தேசிய நலன்கள் பாதிப்புறச் செய்யப்படுவதுடன் தனிப்பட்ட கட்சி நலன்கள் முக்கியத்துவப்படுத்தப்பட வருகின்றன. சில வேளைகளில் அரசாங்கத்தின் கொள்கைகள் என்பது நாட்டின் நலனை முன்னிறுத்தியதாக அன்றி குறித்த கட்சியின் நலனை முன்னிறுத்தியதாக அமைவதும் உண்டு. அதேவேளை, கட்சிகள் மேற்கொள்ளும் வேறுபட்ட பிரச்சாரங்கள் மக்கள் மத்தியில் பிளவுகளைத் தூண்டுவதுடன் அவற்றின் மூலம் தேசிய நலன், தேசியப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுகின்றன.

சமூகத்தில் குழுப் பிரிவினையினை உருவாக்குகின்றது: ஜனநாயக நாடுகளில் குழுப் பல்வகைமையினை உருவாக்குவதில் அரசியல் கட்சிகள் முக்கிய பங்காற்றுகின்றன. அதாவது கட்சிகள் தத்தமது கொள்கை நலன்களுக்காக மக்களை குழுக்களாகப் பிளவுபடுத்த முயற்சிக்கின்றன. ஜனநாயகத்தில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி வேறுபாடுகளும் குழு மோதல்கள் தோற்றம்பெறுவதற்கும் ஒரு குழு இன்னொரு குழுவினை எதிரியாக நோக்குவதற்கும் வழிவிடுகின்றன. சிலவேளைகளில் நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாட்டினையும் கட்சிகள் மூலம் உருவாக்கப்படும் குழுப்பிரிவினை பாதிப்படையச் செய்கின்றது.

தனியாட்களின் தனியாட் தன்மைக்கு ஆபத்தாக அமைகின்றது: ஒவ்வொரு கட்சியும் அக்கட்சியின் கொள்கைகளுக்கும் விதிகளுக்கும் அதன்

உறுப்பினர்கள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என எதிர்பார்க்கின்றது. இதனால் கட்சிகளுக்குள் தனிமனித விருப்பங்களுக்கு முதன்மையான இடம் கிடைப்பதில்லை. சிலவேளைகளில் கட்சியின் உயர் பதவி நிலைகளில் உள்ளவர்கள் மட்டுமே கட்சியில் ஆதிக்கமிக்கவர்களாக இருப்பர். இதனால் கட்சியின் இதர அங்கத்தவர்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது. கட்சி உறுப்பினர்களின் தனியாட் தன்மைக்கு கட்சிக் கட்டுப்பாடு எப்போதும் ஆபத்தாகவே உள்ளது.

சிலவேளைகளில் அரசியல் கட்சிகள் மக்களுக்கு தவறான கல்வியினை ஊட்டுகின்றன: அரசியல் கல்வியினை விரிவுபடுத்தும் ஒரு கருவியாக அரசியல் கட்சிகள் செயற்படுகின்ற போதிலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அரசியல் கட்சிகள் வழங்குகின்ற கல்வி சாதகமானது எனக் குறிப்பிட முடியாது. சிலவேளைகளில் கட்சிகள் தவறான செய்திகளை மக்கள் முன்கொண்டு செல்ல முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் தவறான கல்வியினைப் பெறுகின்றனர். எனவேதான் அரசியல் கட்சிகள் எல்லா நிலைகளிலும் நல்ல கல்வியினை புகட்டுபவை எனக் குறிப்பிட முடியாது. எடுத்துக்காட்டாக இன்று இலங்கையில் செயற்படுகின்ற பல்வேறு அரசியல் கட்சிகள் போலியான பிரச்சாரங்கள் மூலம் மக்களை தூண்டி அதிகாரத்தினைக் கைப்பற்ற முயற்சிப்பதனைக் காணலாம்.

இலஞ்சம் மற்றும் ஊழல் பரவலுறுவதற்கும் கட்சிகள் காரணமாக அமைகின்றன: சமகாலத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் பெருகுவதற்கும் கட்சிகள் பங்காற்றுகின்றன. விசேடமாக தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. இதனால் ஊழல் கலாசாரம் சமூகத்தில் பரவலுறுவது தவிர்க்க முடியாததாகின்றது. அவ்வாறே, தேர்தல் வெற்றியின் பின்னரும் கட்சிகள் தமது சகபாடிகளுக்கு அரசியல் நியமனங்களை வழங்குதல், இதர சலுகைகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. இச்செயற்பாடுகள் சமூகத்தில் இலஞ்சம் மற்றும் ஊழலை ஊக்குவிக்கின்றன.

தேர்தல்களை இலக்காகக் கொண்ட சட்டங்கள் உருவாகக் காரணமாக அமைதல்: சகல அரசியல் கட்சிகளினதும் பிரதான இலக்கு அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதாகும். அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான ஒரு கருவியாக தேர்தல் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் ஒவ்வொரு கட்சியும் தாம் அதிகாரத்தினைப் பெற்றுக்கொண்டதும் எதிர்கால தேர்தல் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு சட்டங்களை

உருவாக்க முயற்சிக்கின்றன. இத்தகைய சட்டங்கள் சிலவேளைகளில் நாட்டு நலனுக்கு விரோதமாக அமைவதும் உண்டு.

ஆளும் கட்சியின் சர்வாதிகாரம் உருவாக வழிவகுக்கின்றது: பாராளு மன்றத்தில் ஆளும் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுகின்ற போதும், எதிர்க் கட்சிகள் முக்கியத்துவம் இழந்துசெல்கின்ற போதும் ஆளும் கட்சி சர்வாதிகாரமாகச் செயற்படும் நிலை தோன்றுகிறது. இத்தகைய நிலையில் இடம்பெறும் ஆட்சியினை ஆளும் கட்சி சர்வாதிகாரம் என அழைப்பர். உதாரணமாக இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் எதிர்க் கட்சிகள் வலுவிழந்து காணப்பட்டதுடன் ஆளும் கட்சி தன்னிச்சையாகச் செயற்பட்டதனை எம்மால் அவதானிக்க முடிந்தது.

பல கட்சி முறை உறுதியற்ற அரசாங்கத்திற்கு வழிவிடுதல்: பல கட்சி முறை உள்ள நாடுகளில் எந்தவொரு கட்சியும் அரசாங்கத்தினை அமைப்பதற்கான பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவதற்கு தவறிவிடுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கூட்டு அரசாங்கங்களே அமைக்கப்படுகின்றன. கூட்டு அரசாங்கங்கள் பலவீனமானவையாகும். அதாவது கூட்டு அரசாங்கங்களில் கூட்டணிக் கட்சிகளுக்கிடையே கொள்கை ரீதியான பிளவுகள் ஏற்படுகின்ற போது, அத்தகைய கட்சிகள் அரசாங்கத்தினை விட்டு வெளியேறுகின்றன. இதனால் குறித்த அரசாங்கம் கலைக்கப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

சமூக ரீதியாக குரோத உணர்வினை பரவலுறச் செய்கின்றது: இன, மத, மொழி ரீதியான காரணிகளின் அடிப்படையில் கட்சிகள் அமைக்கப்படுகின்ற போது, அத்தகைய கட்சிகள் சமூக ரீதியாக குரோத உணர்வுகளை வளர்க்கின்றன. குறித்த இனத்தின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக இனவாதக் கருத்துக்களை வெளியிடுவதுடன் இன குரோதங்களை வளர்க்கும் செயற்பாடுகளிலும் அவை ஈடுபடுகின்றன. எடுத்துக்காட்டாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் உள்ள பல்வேறு இனவாதக் கட்சிகளின் செயற்பாடுகள் இந்நாடுகளில் சமூக ரீதியான குரோதங்களுக்கும் இன வன்முறைகளுக்கும் வழிவிட்டுள்ளதனைக் குறிப்பிட முடியும்.

தனிநபர் சேவைகளைப் பலவீனப்படுத்துகின்றது: அரசியல் கட்சிகள் மூலம் தனிநபர் சேவை இழக்கப்படுகின்றது. அதாவது பல்வேறு துறைகளிலும் பாண்டித்தியம் உடைய, நிபுணத்துவத் திறன்களைக் கொண்டிருக்கின்ற

பலர் தேர்தல் அரசியலிலும் கட்சிச் செயற்பாடுகளிலும் ஈடுபாடுகொள்ள விருப்பம் காட்டுவதில்லை. அவ்வாறானவர்களை அரசாங்கச் செயற்பாட்டில் இணைத்துக்கொள்வதற்கு நவீன கால அரசாங்க முறையில் அவதானிக்கப்படும் அரசியல் கட்சி முறையின் வளர்ச்சி பெரும் தடையாக உள்ளது. எனவேதான் தனிநபர் சேவைகளை நாடு பெற்றுக்கொள்வதனை அரசியல் கட்சிகள் ஒருவிதத்தில் பலவீனமுறச் செய்கின்றன எனலாம்.

## பிரதான சொற்கள்

அரசியல் கட்சி, ஒரு கட்சி முறை, இரு கட்சி முறை, பல கட்சி முறை, முதன்மைக் கட்சி முறை

## பயிற்சி வினாக்கள்

அரசியல் கட்சி என்றால் என்ன என்பதனை விளக்கி, அரசியல் கட்சி முறைமையின் குறை, நிறைகளைப் பரிசீலிக்குக.

அரசியல் கட்சிகள் சமூகத்திற்கு ஆற்றும் பணிகள் குறித்து நுணுக்கக் கட்டுரையொன்று வரைக.

பல்வேறுபட்ட அரசியல் கட்சி முறைகளை இனங்கண்டு, அவற்றின் சாதக, பாதகங்களை ஆராய்க.

## உசாத்துணைகள்


Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

# அத்தியாயம் - 10

# சிவில் சமூகம்

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 10.1 | சிவில் சமூகம் | 130 |
| 10.2 | சிவில் சமூகத்தின் பண்புகள் | 136 |
| 10.3 | சிவில் சமூகத்தின் பணிகள் | 137 |


## அத்தியாய சுருக்கம்

நவீன அரசியல் ஆய்வுகளில் சிவில் சமூகம் குறித்து அதிக கவனம்செலுத்தப் படுகின்றது. சிவில் சமூகம் என்பது இலாபநோக்கற்ற, சுயாதீன சமூக சங்கங்களின் கூட்டுமொத்தத்தினைக் குறிக்கும். இது அதிகாரப் பலப்பிரயோகம் இன்றி கூட்டுணர்வின் அடிப்படையில் செயற்படுகின்ற ஒரு சமூகமாகும். தன்னார்வ அடிப்படையில் செயற்படும் சமூக சங்கங்களை ஊடருத்துச் செல்லும் பொதுவான நலன்களும் விழுமியங்களும் சிவில் சமூகச் செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றன. சிவில் சமூகம் அரசினதும் தனியார்துறையினதும் அதிகாரப்பிடியில் அன்றி, பொதுச் சமூக வெளியில் செயற்படும் சுயாதீன அமைப்பாக உள்ளது. தாம் அன்றாடம் எதிர்கொள்ளும் சமூக-அரசியல் நெருக்கடிகளை ஜனநாயக வழியில் கூட்டாக எதிர்கொள்வதற்கும், அது தொடர்பான சமூகப் பிரக்ஞையினை பரவுலுறச் செய்வதற்கும் சிவில் சமூகம் முயற்சிக்கின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

நவீன அரசியல் கோட்பாடுகளில் அதிகம் விவாதிக்கப்பட்டுவரும் சிவில் சமூகம், அதன் அடிப்படைப் பண்புகள், சிவில் சமூகத்தின் பணிகள் குறித்த விடயங்களை தெளிவுபடுத்துவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தினை திறம்படக் கற்பதன் மூலம் சிவில் சமூகம் குறித்த அடிப்படை அறிவினை மாணவர்கள் பெற்றுக்கொள்வதுடன் சிவில் சமூகச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தினையும் இவ்வத்தியாயம் ஏற்படுத்தும்.

## 10.1 சிவில் சமூகம்

சிவில் சமூகம் என்பது குடும்பம், சந்தைச் சக்திகள், அரசு ஆகிய அதிகாரப் பரப்பிற்கு அப்பால் செயற்படும் பொதுச் சமூக வெளியினைக் (space) குறிக்கும்.

சிவில் சமூகப் பரப்பினுள் அரசசார்பற்ற அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், சமூக சங்கங்கள், வலைத்தளக் குழுக்கள், சமூக மட்ட அமைப்புக்கள் போன்ற தன்னார்வ அடிப்படையில் செயற்படும் சங்கங்கள் முக்கியமானவை.

சிவில் சமூக அமைப்புக்கள் அவற்றின் அளவிலும் கட்டமைப்பிலும் தொழிற்பாட்டிலும் செயற்பாட்டுப் பரப்பிலும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன.

ஆனபோதிலும் சமூகப் பொது வெளியில் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் கூட்டு நலன்களுக்காக ஒன்றித்து செயற்படும் அமைப்புக்களாக சிவில் சமூக அமைப்புக்கள் காணப்படுகின்றன.

அரசியல் ஆய்வுகளில் சிவில் சமூகம் குறித்த கருத்தாடல் நீண்டகாலமாக இடம்பெற்றுவந்துள்ளபோதிலும் 1980களுக்குப் பின்னரே இவ்வெண்ணக்கரு பிரபல்யமடைந்தது.

சிவில் சமூகம் குறித்த கருத்தாக்கத்தில் ஹெகல், கார்ல் மார்க்ஸ், அந்தோனியோ கிராம்சி, அடம் ஸ்மித், அலக்சிஸ் டீ டொக்குவில் உள்ளிட்ட நவீனகால அறிஞர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

சிவில் சமூகம் என்பது, மக்களின் பொது நல்வாழ்விற்காக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட மற்றும் கூட்டு முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது. இதனால் சிவில் சமூகம் பொதுப் பரப்பில் செயற்படும் சமூகமொன்றாகக் கருதப்படுகின்றது.

ஒகஸ்டின் என்ற அறிஞர் குறிப்பிடுவதன்படி, சிவில் சமூகம் என்பது சமூக நலன்களுக்காகவும் பிரஜைகளின் உரிமைகளுக்காகவும் ஒன்றிணைந்த மனிதர்களை அல்லது குழுக்களைக் குறிக்கும்.

நவ தாராளவாத அறிஞர்கள் சிவில் சமூகத்தினை அரசிற்கு மாற்றீடான ஒன்றாக நோக்குகின்றனர். மிகவும் உயிர்ப்புள்ள சிவில் சமூகச் செயற்பாடு குடிமக்களின் நல்வாழ்விற்கு உறுதுணையாக அமைவதனை நவதாராளவாதம் எடுத்துக்காட்டுகின்றது.

மைக்கல் எட்வெர்ட்ஸ் என்ற அறிஞர், சிவில் சமூகம் என்பது வியாபாரம் தவிர்ந்த குடும்பத்திற்கும் அரசிற்கும் இடையே உள்ள சகல அமைப்புக்களையும் சங்கங்களையும் உள்ளடக்கியது என்கிறார்.

கொஹெென் என்பவர், சிவில் சமூகம் என்பது அரசியல் செயன்முறையில் பங்கேற்பதற்கான குடிமை உணர்வினையும் கூட்டு நலன்களையும் வெளிப்படுத்தும் குழுக்களைக் குறிக்கும் என்கிறார்.

வொஷிங்டனில் இயங்கும் கெட்டோ நிறுவனம், சிவில் சமூகம் என்பது சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தினையும் தனிமனித சுதந்திரத்தினையும் விரிபுபடுத்துவதன் மூலம் சமூகத்தில் அரசியலின் முக்கியத்துவத்தினை குறைக்க முயற்சிக்கிறது என்கிறார்.

ஐரோப்பிய யூனியன், சிவில் சமூகத்தினை வரையறுக்கும்போது சிவில் சமூகம் என்பது அரசுடன் இணைக்கப்படாததும் அரசினால் முகாமை செய்யப்படாததுமான தனிமனிதர்களினாலும் குழுக்களினாலும் மேற்கொள் ளப்படும் சகலவிதமான சமூகச் செயற்பாடுகளையும் குறிக்கும் என்கிறது.

ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி, பொதுவான நலன்கள், இலக்குகள், விழுமியங்கள், பாரம்பரியங்களின் அடிப்படையில் ஒன்றுபட்டு, ஒழுங்கமைந்து, பிரஜைகளின் நலன்களும் அபிலாசைகளும் தன்னார்வ அடிப்படையில் வெளிப் படுத்தப்படுவதும் கூட்டுச் செயற்பாடுகளுக்கான பிரஜைகளின் அணிதிரள்வும் சிவில் சமூகமாகும் என்று குறிப்பிடுகின்றது.

உலக வங்கி குறிப்பிடுவதன்படி, சிவில் சமூகம் என்பது பொது வாழ்வுடன் தொடர்புபட்டதும் தமது அங்கத்தவர்களின் அல்லது ஏனையவர்களின் நலன்களையும் விழுமியங்களையும் வெளிப்படுத்துவதுமான சகல அரசசார்பற்ற மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புக்களைக் குறிக்கும்.

அமெரிக்க அரசுகளுக்கான அபிவிருத்தி வங்கி, அரசசார்பற்ற அமைப்புக்கள், சமூகமட்ட அமைப்புக்கள், இலாப நோக்கற்ற அமைப்புக்கள், தொழில்சார் அமைப்புக்கள், சமய நிறுவனங்கள் போன்ற அமைப்புக்களை உள்ளடக்கியதே சிவில் சமூகம் என வரையறை செய்கின்றது.

இலண்டன் பொருளியல் பாடசாலையின் சிவில் சமூகத்திற்கான நிலையம் குறிப்பிடுவதன்படி, சிவில் சமூகம் என்பது பரஸ்பர நலன்கள், நோக்கங்கள், விழுமியங்களைச் சுற்றியுள்ள பலப்பிரயோகமற்ற ஒரு கூட்டுச்செயற்பாட்டு அம்சமாகும்.

சிவில் சமூகமானது பல தன்மையான பரப்புக்கள், செயற்பாட்டாளர்கள், நிறுவன அமைப்புக்களைக் கொண்டதாகும். கோட்பாட்டளவில் சிவில் சமூகம் அரசு, சந்தைச் சக்திகள், குடும்பம் என்பவற்றிலிருந்து தனித்துவமானதாகும். எனினும் நடைமுறையில் இம்மூன்றுக்குமிடையே தெளிவான வேறுபாட்டினை அடையாளம் காண்பது சிரமமனது.

சிவில் சமூகம் ஒழுக்க, கலை, கலாசார, அரசியல், விஞ்ஞான, சமயம் உள்ளிட்ட நலன்களுக்காக தொண்டு அடிப்படையில் இணைந்த பிரஜைகளினதும் குழுக்களினதும் கூட்டிணைப்பாக உள்ளது.

சிவில் சமூகமானது கூட்டுச் செயற்பாடு, சமூக ஐக்கியம், சமூக நல்வாழ்வு, குடிமை உணர்வு, அரசியல் பங்கேற்பு முதலிய அம்சங்களுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாகும்.

சிவில் சமூகம் பிரஜைகளை ஒருவரோடு ஒருவர் தொடர்புபடுத்துவதன் ஊடாக அவர்களது சுதந்திரமான செயற்பாட்டிற்கு இடமளித்து, சமூக மூலதனத்தினைப் பலப்படுத்துகின்றது.

சிவில் சமூகம் சிதறிக்கிடக்கும் சுயாதீன அமைப்புக்களை ஒன்றினைத்து, அவற்றுக்கிடையே வலையமைப்புக்களை உருவாக்கி, பிரஜைகளுக்கிடையே கூட்டு அடையாளத்தினை விருத்திசெய்கின்றது.

சிவில் சமூகம் கூட்டு நலன்களுக்காகச் செயற்படுவதுடன் மக்களிடையே குடிமை உணர்வினை வளர்ப்பதற்கும் பங்களிப்புச் செய்கின்றது. இதன் மூலம் பொறுப்புள்ள பிரஜைகளை உருவாக்குவதற்கும் சிவில் சமூகம் முயற்சிக்கின்றது.

ஹொப்ஸ், லொக், ரூசோ ஆகிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்கள் இயற்கை நிலையிலிருந்து வேறுபட்டதாக சிவில் சமூக நிலையினை அடையாளப்படுத்துவதிலிருந்து சிவில் சமூகம் குறித்த கருத்தாக்கத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர்.

ஜோன் லொக் தனது கோட்பாட்டில் சிவில் சமூகத்திற்கு முன்னர் இருந்த இயற்கை நிலையில் பொது நீதி இருக்கவில்லை, இயற்கை நிலையில் தனிநபர் நியாயமற்றவாறு நடத்தப்பட்டனர் என்கிறார். இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கு மனிதர்கள் சமூக ஒப்பந்தத்தினை செய்து சிவில் சமூகத்தினைத் தாபித்ததாக அவர் குறிப்பிடுகின்றார். லொக்கினைப் பொறுத்தவரையில் சிவில் சமூகம் அரசின் அரசியல் பரப்பிலிருந்து வேறுபட்ட ஒன்று அல்ல.

18ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டதுடன் சிவில் சமூகம் குறித்த கருத்தாக்கம் பொருளாதாரம், ஜனநாயகம் உள்ளிட்ட அம்சங்களுடன் தொடர்புபடுத்தி நோக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் அரசியல் பொருளாதார சிந்தனைகள் வளர்ச்சியுற ஆரம்பித்தன. இதனால் குடிமைவாதத்தின் அடிப்படையாக வர்த்தகம் கருதப்பட்டது. குடிமைவாதம் என்பது தனிமனிதனை சந்தைச் சக்திகளுடன் இணைப்பது என்று பொருள்கொள்ளப்பட்டது. சில அறிவொளிக்கால சிந்தனையாளர்கள் சிவில் சமூகத்தினை நவீன அரசியல் பொருளாதார கருத்தாக்கம் ஒன்றாகக் கருதினர்.

அலக்சிஸ் டீ டொக்குவில் தனிமனித சுதந்திரத்திற்கு ஆதரவாகவும் அரச அடக்குமுறைக்கு எதிராகவும் பல்வேறு பொதுச் சங்கங்கள் செயற்படுவதனை ஆதரித்ததிலிருந்து சிவில் சமூகச் சிந்தனை வளர்ச்சிக்குப் பங்களிப்பு நல்கினார்.

ஹெகல் சிவில் சமூகம் என்பது தனிமனிதர்கள் சுதந்திரமாகவும் சமத்துவ மாகவும் தமது வேலைகளைச் செய்வதற்கும் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கும் இடமளிக்கும் ஒரு பொருளாதார முறை என்று கூறுகின்றார். தனிமனிதர்கள் தமது நலன்களை முன்நிறுத்திச் செயற்படும் ஒரு அகங்காரப் பொது வெளி ஒன்றாக சிவில் சமூகத்தினை ஹெகல் வரையறுக்கின்றார்.

கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவ சமூகத்திற்கு மாற்றீடான ஒன்றாக சிவில் சமூகம் என்ற பதத்தினைப் பயன்படுத்தினார். நவ மார்க்சியவாதியான அந்தோனியோ கிராம்சி அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையில் நிலவும் சமூக கலாச்சார வெளியாக சிவில் சமூகத்தினை வரையறுக்கின்றார்.

சிவில் சமூகம் தொடர்பான விடயத்தில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் முக்கியமானவர்கள். சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் என்பது பொதுவாகப் பகிர்ந்துகொள்ளும் நலன்கள், நோக்கங்கள், ஒத்துப்போகக்கூடிய விழுமியங்கள் என்பவற்றுக்கு அமைவாக, வெளிப்படையான பங்கேற்பு மற்றும் செயல் நடவடிக்கைகளில் தன்னார்வ அடிப்படையில் செயற்பட்டுவரும் தனிநபர்கள் மற்றும் குழுக்களைக் குறிக்கும்.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மக்களின் நலன்கள் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்துவதுடன் சமூகங்கள் தமது அபிலாசைகளை எடுத்துக்கூறுவதற்கு அவர்களுக்கு உதவிவருகின்றனர். அவர்கள் தந்திரோ பாயங்களை வடிவமைப்பதுடன், கொள்கை மற்றும் சட்டங்கள் என்பவற்றின் மீது செல்வாக்குச்செலுத்துகின்றனர். ஆட்சி நிறுவனங்கள் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலையை அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சமூகங்களின் கருத்துக்களைச் சேகரித்து, நெறிப்படுத்தியும் வருகின்றார்கள். பன்முக முனைகளில் அபாயத்தை எதிர்கொண்டு வருவதுடன், மிகவும் பலவீனமான நிலையில் வாழ்ந்து வரும் மக்களுக்கும் அவர்கள் சேவைகளை வழங்கி வருகின்றனர்.

சிவில் சமூகம் என்பது அரசாங்கத்திற்கும் அதனை எதிர்க்கும் அரசியல் அமைப்புக்களுக்குமிடையிலான இடைத்தரகராக அன்றி, மக்களின் நலன்களுக்காக மக்களின் பக்கம் நின்று செயற்படும் ஒரு சமூகமாகும். அதற்காக எல்லா சந்தர்ப்பங்களிலும் அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படுகின்ற அமைப்புக்களை எல்லாம் சிவில் சமூகம் என்று கருதிவிடமுடியாது.

ஜனநாயகமும் சிவில் சமூகமும் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளது. தாராள ஜனநாயகவாதிகளின் கருத்துப்படி ஜனநாயகத் தத்துவங்களைப் பாதுகாப்பதற்கான உயிர் நாடியாக சிவில் சமூகம் விளங்குகின்றது. இதனால் தாராளவாதிகள் சமூகத்தில் அரச தலையீடுகள் இல்லாத தனிமனித மற்றும் சமூக ஊடாட்டத்தினை ஏற்படுத்துவதற்கு விரும்புகின்றனர்.

சிவில் சமூகத்தின் குரலைப் பலப்படுத்துவதற்கும் ஜனநாயகவாதிகள் அழுத்தம் தருகின்றனர். சிவில் சமூகத்தின் மூலம் பொது நல்வாழ்வினை ஏற்படுத்து வதற்கான மக்கள் சக்தி உருவாக்கப்படுவதனையும் அவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

சிவில் சமூகத்திற்கும் ஜனநாயகத்திற்குமிடையிலான தொடர்பினை விளக்கியவர்களுள் அலக்சிஸ் டீ டொக்குவில் குறிப்பிடத்தக்க ஒருவர். இவர் பலமான சிவில் சமூகத்தினைக் கொண்ட நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்கா ஒரு சிறந்த உதாரணம் எனக் குறிப்பிடுவதுடன் ஐக்கிய அமெரிக்காவில் ஜனநாயகம் வெற்றியடைவதற்கு சிவில் சமூகமே பிரதான காரணம் என்பதனையும் எடுத்துக்காட்டுகிறார்.

டொக்குவிலின் சிவில் சமூகம் குறித்த கருத்துக்களின் அடிப்படையில் பின்நாட்களில் ரொபர்ட் பட்னம் (Robert Putnam) போன்ற அறிஞர்கள் சமூக மூலதனம் குறித்த கருத்தாடலினை விருத்தி செய்தனர்.

சமகாலத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் அரசியலில் சிவில் சமூக வகிபாகம் அதிகரித்து வருகிறது. இந்நாடுகளில் மக்கள் மத்தியில் குடிமை உணர்வினை உருவாக்கி, ஜனநாயகமயமாக்கச் செயன்முறையினை பலப்படுத்துவதற்கும் சிவில் சமூகம் பயன்படுத்தப்படுகிறது.

அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளில் பலமான சிவில் சமூகம் இல்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது. இதனாலேதான் இந்நாடுகளில் ஜனநாயகம் கேள்விக்குள்ளாகியுள்ளது எனலாம்.

சமகால அரசியல் ஆய்வுகளில் சிவில் சமூகம் பற்றிய கோட்பாடுகள் மேலும் விருத்தியடைந்துள்ளன. தற்காலத்தில் பூகோள சிவில் சமூகம் (Global Civil Society) என்ற புதிய கருத்தாடலும் வளர்ச்சியுற்றுவருகின்றது.

முடிவாகக் கூறுவதாயின் சிவில் சமூகம் என்பது பல்வேறுபட்ட நலன்கள், நோக்கங்கள், விழுமியங்களை உள்ளடக்கிய பலப்பிரயோகமற்ற கூட்டுச் செயற்பாடுகளுக்கான ஒரு அரங்கமாக இருப்பதுடன் தன்னார்வ அடிப்படையிலான சிவில் மற்றும் சமூக ஒழுங்கமைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

சிவில் சமூகப் பரப்பினுள் உள்ளடக்கத்தக்க முக்கிய செயற்பாட்டாளர்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடமுடியும்.

அரசசார்பற்ற அமைப்புக்கள், சமூக மட்ட அமைப்புக்கள், இலாப நோக்கமற்ற அமைப்புக்கள்

மனித உரிமை நிறுவனங்கள் (அரசுசாரா அமைப்புக்கள், சங்கங்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் குழுக்கள்)

நிகழ்நிலை குழுக்களும் செயற்பாடுகளும் (சமூக ஊடகங்களும் ஏனைய நிகழ்நிலை ஊடகங்களும்)

கூட்டு அடையாளத்தினையும் கூட்டுச் செயற்பாடுகளையும் கொண்ட சமூக அமைப்புக்கள்

சமயத் தலைவர்கள், நம்பிக்கைச் சமூகங்கள், நம்பிக்கை சார்ந்த குழுக்கள்

தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற்சங்கங்களும் தொழிலாளர் அமைப்புக்களும்

சமூக நலன்களுக்காக புத்தாக்கச் சிந்தனையுடன் செயற்படும் சமூக முயற்சியாண்மையாளர்கள்

விழிம்பு நிலை மட்டங்களில் செயற்பாடும் சங்கங்களும் அவற்றின் செயற்பாடுகளும்

சமூக இயக்கங்கள் (சமாதான இயக்கங்கள், மாணவர் இயக்கங்கள், ஜனநாயகத்திற்கு ஆதரவான இயக்கங்கள்)

ஜனநாயக முறையியல் செயற்படும் கூட்டுறவு அமைப்புக்களும் அவற்றின் செயற்பாடுகளும்.

இளைஞர் கழகங்கள், மகளீர் அமைப்புக்கள், அவற்றின் கூட்டு நலன்சார் செயற்பாடுகள்

சன சமூகக் குழுக்கள் (பழங்குடி மக்கள், சிறுபான்மையினர், கிராமிய சமூகங்கள்)

சுதந்திர வானொலி, சுதந்திர தொலைக்காட்சிச் செயற்பாடுகள் மற்றும் அச்சு - இலத்திரனிய ஊடகங்கள்

கல்வியியலாளர்கள், சுயாதீன ஆய்வு நிலையங்கள், தொழில்சார் அமைப்புக்கள்

## 10.2 சிவில் சமூகத்தின் பண்புகள்

சிவில் சமூகம் பரந்ததும் பலதரப்பட்ட நபர்களையும் அமைப்புக்களையும் உள்ளடக்கியது. அது ஒடுக்கப்பட்டவர்களின் நலன்களுக்காக உழைக்கின்றது. கொள்கை விதப்புரைகளை உருவாக்கி சமூகத்தின் பொது நலன்களுக்காக உழைக்கின்றது. இத்தகைய சிவில் சமூகத்தின் பிரதான பண்புகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்:

சிவில் சமூகமானது அரசசார்பற்ற அமைப்புக்கள், இலாப நோக்கற்ற அமைப்புக்கள், தன்னார்வ அமைப்புக்கள் போன்ற மக்கள் அமைப்புக்களைக் கொண்டதாகும்.

சிவில் சமூகம் ஒழுங்கமைந்த முறையில் சுயாதீனமாகச் செயற்படும் இயல்பினை வெளிப்படுத்துகின்றது.

சிவில் சமூகம் பொது நன்மைக்கான கூட்டுச் செயற்பாட்டினை உள்ளடக்கியது.

சிவில் சமூகம் அதிகார அல்லது பலப்பிரயோகமற்ற சுயாதீன அமைப்பாக உள்ளது.

சிவில் சமூகம் அரசு மற்றும் சமூகம் ஆகிய இரு அம்சங்களிலிருந்தும் வேறுபட்டதாகும்.

சிவில் சமூகம் அரசு மற்றும் சமூகத்திலிருந்து வேறுபட்டதாயினும் அவற்றுக்கு எதிரான அமைப்பல்ல.

சிவில் சமூகமானது பல்வேறு சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களைக் கொண்டு கட்டமைக்கப்படுகிறது.

சிவில் சமூகம் ஜனநாயகத்தினை பலப்படுத்துவதற்கான ஒரு தளமாக உள்ளது.

சிவில் சமூகம் இருப்புக் கொள்ளும் எல்லையினை தெளிவாக வரையறுத்துக் கூறுவது கடினமானது.

சிவில் சமூகம் தெரிவுச் சுதந்திரத்தினையுடையது. அதன் செயற்பாடுகள் தொடர்பாக தீர்மானிக்கும் இயலுமை அதற்குள்ளது.

சிவில் சமூகம் நிருவாக ஒழுங்குகள் மற்றும் இறுக்கமான கட்டுப்பாட்டு ஒழுங்குகளிலிருந்து விடுபட்டது.

சிவில் சமூகம் குடிமக்களின் திறந்த மற்றும் தன்னார்வப் பங்கேற்பினை அதிகரிக்கச் செய்கின்றது.

## 10.3 சிவில் சமூகத்தின் பணிகள்

சிவில் சமூகம் ஆற்றுகின்ற முக்கிய பணிகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்:

சிவில் சமூகம் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலினை அதிகரிக்கச் செய்கிறது.

சிவில் சமூகம் செயற்பாடு அரசாங்கத்தின் செயற்றிறனை அதிகரிக்கச் செய்கிறது.

சிவில் சமூகம் முக்கிய அரசியல் பிரச்சினைகள் பற்றி மக்களுக்கு தெளிவூட்டுகிறது.

சிவில் சமூகம் சமூகத்தில் நிலவுகின்ற பல்வேறு பிணக்குகளைத் தீர்ப்பதற்கு உதவுகிறது.

உயிர்ப்புள்ள சிவில் சமூகம் குடிமக்களின் அரசியல் பங்கேற்பினை தூண்டுகிறது.

சிவில் சமூகம் குடிமக்கள் மத்தியில் ஜனநாயக உளப்பாங்கினை வளர்க்கிறது.

சிவில் சமூகம் குடிமக்களின் நலன்களைப் பூர்த்தி செய்வதற்கான மாற்றீட்டு வழிமுறைகளை உருவாக்குகிறது.

சிவில் சமூகச் செயற்பாடுகள் எதிர்கால அரசியல் தலைவர்களை பயிற்றுவிக்கிறது.

சிவில் சமூகம் தகவல்களை பிரஜைகள் மத்தியில் பரவலுறச் செய்து மக்களை விழிப்பூட்டுகிறது.

சிவில் சமூகம் ஜனநாயக அரசியல் முறையினைப் பலப்படுத்துவதற்கு உதவுகிறது.

சிவில் சமூகம் அரசுகளின் சமூக, பொருளாதார, அரசியல் மேம்பாட்டிற்கு உதவுகிறது.

சிவில் சமூகம் சமூகத்தில் நலிவடைந்த பகுதியினருக்கு உதவுவதன் மூலம் சமூக நியாயத்தினை ஏற்படுத்துகிறது.

சிவில் சமூகம் ஜனநாயகத்தினைப் பாதுகாப்பதற்கான ஒரு கருவியாக உள்ளது.

சிவில் சமூகம் அரசினதும் சந்தைச் சக்திகளினதும் தலையீடுகளிருந்து மனித சுதந்திரத்தினைப் பாதுகாக்கிறது.

**பிரதான சொற்கள்**

*சிவில் சமூகம், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள்*

**பயிற்சி வினாக்கள்**

*ஜனநாயக அரசொன்றின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு சிவில் சமூகத்தின் அவசியம் குறித்துக் கலந்துரையாடுக.*

*சிவில் சமூக எண்ணக்கருவினை வரையறைசெய்து, சிவில் சமூகத்தின் தொழிற்பாடுகளைத் தெளிவுபடுத்துக.*

*சிவில் சமூகத்தின் அடிப்படைப் பண்புகளை அடையாளம்கண்டு, சிவில் சமூகமொன்றின் முக்கிய செயற்பாடுகளை ஆராய்க.*

*சிவில் சமூகச் செயற்பாட்டிற்கும் ஜனநாயகத்திற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்துப் பரிசீலிக்குக.*

*சிவில் சமூகத்துடன் தொடர்புபடுத்தி பின்வரும் தலைப்புக்களைப் பரிசீலிக்குக.*

*(அ) சிவில் சமூக எண்ணக்கரு*
*(ஆ) சிவில் சமூகத்தின் பண்புகள்*
*(இ) சிவில் சமூகத்தின் பணிகள்*

**உசாத்துணைகள்**

Heywood, A. (2002). ***Key concept in politics***. London: Macmillan Publication.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

Kapur, A.C. (1996). ***Principles of political science***. New Delhi: Chand & Company.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

## மேலதிக வாசிப்புக்கான நூல்கள்


Agarwal, R.C. (1999). ***Political theory: Principles of political science***. New Delhi: S.Chand and Company Ltd.

Heywood, A. (1994). ***Political ideas and concepts: An introduction***. New Jersey: St. Martin Press.

Heywood, A. (2002). ***Key concept in politics***. London: Macmillan Publication.

Heywood, A. (2012). ***Political ideologies: An introduction***. New York: Palgrave Macmillan.

Heywood, A. (2013). ***Politics***. New York: Palgrave Macmillan.

Kapur, A.C. (1996). ***Principles of political science***. New Delhi: Chand & Company.

MacIver, (1990). ***The modern state***. New Jersey: Prentice Hall.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

Mahajan, V.D. (2009). ***Political theory: Principles of political science***. New Delhi: S. Chand & Company.

Saha, D. (2004). ***Civil society and modern politics***. India: Global Vision Publication.